www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

விடியும் வரை.....

போனதொரு பத்தாண்டு ! போக்கறுந்த நாள்முதலாய்
ஆனதென்றோர் காரியமும் ஆகாமல் - போனபின்னும்
ஆகுமென்று சொல்லுகிறார் ஆகட்டும் என்றிருப்போம்
போகுமெங்கள் காலப்பொழுது

-ஈழமோகம்

இதழ் 126 ஜுலை 17- ஜுலை 30, 1997 விலை 10.00 ரூபா

# இறக்கக்கண்டி முஸ்லீம்கள் கடத்தல்: சில பின்னணித் தகவல்கள்!

# இலங்கை -இந்திய ஒப்பந்தம்: வயது பத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




**சரிநிகர்**

இரு வாரங்களுக்கு ஒரு முறை

"சரிநிகர் சமானமாக வாழ்மிந்த நாட்டிலே" -பாரதி

**ஆசிரியர் குழு**

பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி. செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

**வடிவமைப்பு**

ஏ.எம்.றஷ்மி

**வெளியிடுபவர்**

ச. பாலகிருஷ்ணன்
18/2, அலோ சாலை,
கொழும்பு - 03.

**அச்சுப்பதிவு**

நவமக அச்சகம்
334, காலி வீதி,
இரத்மலானை.

**ஆண்டு சந்தா விபரம்**

இலங்கை ரூபா 300/=

வெளிநாடு US $ 50
(தபாற்செலவு உட்பட)
காசுக்கட்டளை/ காசோலை யாவும்
MIRJE என்ற பெயருக்கு எழுதப்படல் வேண்டும்.

எல்லாத்தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
சரிநிகர்
4, ஜயரத்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு - 05.

தொலைபேசி: 593615, 584380
தொலை மடல் : 594229

முன்னைய பிரதிகள் வேண்டுவோர் எழுதுக. கைவசம் உள்ள பிரதிகள் அனுப்பிவைக்கப்படும்.

பிரசுரத்துக்கென அனுப்பப்படும் படைப்புகள் திருப்பி அனுப்பப்பட மாட்டாது.

படைப்புக்களை தாளின் ஒரு பக்கத்தில் தட்டச்சுச் செய்தோ அல்லது தெளிவான கையெழுத்தில் பிரதி செய்தோ அனுப்பி வைக்கவும்.


# சமயப்பணியா காடைத்தனமா?

அண்மைக்காலமாக மூதூர்ப் பிரதேசத்திலுள்ள படையினருக்கும் பொலிசாருக்கும் புதிதாக மதாபிமானம் பிறந்த கதை இதோ.

மூதூரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மையத்தளத்தில் பழமை வாய்ந்த பௌத்த விகாரை யொன்றுள்ளது. மிகவும் குறைந்த எண்ணிக்கையில் இங்கு வாழும் பௌத்த மக்களின் ஆத்மீகக் கட்டமைப்பைப் பேணுவதாகச் சொல்லப்படும் இந்த விகாரை, இலங்கையின் இனப்பிரச்சினை வட, கிழக்குப் பகுதிகளில் தீவிரமாகிருந்த காலத்தில் அதன் முக்கியத்துவத்தை ஏறத்தாழ முழுமையாக இழந்திருந்தது. தொடர்ந்து மூதூர் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் அவர்களின் கவனம் மீண்டும் விகாரையின்பால் திரும்பியுள்ளது. புனர்நிர்மாண வேலைகள் துரித கதியில் நடந்தேறி முற்றுப்பெறும் தருவாயில் உள்ளன. அது அவர்களின் உரிமை மாத்திரமல்ல; கடமையும் கூட என்று வைத்துக் கொள்வோம். ஆனால் இவ்விடயத்தில் படையினரதும், பொலிசாரினதும் பொதுமக்களுடனான விதிமுறான நடைமுறைகளே மிகுந்த ஆட்சேபத்துக்குரியவை. அடையப்போகும் இலட்சியம் மாத்திரமல்ல, அதனை அடைந்து கொள்ளும் வழிமுறைகளும் தூய்மையானவையாக இருக்க வேண்டுமெனும் விதிமுறையை மறந்து மேற்கொள்ளப்படும் நடைமுறைகள் கண்டனத்துக்கு மாத்திரமல்ல; தண்டனைக்குமுரியவை.

இனப்பிரச்சினை காரணமாக தொழிற்துறைகள் அனைத்தாலும் முடக்கப்பட்டு நாளாந்த வாழ்வின் சந்தோச இருப்புக்கே உத்தரவாதமில்லாமல் படுமோசமான பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கின்ற இப்பகுதி மக்களின் அடிமடியில் கை வைக்கின்ற கைங்கரியத்தைப் படையினரும், பொலிசாரும் அண்மைக்காலமாக அரங்கேற்றி வருகின்றார்கள். பௌத்த தர்மத்தின் வளர்ச்சிக்காகவும், அபிவிருத்திக்காகவும் அதன் பொருளாதார செலவீனங்களைச் சீர்செய்வதற்காகவும், அபிவிருத்தி நிதி என்ற பெயரில் நடக்கும் பலாத்கார டிக்கெட் விற்பனையையும், இயந்திரங்கள், வாகனங்களின் மீதான பலப்பிரயோகத்தையும் எந்த நெறிக்குள் அடககுவது...?

அரசாங்க ஊழியர்களின் சம்பளத் தொகையிலிருந்து டிக்கெட்டுக்கான பெறுமானம் கழிக்கப்பட்டுள்ளது. மதத்தின் பெயரால் நடைபெறும் மௌட்டீகங்களையும், இழிவழக்குகளையும் இல்லாதொழிப்பதே அறங்களைப் போதிக்கும் மதங்களின் மானசீக ரீதியான பணிகளாகும். சமயப்பணி என்ற போர்வையில் காடைத்தனங்களை கட்டவிழ்த்துவிடுவதையும், மதங்களின் தூய போதனைக்கு மாசு கற்பிப்பதையும் எந்த ஆத்திகனும் அங்கீகரிக்க மாட்டான். பௌத்த தர்மத்தையும், அதன் தனித்துவத்தையும், பாதுகாப்பையும் பேணும் உத்தரவாதம் இலங்கையின் தற்போதைய அரசியலமைப்பின் முக்கிய அம்சமாகும். தனியான அமைச்சு, உத்தியோகபூர்வ, உத்தியோகபூர்வமற்ற சங்கங்கள், அமைப்புகள் போன்றவற்றின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் வளர்ந்து வரும் பௌத்த தர்மத்தின் "காவலர்கள்" இவ்விடயத்தை மீள் பரிசீலனை செய்ய வேண்டியது தவிர்க்க முடியாத அவசியத் தேவையாகும்.

உண்மையில் ஒரு தனிமனிதனின் உளவிருப்போடு கூடிய தியாகத்தை ஏற்றுக்கொள்வதே எந்த மதத்தினதும் நெறியாகும். இப்படியிருக்க, 'யார் தாலியறுத்தாலும் சீசை சிறந்தாற் சரி' என்ற சிந்தனை எந்தளவு தூரம் புத்திசாலித்தனமானது...? மதத்தின் பெயரால் அறிவியலுக்கு இழைக்கப்பட்ட மத்திய கால ஐரோப்பாவின் கொடுமைகளை இந்தக் கலியுகத்திலும் சிறிய மாற்றத்தோடு காணக் கொடுத்து வைத்தவர்கள் இப்பகுதி மக்கள்.

தமிழ் பேசும் பாரம்பரிய பிரதேசங்களுள் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் அவர்களின் உள்ளங்களில் விழுப்புண்களாக இருந்து உறுத்திக் கொண்டிருக்கும் நிலையில் தற்போதைய நடைமுறைகள் கொண்டு வரும் எதிர்வினைகள் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். அழுத்தம் அதிகாரத்தால் நிலக்கரி வைரமாவது இயற்கை சொல்லித் தந்த பாடமுங்க...

*மூதூர் ஜவாத்*

## உணவு அனுப்புவதில் மோசடி?

வட - கிழக்கு மக்களுக்கு அரசு அனுப்பும் உணவுப்பொருட்களில் பெருமளவு தொகை மோசடி செய்யப்படுவதாக பாதுகாப்புப் பிரிவுகளின் உயர் மட்டத்துக்குத் தெரியவந்துள்ளதை அடுத்து அது தொடர்பாக விரிவான விசாரணையொன்றை நடத்த விஷேட இரகசிய பொலிஸ் குழுவொன்று யாழ்ப்பாணத்துக்குச் சென்றுள்ளதாகத் தெரிவருகிறது.

அரசின் சில அதிகாரிகளும் இவ்வுணவுப் பொருள் மோசடியின் பின்னணியில் இருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸ் தலைமையகம் கூறுகிறது.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரீ.வீ.சுமணசேகரவின் பணிப்பின்படி அதன் பணிப்பாளரான சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி டீ.கே ஹேமச்சந்திரவின் நெறிப்படுத்தலின் கீழ் இவ் விஷேட இரகசியப் பொலிஸ் விசாரணை நடைபெறுகிறது.

யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருள் அனுப்பப்படும் முறை மற்றும் அதனுடன் தொடர்பான நிறுவனங்கள், நபர்கள் தொடர்பான முழுமையான அறிக்கையொன்று இரகசிய பொலிசாரிடம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதே சமயம் யாழ்ப்பாண அரச அதிபராக இதுவரை செயற்பட்ட சீ. பத்மநாதன் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு கூறுகிறது.

பத்மநாதன் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதாகவும், யாழ்ப்பாணத்தின் புதிய அரச அதிபராக கே. சண்முகநாதன் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார்.

## 'சி.ஐ.டி' மீதும் சந்தேகம்!

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க அவர்களது கொலை முயற்சி தொடர்பான விசாரணைகளில் இருந்து சி.ஐ.டி, தேசிய தகவல் மையம் (N.I.B.) என்பன நீக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

கடந்த ஐ.தே.க. ஆட்சிக்காலம் தொடக்கம் தற்பொழுது வரை இவ்விரு நிறுவனத்தைச் சேர்ந்த அதிகாரிகள் ஐ.தே.க. நபர்களுடன் தொடர்பு கொண்டுள்ளமை இதற்கு காரணமாகும். இவர்கள் சிறிசேன குரே, பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்கள், சொத்தி உபாலி என்போருடன் தொடர்பு கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக இவர்களை எச்சந்தர்ப்பத்திலும் நம்ப முடியாது என்றும், அத்துடன் இதுவரை கொலை முயற்சி தொடர்பாக எந்த வொரு தகவலையும் இவர்கள் வழங்கவில்லையெனவும் கூறப்படுகின்றது.

இக்கொலை விசாரணை மூலம், ஜனாதிபதி சந்திரிகா அவர்களை கொலை செய்ய சொத்தி உபாலி உள்ளிட்ட சிலர் முயன்றதாகவும், அதற்காக அத்தனகல்ல பிரதேசத்தில் ஒரு வீடு வாடகைக்கு எடுக்கப்பட்டதாகவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய இவ்விசாரணைகள் பொலிஸ்பிரிவின் அரச நம்பகத்தை பெற்ற பொலிஸ் குழுவால் மேற்கொள்ளப்படுகின்றது.

## பிறந்த நாள் போராட்டம்

பொ.ஐ.மு அரசாங்கத்துக்கு மூன்று வருடங்கள் பூர்த்தியாகும் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம், பொ.ஐ.மு.வின் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும்படி கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடாத்த ஐ.தே.க. தயாராகி வருகின்றது என தெரியவருகின்றது.

ஒகஸ்ட் நடுப்பகுதியில் நாடுமுழுவதும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், கருத்தரங்குகள் என்பனவற்றை ரணில் விக்கிரமசிங்க அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் கட்சி நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள் ஒழுங்கமைத்து உள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பறித்துப் பறித்துக் கொடுப்போம்!

தனியாருக்கு விற்கப்பட்ட அரச ஸ்தாபனங்களை புனருத்தாரணம் செய்யும் சட்டத்தின் கீழ் கடந்த வாரம் மீண்டும் அரசுக்கு உரித்தாக்கப்பட்ட ஏழு நிறுவனங்களை தனியாரிடம் ஒப்படைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதென தெரியவருகின்றது.

அத்துடன் கடந்த ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் மற்றும் தற்போதைய அரசின் கீழ் தனியார் துறைக்கு விற்கப்பட்ட அரச சொத்துக்களில் அரசுக்கு சொந்தமாகவிருக்கும் பங்குகள் மேற்கூறிய முறையில் விற்கப்படுமென அரச தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பாதீட்டு பற்றாக்குறையை குறைப்பதற்காக ரூ.500கோடி வருமானத்தை பெறும் நோக்கத்துடன் அரச பங்குகள் மற்றும் நிறுவனங்கள் இவ்வாறு விற்கப்படுகின்றன.

அத்துடன் அரச தோட்ட நிறுவனங்கள் 23ல் 19 நிறுவனங்கள் உட்பட இலங்கை டெலிகொம் மற்றும் எயார் லங்கா நிறுவனங்களை விற்பனை செய்ய இந்த வருட இறுதிக்குள் அரசாங்கம் முயற்சிக்கின்றது என நம்பப்படுகின்றது.

இலங்கை உருக்கு கூட்டுத்தாபனம், பூகொடை ஆடை தொழிற்சாலை, கொழும்பு கொமர்ஷல் (எஞ்சினியரிங்) நிறுவனம், மத்தேகம ஆடை தொழிற்சாலை மற்றும் ஹிங்குரான சீனி தொழிற்சாலை என்பனவே அரசினால் மீளப்பெற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களாகும். இவற்றில் மத்தேகம ஆடை தொழிற்சாலையை காஜூல் லங்கா நிறுவனத்துக்கு விற்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன எனவும் குறிப்பிடப்படுகின்றது.

## பூலான்தேவி போர்க்கொடி!

இலங்கையின் இனநெருக்கடி உக்கிரமடைந்து தமிழர்களின் தாயகப் போராட்டம் தீவிரமடைந்த 1983 காலப்பகுதிக்கு பின்னரான இன்று வரை சிறிலங்கா கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகிறார்கள்.

இதுவரை சிறிலங்காப் படையினரால் 246 மீனவர்கள் கொல்லப்பட்டும், 142 பேர் அங்கவீனர்களாக்கப்பட்டுமுள்ளனர். அதைவிட சிறிலங்காப் படையினரால் கைது செய்யப்பட்ட பலர் இன்னமும் சிறிலங்காவின் சிறைகளிலுமுள்ளனர். 12 கோடி இந்திய ரூபா பெறுமதியான மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களும் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

ஜூலை 6ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தமிழ் நாட்டின் தலைநகர் சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு மீனவர் பேரவையின் மாநில மாநாட்டில் இந்தியப் பாராளுமன்ற உறுப்பினர் பூலான்தேவி சிறப்பு

20→

## வாக்குமூலமா முடியாது!

கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் சிறிசேன குரே அவர்களிடம் இருந்து இதுவரை வாக்குமூலம் பெறமுடியாதுள்ளது எனத் தெரிய வருகின்றது. 1966 சூழ்ச்சி வழக்குக்காக கைது செய்யப்பட்ட கப்டன் பிரசன்ன தஹநாயக்க அவர்களைப் பின்பற்றி, தனக்கெதிரான முறைப்பாடு யாது, முறைப்பாட்டாளர் யார் என்பவற்றை தெளிவாக்காது இருக்கும் வரையில் தாம் எந்தவிதமான வாக்குமூலத்தையும் வழங்கப் போவதில்லையென தெரிவித்துள்ளதாக அறியக்கிடைக்கின்றது. அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் நபருக்கு தாம் எதற்காக கைது செய்யப்பட்டோம் என்பதை தெரிந்து கொள்ளவும், அதுவரை வாக்குமூலம் அளிக்காது இருக்கவும் சட்டம் இடமளிக்கிறது என நீதிப்பிரிவினைச் சேர்ந்தவ[illegible]கள் குறிப்பிடுகின்றனர்.

சென்ற இதழில் வெளியான 'இலங்கையில் தமிழர் உயர் கல்வி' எனும் கட்டுரையை எழுதியவர் சோ.சந்திரசேகரம் அவர்கள்

www.tamilarangam.net



# சண்டே ரைம்ஸ்: ஆசிரியர் குற்றவாளியா?

இரண்டு ஆண்டுகளாக பரபரப்பாக கொழும்பு மேல்நீதிமன்றத்தில் நடந்து வந்த 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் ஆசிரியர் சிங்ஹ ரத்னதுங்க மீதான வழக்கின் தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க அவர்களது பெயருக்கும், கௌரவத்திற்கும் இழுக்கு ஏற்படுத்தும் விதத்தில் எழுதப்பட்டதாகக் கூறப்படும் கட்டுரை ஒன்று தொடர்பாக, அரசினால் தொடரப்பட்ட இவ்வழக்கில் சிங்ஹ ரத்னதுங்க குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளார். இலங்கை குற்றவியல் சட்டத்தின் கீழும், பத்திரிகைக் கவுன்சில் சட்டத்தின் கீழும் குற்றவாளியாகக் காணப்பட்ட இவருக்கு ஒன்றரை வருடத்திற்கு ஒத்திவைக்கப்பட்ட ஏழாண்டு சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டுள்ளன.

1995 பெப்ரவரி 19ம் திகதி வெளியான 'சண்டே ரைம்ஸ்' இதழில் வெளிவந்த 'கொசிப் கொலம்' என அழைக்கப்படும் 'அரட்டைப் பத்தி'யில் வெளியான தகவல் ஒன்று தொடர்பாகவே ஆசிரியர் சிங்ஹ ரத்னதுங்க மீது இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. லிபரல் கட்சியினைச் சேர்ந்த தேசியப் பட்டியல் பா.உ. ஆன அசித்த பெரேரா அவர்களினால் லங்கா ஒபரேய் ஹோட்டலில் நடாத்தப்பட்ட பிறந்தநாள் விழாவுக்கு, இரவு பன்னிரண்டரை மணிபோல், ஹோட்டேலின் பின்புற வாசலால் ஜனாதிபதியவர்கள் சென்றார் என்றும், அவர் அங்கு 90 நிமிட நேரம் தங்கியிருந்தார் என்றும் எழுதப்பட்டிருந்தது. அந்தக் கட்டுரை எழுதப்பட்ட விதம், அதில் பாவிக்கப்பட்ட மொழி என்பன ஜனாதிபதி அவர்களை ஒரு வாசகர் தரக்குறைவாக நினைக்கத் தூண்டும் விதத்தில் அமைந்தவை என்பதும், உண்மையில் ஜனாதிபதி அவர்கள் அப்படி ஒரு விருந்துக்கு போகவே இல்லையென்பதும், எனவே இத்தகவல் வேண்டுமென்றே ஜனாதிபதி அவர்களுக்கு களங்கம் கற்பிக்கும் நோக்கத்துடனேயே இப்பத்தியில் எழுதப்பட்டுள்ளது என்பதுமே அரசதரப்பின் வாதமாக இருந்தது.

ஆசிரியர் சிங்ஹ ரத்னதுங்கவை பொறுத்தவரை, அவர் இந்தக் கட்டுரையில் வந்திருந்த தகவல் ஒரு செய்தியாளரால் வழங்கப்பட்டிருந்ததாகவும், அதைத்தான் உண்மை என்று நம்பியதாகவும், ஜனாதிபதி அவர்கள் இவ்வாறு அதிகாலை வேளைகளில் விருந்துகட்கு செல்வது ஒன்றும் புதிய விடயமல்ல என்றும், அவர் இவ்வாறு விருந்தில் கலந்து கொண்டது பற்றி எழுதுவது ஒன்றும் அவரை தரக்குறைவானவராக நினைக்க



அரன்.

வைக்கும் என்றும் தான் கருதவில்லை என்றும் கருதுவதாக தெரிவித்திருந்தார். ஜனாதிபதி ஹோட்டல் விருந்துக்குப் போவது அவரை குறைவாக நினைக்கவைப்பதற்கு போதுமானகாரணமல்லவென்பதும் இக்கட்டுரை வெளிவந்த பத்தி வெறும் அரட்டைப் பத்தியாகையால் அதை அவ்வளவு முக்கியமான ஒரு விடயமாக எடுக்கத் தேவையில்லை என்பதும் அவரது வாதமாக இருந்தது.

நீதிமன்றத்தினால் பத்திரிகை ஆசிரியர் குற்றவாளி என காணப்பட்டிருப்பதால், இந்த வழக்கினைப் பற்றி விபரமாக ஆராய்வது சட்டத்திற்கு உகந்ததல்ல. ஆனால், இந்த இடத்தில் ஒரு முக்கியமான விடயத்தை நாம் கவனிக்க வேண்டும்.

அதாவது சட்டத்தின் முன்னால் ஒருவர் குற்றவாளியாகக் காணப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும், ஒருவர் உண்மைக் குற்றவாளியாக இருக்கவேண்டிய அவசியமில்லை; இவ்வாறான ஒரு முரண்பாடு நிலை சட்டங்களின் தன்மையைப் பொறுத்து அடிக்கடி நடப்பதுண்டு என்பதாகும்.

அதுவும் இலங்கையின் குற்றவியல் சட்டத்தின் கீழ் பல நிரபராதிகள் குற்றவாளிகளாக்கப்படுவதும், பல குற்றவாளிகள் தப்பிவிடுவதும் சாத்தியமே. சாட்சியங்களின் தன்மை, வாதிடும் திறன் என்பவைகளையும், சட்டங்களின் சார்புத் தன்மையைப் பொறுத்தும் இவ்வாறான சம்பவங்கள் நடப்பதுண்டு. இலங்கையில் நடைமுறையில் உள்ள பாலியல் வல்லுறவுச் சட்டம் இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும். இச்சட்டத்தால் நீதிவழங்கப்பட்ட பெண்களை விரல்விட்டு எண்ணி விடலாம். நியாமான சந்தேகங்கட்கு அப்பாற்பட்ட விதத்தில் குற்றம் நிரூபிக்கப்பட வேண்டும் எனக் கோரும் இலங்கை குற்றவியல் சட்டத்தின் இப்பிரிவு ஒரு குற்றவாளியைத் தண்டிப்பதில் காட்டும் அக்கறையை விட அவரை விடுவிப்பதிலேயே அதிக கவனம் செலுத்துகிறது என்று விமர்சிக்கப்படுகிறது.

பத்திரிகைத் துறை தொடர்பான, குற்றவியல் சட்டத்திலும் இவ்வாறான பிரச்சினை இருக்கிறது.

உண்மையில் பத்திரிகைகளும், பத்திரிகையாளர்களும் மக்களுக்கு உண்மையை வழங்குவதில் ஈடுபடுபவர்கள் என்ற முறையில் அவர்களது பணி கௌரவமும், பொறுப்பும் வாய்ந்த ஒரு பணியாகும். ஒரு நாட்டின் அடிப்படை ஜனநாயக உரிமைகளைக் கட்டிக்காப்பதற்கு மிகவும் அத்தியாவசியமான ஒரு பணி இது. ஒரு நாட்டின் ஜனநாயகப் பண்பை மதிப்பிட வேண்டுமானால், அந்த நாட்டின் தொடர்பு சாதனங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சுதந்திரத்தின் அளவை வைத்து அதை இலகுவில் மதிப்பிட்டுவிடலாம் என்பர். ஆனால் இத்துறையின் செயற்பாட்டின் போது, மற்றெல்லாத்துறைகளிலும் உள்ளது போலவே தவறுகள் ஏற்படவும் வாய்ப்புண்டு. இத்தகைய தவறுகள் நன்னோக்கத்திற்கான ஒரு செயலின் போது நடக்கும் தவறுகளாக இனங்காணப்படவேண்டும். அப்படி இனங்காணப்படும்போது தான், உண்மைகளையும், கருத்துக்களையும் அறிவதற்கான மக்களின் உரிமையை பேணுவதற்கு சாத்தியமாகும். அவ்வாறில்லாமல் தவறுகள் நடக்கும் என்பதற்காக பத்திரிகையாளர்களை கட்டுப்படுத்தும் சட்டங்களைப் போடுவதும், அச்சட்டங்களைப்பாவித்து அவர்களை ஒடுக்குவதும், அத்துறையின் சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலாகவே அமையும். அறுவைச் சிகிச்சையின் போது ஒரு நோயாளி மரணமானார் என்பதற்காக வைத்தியர்கள் மீது கொலைக் குற்றம் சுமத்தப்படுமாக இருந்தால், இந்த நாட்டில் அறுவைச் சிகிச்சையே இல்லாமல் போய் விடும்.

இன்று குற்றவாளியாக காணப்பட்டுள்ள ஆசிரியர் மீது குற்றம் காண்பதற்கு பாவிக்கப்பட்டுள்ள சட்டங்களான குற்றவியல் சட்டத்தின் பிரிவுகளும் பத்திரிகைக் கவுன்சில் சட்டத்தின் பிரிவுகளும் காலத்துக்கொவ்வாத கடுமையானவை என்றும், நாட்டின் ஜனநாயக பண்புக்கு எதிரானவையென்றும், ஏற்கெனவே பலரால் விமர்சிக்கப்பட்டுள்ளன. ஏன் இந்த அரசாங்கத்தால் சட்ட சீர்திருத்

→ 6

# தங்கத்துரை கொலை: தொடர்கிற போக்கு?

கரும் புலிகள் தினமான ஜூலை 5ம் திகதி அன்று திருகோணமலையில் வைத்து த.வி.கூ. பாராளுமன்ற உறுப்பினர் தங்கத்துரை அவர்கள் கொல்லப்பட்ட விடயம் பலவிதமான சந்தேகங்களை எழுப்பியுள்ளது. அவரது கொலைக்கு யார் காரணமாக இருக்கலாம். அக்கொலைக்கு காரணம் எதுவாக இருக்கலாம் என்ற ஊகங்கள் பலவிதமாக கூறப்படுகின்றன. ஆயினும் எல்லோரதும் பொதுவான சந்தேகம் புலிகளை நோக்கியதாகேவ இருக்கிறது.

தங்கத்துரை அவர்கள் த.வி.கூ. பாராளுமன்ற உறுப்பினர் என்பதைத்தவிர, அவர் அக்கட்சியின் அரசியல் நிலைப்பாடுகளின் தீவிர பிரதிநிதியாகக் கொள்ளப்படக் கூடியவர் அல்ல. அதுவும் புலிகளதோ, வேறு எந்த அரசியல் கட்சிகளதுமோ அரசியல் இருப்புக்கு பெரும் சவாலாக இருந்தவர் என்றும் சொல்ல முடியாது. இந்த நிலையில் இவர் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டிருப்பதற்கான காரணம் என்ன என்பது பெரும் புதிராகவே உள்ளது.



தங்கத்துரை அவர்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெருந்தலைவர்களுள் ஒருவராக இனங்காணப்பட்வர் அல்ல. அவர் பெருந்தலைர்களுக்கும் இளந்தலைமுறையினர்க்கும்இடையிலான ஒரு பாலமாகவே அறியப்பட்டவர். கடந்த பொதுத்தேர்தலில் மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் என்று பெருமிதத்துடன் சொல்லக் கூடிய ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களில் இவரும் ஒருவர் என்றபோதும் த.வி.கூட்டணியை அவர் எப்போதும் முற்றுமுழுதாக அரசியல் ரீதியாகப் பிரதிநிதித்துவப்படுத்தியவர் என்று சொல்ல முடியாது,. த.வி.கூவிற்குள்ளேயே, அவரது பதவியை விட்டுக் கொடுக்குமாறு கோரும் தீவிர வற்புறுத்தல்கள் அவருக்கு இருந்து வந்தன. எவ்வாறாயினும் அவரை அரசியல் ரீதியாக கொல்லும் அளவுக்கு அவருடன் அரசியல் ரீதியாக முரண்பட்ட சக்திகள் என்று யாரையும் இனங்காண முடியவில்லை.

இந்தநிலையில், புலிகள் மீது எல்லோரது சந்தேகமும் குவிக்கப்படுவது தவிர்க்க முடியாததே.

ஏனென்றால், அரசியல் ரீதியான படுகொலைகளில், அதுவும் தமது அரசியலுடன் முரண்படும் சக்திகளை படுகொலை செய்வதில் புலிகள் எப்போதுமே கவனமாக இருந்து வந்திருக்கிறார்கள். சந்தர்ப்பம் சூழ்நிலைகள் உடனடியானவையாக இல்லாவிட்டாலும், முன்கூட்டியே எடுக்கப்பட்ட ஒரு தீர்மானத்திற்கமைய இவ்வாறான ஒரு தாக்குதலினை நடாத்துவது அவர்களைப் பொறுத்தவரை புதிய விடயம் அல்ல. த.வி.கூ. தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் கொல்லப்பட்ட காலகட்டம் கூட அரசியல் ரீதியில் உடனடியாக அவர்களுக்கு அவசியமான ஒன்றாக இருந்ததென்று கூறிவிடமுடியாது.

இவையெல்லாம் புலிகளே இதற்கு காரணம் என்ற கூற்றுக்குப் பலம் சேர்க்கும் காரணிகள்.

இக்கொலைபற்றி தலைவர் சிவசிதம்பரத்திடம் கேட்ட போது 'கொலையாளி யார் என்று சொல்ல எனக்குச் சோதிடம் தெரியாது' என்று தெரிவித்தார். இது, அவர்கள் புலிகளை மட்டும் சந்தேகிக்கவில்லை என்று காட்டுவதாக கொள்ளப்படலாம்.

எப்படியோ, இந்தப்படுகொலை எமது நாட்டின் அரசியல் படுகொலை வரலாற்றின் குரூரத்தை வலுப்படுத்த சேர்க்கப்பட்ட இன்னொரு கொலையாகும். என்பதில் சந்தேகமில்லை. அரசியல்வாதிகளை, தலைவர்களை, கருத்து முரண்பாடு கொண்டோரை கொல்கின்ற, சகிப்புத்தன்மையற்ற, ஒரு சூழல் இன்று இலங்கை பூராவும் வளர்ந்துவிட்டிருக்கிறது. இந்த வன்முறையை இந்த நாட்டில் தொடக்கி வைத்த பெருமை எமது தமிழ் போராட்ட இயக்கங்களுக்கும், அவை இந்த வழியில் செல்ல அன்று காரணமாக இருந்த த.வி.கூவுக்கும் தான் சேரும்.

ஒருவகையில் படுகொலை அரசியலை, சகிப்புத்தன்மையற்ற அரசியலை உருவாக்குவதிலும் அதற்கு சமூக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதிலும் த.வி.கூ ஆற்றிய பங்கு மறக்கப்பட முடியாதது. அரசியல் எதிரிகளை துரோகிகளாகவும், காட்டிக் கொடுக்கும்

5 →

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்திய மாயை!

– மலர்விழி –

இந்திய இலங்கை உடன்படிக்கை செய்யப்பட்டு 10 வருடங்கள் ஆகிவிட்டன. தமிழ்போராளிகளை சரணாகதியாக்குவதில் ஆதிக்க அரசுகள் வெற்றிபெற்று 10 வருடங்கள் ஆகின்றன. இந்தியாவும் இலங்கையும் கூட்டுச் சேர்ந்து தமிழ் மக்களின் மீது விரும்பாததைத் திணித்து 10 வருடங்கள் ஆகின்றன. இரண்டு ஆதிக்க அரசுகளும் தமிழ் மக்களை பகடைக் காய்களாக பாவித்து தமது நலன்களை அடைந்து 10 வருடங்கள் ஆகின்றன.



இந்த 10 வருடங்களில் என்னவெல்லாமோ நடந்து முடிந்து விட்டன. குறிப்பாக புலிகள் தவிர்ந்த ஏனைய இயக்கங்கள் அனைத்தும் ஆயுதங்களைக் களைந்து, சரணடைந்து "ஜனநாயக வழி"க்கு வரவழைத்து விட்டு பின்னர் எதனையும் தராதுவிட்டது, இருந்ததையும் திருப்பி வாங்கிக்கொண்டு ஏமாற்றிவிட்டமை, தமிழ், முஸ்லிம் மக்கள் வரலாறு காணாத அவலங்களை அனுபவித்து விட்டமை, இலங்கை அரசின் அட்டுழியங்களுக்கு போராளி இயக்கங்களே துணை போய்விட்டமை, சமாதானம், பேச்சுவார்த்தை, தீர்வு என்பவற்றின் பேரால் அரசின் போலியான தொடர் நடவடிக்கைகள், யுத்தம், அதை நியாயப்படுத்த புதிய புதிய கற்பிதங்கள் என்று இந்த 10 வருடகாலத்தில் நடந்து முடிந்தவற்றை சொல்லிக்கொண்டே போகலாம்.

ஆனால் இத்தனைக்கும் பின்புலத்தில் இந்தியாவின் பாத்திரத்தை கூர்ந்து கவனிக்க தமிழ் சக்திகள் தவறிழைத்து வந்துள்ளனர். மீண்டும் மீண்டும் இந்தியாவை நாடிநிற்பதும், இந்தியாவை நம்பியிருப்பதுவும் தொடர்ந்தும் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன.

இந்தியா யார்? அதன் குறுகிய கால நீண்ட கால நலன்கள் என்ன? அந்த நலன்களை அடைவதற்காக அது இது வரை மேற்குலக நாடுகளை கையாண்டது எப்படி? அயல்நாடுகளை நடத்தியது எப்படி? அயல்நாடுகளை தனது நலன்களுக்காக ஈடுபடுத்துவதற்காக உள் முரண்பாடுகளை அது எப்படி கையாண்டு வந்தது? அவ்வாறான தலையீடுகளின் போது எந்தத் தரப்பின் நலன் முதன்மைப்படுத்தப்பட்டது? என்பன போன்ற கேள்விகளுக்கு தமிழ் சக்திகள் விடை காண தவறிவிட்டன என்றே கூறலாம்.



## இந்தியா: பேட்டை ரவுடி

தென்னாசியப் பிராந்தியத்தில் சனத்தொகை, நிலப்பரப்பு, கைத்தொழில் வளர்ச்சி, இராணுவ வலிமை என்பவற்றில் இந்தியா ஒரு பெரிய நாடு. இதனால் பிராந்தியத்தில் ஆதிக்க வலிமை கொண்ட நாடாக திகழ்கிறது. இதனால் இந்தியாவின் இறுமாப்பும், திமிரும் அண்டை நாடுகளின் மத்தியில் அதனை ஒரு பேட்டை ரவுடியாக செயற்படச்செய்துள்ளது. இதன் காரணமாக சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் யுத்தம் புரியவும் நேரிட்டதுடன். சிக்கிம் என்ற நாட்டை விழுங்கி ஏப்பமும் விட்டது. நேபாளம், பூட்டான் போன்ற நாடுகளைத் தன்னில் தங்கியிருக்கச் செய்து அவற்றின் வெளியுறவுக் கொள்கையையும் கூட தாமே வரையறுக்கிறது. நேபாளம், பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை போன்ற நாடுகளில் நடைபெறும் உள்நாட்டு யுத்தங்களில் அரசுக்கெதிரான சக்திகளுக்கு உதவி செய்வதற்கூடாக அவ் அரசுகளுக்கு தொல்லையும் கொடுத்து வருகிறது.

பனிப்போர் காலகட்டத்தில் ரஷ்யாவுடனும் பனிப்போரின் பின்னைய (Post Cold War Period) காலகட்டத்தில் அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளையும் சார்ந்து இருக்கிறது. தனது பிராந்திய மேலாதிக்கத்தை ஏற்றுக்கொள்ளத்தயாராக இருக்கும் வரையில் அது வல்லரசுகளுக்கு பணிந்து போவதில் பிரச்சினையில்லை என்று கருதுகிறது. இன்று அமெரிக்காவுக்கும் மேற்குலகுக்கும் இந்தியா பணிந்து போவதையும் அப்படித்தான் பார்க்கலாம்.

இலங்கையின் இனப்பிரச்சினையானது இந்தியா இலங்கையைக் கையாள நல்ல வாய்ப்பாகப் போனது. இலங்கை மேற்குலக வல்லரசுகளுக்கு முண்டு கொடுக்கின்ற காலங்களில் அதனை தடுத்து நிறுத்துவதற்காக, இலங்கைக்கு நெருக்கடி கொடுப்பதும், ஏனைய காலங்களில் நெருக்கடி கொடுக்கக்கூடிய சக்திகளை பலப்படுத்துவதும் இந்தியாவின் தந்திரோபாய நடவடிக்கையாக இருந்தது. இப்படியான காலங்களில் இலங்கை அரசுக்கு வழங்கக்கூடிய ஏனைய ஆதரவுகளை வழங்கி தனது "பெருந்தன்மை"யையும் "நட்பை"யும் அது வெளிப்படுத்தி வந்துள்ளது.

## இந்தியாவின் கூட்டாளி

உதாரணத்திற்கு, மலையக மக்களின் குடியுரிமை பிரச்சினையானது இலங்கைக்கு ஒரு நெருக்கடியா, சரி, அதில் குறிப்பிட்ட சின்ன தொகையை ஏற்கலாம் என ஒப்பந்தம் (1964 சிறிமா-சாஸ்திரி, 1974 சிறிமா-இந்திரா) செய்து கொள்ளும். இந்த இடத்தில் (இந்தியாவுக்கும் பொறுப்பு உள்ள) மலையக மக்களின் நலனில் அக்கறையிருந்தால் குடியுரிமையற்ற ஏனையோரையும் பொறுப்பேற்பது இந்தியாவுக்கு ஒன்றும் சிக்கலான காரியமே அல்ல. ஆனால் இலங்கையை கையாள கருவிகளை எஞ்ச வைப்பதும் தயார்படுத்துவதும் இந்தியாவின் நீண்டகால நோக்கிலான தந்திரோபாயமாகும். அதேபோல் 1971 ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்கவும், கச்சதீவை விட்டுக்கொடுக்கவும் இந்தியா தயார்.

இந்த இடத்தில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இலங்கையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் ஆட்சியின் போதெல்லாம் இந்தியாவில் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியுடன் நெருங்கிய நல்லுறவு நிலவும். அதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. குறிப்பாக இரண்டும் முன்னைய ஏகாதிபத்திய விரோத மேலோட்டமான அர்த்தத்தில் சோஷலிச தன்மை சார்ந்த வெளியுறவுக் கொள்கையை பின்பற்றியவை என்பது முக்கியமானது. மாறாக காங்கிரஸ் ஆட்சிக்கும் இலங்கையில் ஐ.தே.க ஆட்சிக்கும் இடையில் நல்லுறவு இருந்தது கிடையாது. இதன் காரணமாகத்தான் இலங்கையின் 1977 ஐ.தே.க ஆட்சியமர்வும் அதனைத் தொடர்ந்து திறந்தபொருளாதாரக் கொள்கையின் அறிமுகம், மேற்குலகுடனான நல்லுறவுகள், அவற்றின் முதலீடுகள், தலையீடுகள் என்பன இந்தியா இலங்கை விடயத்தில் கூடிய அவதானம் கொள்ளச் செய்தது எனலாம்.

1977 தொடக்கம் இலங்கையின் இனப்பிரச்சினை தென்னாசியப் பிராந்தியத்துக்கு அச்சுறுத்தலென்றும், தமிழ் மக்களில் தமக்கும் அக்கறையுண்டென்றும் கூறி இலங்கை அகதிகளை ஏற்கச்செய்ததும், (சில நேரங்களில் செயற்கையாகவே அகதிகள் வருகையை தூண்டிவிட்ட சந்தர்ப்பங்களும் உண்டு) தமிழ் போராளிகளுக்கு தஞ்சமளித்ததும் அவர்களது தளங்கள் இந்தியாவில் செயற்பட அனுமதித்ததும், ஆயுதங்களை வழங்கியதும் ஆயுதப்பயிற்சிகள் அளித்ததும் அவதானிக்கத்தக்கவை. இதன் மூலம் பல 'பிடி'களை தம்வசமாக்கியது.

## இந்தியாவின் பிடியில் தமிழ் இயக்கங்கள்

விடுதலை இயக்கங்களுக்கு வழங்கிய ஆயுதங்களைக் கொண்டே இந்தியாவின் எதிர்ப்பார்ப்பை கணிக்கலாம். அவ் ஆயுதங்களைக் கொண்டு ரோந்து செல்லும் படையினரையும் காவலரண்களையும் மாத்திரமே தாக்க முடியும். பெரிய படை முகாம்களை தாக்கி ஆயுதங்களைக் கைப்பற்றவோ அல்லது அரசின்பாரிய படை நகர்வை முறியடிக்கவோ அல்லது ஒரு பிரதேசத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதோ இவ்வாயுதங்களால் சாத்தியப்படாது. இந்தியாவுக்கு தேவைப்பட்டதெல்லாம். ஸ்ரீ லங்கா படையினரை ஆங்காங்கு தாக்கி தொல்லை கொடுப்பதற்கூடாக இலங்கையை வழிக்கு கொண்டு வருவதே.

ஆயுதங்கள் விடயத்தில் இந்தியாவை நம்பியிருக்காமல் சர்வதேச சந்தையில் ஆயுத கொள்வனவு செய்ய முயன்ற தமிழ் இயக்கங்களின் மீது பகைமை கொண்டது இந்தியா. சில இயக்கங்களுக்கென ஆயுதங்கள் சென்னை துறைமுகத்தை வந்தடைந்தபோதே அவற்றை பறிமுதல் செய்தது.

இந்திய அரசுடன் முரண்டு பிடிக்கின்ற காலகட்டங்களிலெல்லாம் இலங்கை அரசை தண்டிக்கும் விதத்தில் பாரியளவிலான தாக்குதல்களை நடத்துமாறு "றோ" இயக்கங்களை பணித்தது. குறிப்பாக அனுராதபுரம் பௌத்தமதத்தளங்களை தாக்கியதும். கொழும்பில் அப்பாவி பொதுமக்களை இலக்காகக்கொண்டு பாரிய குண்டு வெடிப்புகளை நடத்துவது எல்லாம் இதன் தூண்டுதலின் காரணமாகவே நடந்ததாக பல போராளிகள் கூறுகின்றனர்.

இலங்கை தனக்கு பணிந்து போகும் காலகட்டங்களில் பேச்சுவார்த்தைக்கு போகுமாறு இயக்கங்களை தூண்டுவதும் ஏனைய காலங்களில் இயங்கங்களை தாக்குதல்நடத்தத்தூண்டுவதும் அதற்காக தயார்படுத்துவதையும் செய்து வந்தது.



இப்படியாக இயக்கங்களை தனது பிடிக்குள் வைத்துக்கொண்டு போராட செய்வதும் பேச வைப்பதும், போராட வைப்பதும் பேசவைப்பதுமாக மாறி மாறி நகர்த்தியது.

## இந்தோ-இலங்கை உடன்படிக்கை

இந்தியாவின் இந்த போக்கு கேள்விக்குறியாகும்நிலை 1987இல் ஏற்பட்டது. 1987 மே மாதம் இலங்கை அரசு வடமராட்சியை தனத பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரும் நோக்குடன் "ஒப்பரேஷன் லிபரேஷன்" இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டதுடன் பொருளாதாரத் தடையையும் விதித்தது. யாழ் நகரை கைப்பற்றுமானால் இலங்கை அரசை நெருக்கி பணிய வைக்கும் பலம் குறைந்துவிடும் என்பதைக் கண்டு கொண்ட இந்திய அரசு தொடர்ச்சியாக எச்சரிக்கை விடுத்தது. சர்வதேச அளவில் இலங்கை அரசு பெற்றிருந்த அவப்பெயர். தமிழக மக்களின் உணர்வலைகள் எல்லாமே தனக்கு சாதகமாக இருந்ததைக் கண்ட இந்தியா நேரடியாகவே தலையிட முடிவு செய்தது. பாதிக்கப்படட மக்களுக்கு நிவாரணம் எனும் பேரில் இலங்கை வான்பரப்பில் அத்துமீறி போர்விமானங்களுடன் வந்து உணவுப் பொட்டலங்களை போட்டதற்கூடாக "அடுத்ததும் நடக்கும்" என்று அச்சுறுத்தியது இந்தியா. இந்தியாவின் யோசனைக்கு இலங்கை பணிந்தது.

தனது மூலோபாய நோக்கங்களை உடனடியாக நிறைவு செய்ய இதனை ஒரு சந்தர்ப்பமாக இந்தியா பயன்படுத்தியது. தமிழ் தலைமைகளின் அபிப்பிராயங்கள் எதனையும் கேட்காமல் தமிழ் மக்களின் அபிலாஷைகளை கொண்டிராத ஒரு தீர்வை இந்தியாவும் இலங்கையும் தயாரித்தன. தயாரித்த பின்புதான் ஏனைய இயக்கங்களின் மீது அதனை திணிக்க முயன்றது. புலிகள் உட்பட ஏறக்குறைய எல்லா இயக்கங்களும் இந்த மூன்றாம் தரப்பின் நலன்களுக்கான ஒரு தீர்வுக்கு பலியானார்கள். இலங்கை இந்திய ஒப்பந்தமும் நடைபெற்றது.

## இந்திய-இலங்கை நலன்கள்

இந்தியாவைப் பொறுத்தளவில் இலங்கையில் இந்தியாவின் நலன்களைப் பாதிக்கக் கூடிய வகையிலான வெளிநாட்டு இராணுவ, உளவுச்சேவைகள் செயற்படுவதோ, திருகோணமலை உட்பட வேறெந்த துறைமுகமோ வேறொரு நாட்டின் பாவனைக்கு ஈடுபடுத்துவதோ, வெளிநாட்டு ஒலிபரப்பு நிறுவனங்கள் இராணுவத்தேவைக்காக பாவிக்கப்படுவதோ இல்லை என்பன போன்ற விடயங்களை ஒப்பந்தத்தில் இலங்கை அரசிடமிருந்து எழுதி வாங்கிக்கொண்டது. இந்தக் காலப்பகுதியில் அமெரிக்கா "வொய்ஸ்ஒப்அமெரிக்கா"வை அமைக்கவும் எண்ணெய்க்குத பயன்படுத்தலுக்கும் முயற்சி செய்து வந்ததும் கவனிக்கத்தக்கது.

அதே போல் இலங்கைக்கும் பல தேவைகள் இருந்தன. குறிப்பாக தமிழ் இயக்கங்கள் அனைத்தையும் நிராயுதபாணிகளாக்குவது இந்திய ஆதிக்கத்தை (ஆபத்தை) தணிப்பது, தென்னிலங்கையில் உக்கிரம்பெற்றிருந்த ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்க அவகாசம்பெறுவது, உலக அளவில் பெற்றிருந்த அவப்பெயரை நீக்கும்வகையில் "தீர்வை" வழங்கிவிட்டதாக வெளியுலகுக்கு காட்டுவது.

இரு நாடுகளும் தமது நோக்கங்களில் வெற்றி பெற்றன. ஆனால் எதனை தீர்ப்பதாகக் கூறிக்கொண்டு இத்தனையும் நடந்ததோ அந்தப் பிரச்சினைக்கு எந்தத் தீர்வும் கிட்டவில்லை. போதுமான அதிகாரமில்லாத ஒரு மாகாணசபையை ஆயுதங்களை களைந்துவிட்டு சரணாகதியடைந்த தமிழ் இயக்கங்கள் ஏற்றுக்கொண்டன. இந்த விடயத்தில் புலிகள் இயக்கம் பலியாகவில்லை என்றே கூறலாம். "அமைதிப்படையையும்" இந்தியா இறக்கியது. அதன் எண்ணிக்கையும், படைக்கலங்களும், இது அமைதிப்படையல்ல தேவைப்பட்டால் நசுக்கவுமே வந்துள்ளது என்பதை உணர்த்தியது.

இயக்கங்களை நிராயுதபாணிகளாக்குவதில் காட்டிய ஆர்வத்தை ஒப்பந்தத்தின் மூலம் வழங்குவதாகக் கூறிய அரைகுறை தீர்வுகளைக் கூட நடைமுறைப்படுத்த இலங்கை அரசை நிர்ப்பந்திக்கவில்லை. ஒப்பந்தத்தில் குறிப்பிட்டவற்றை நிறைவேற்றும்படி பல போராட்டங்கள் உண்ணாவிரதங்கள் நடந்தன. புலிகளின் அங்கத்தவர் திலீபனும் மட்டக்களப்பில் அன்னபூரணி எனும் பெண்ணும் உண்ணாவிரதத்தில் உயிர் நீத்தனர்.

## தட்டிக்கேட்க யாருமில்லை

ஆரம்பத்தில் உலகிலேயே நான்காவது பெரிய படையுடன் மோதி வெற்றி பெறமுடியாது என கருதியதால் பணிந்து போன புலிகள் கூட அடுத்தடுத்து நடைபெற்ற கசப்பான நிகழ்வுகளினால் இந்தியப்படையை எதிர்த்து போரிடாவிட்டாலும் தாம் அழிந்து போக நேரிடுமென்பதை உணர்ந்தனர். புலிகளுக்கும் "அமைதிப்படை"க்கும் இடையில் போர் நடந்தது. அதற்குமுன்னர். இலங்கைப்படையினரால் தமிழருக்கு இழைக்கப்பட்ட அத்தனை கொடுமைகளையும் விட அகோரமானதாக, மூர்க்கமானதாக இந்தியப்ப படையினரின் நடவடிக்கைகள் இருந்தன. இலங்கை அரசு அதற்கு முன், ஓரளவு எச்சரிக்கையுனேயே இவ்வகை அட்டுழியங்களைச் செய்தது. ஏனெனில் இந்தியா அதனையே பெரும் பிரச்சாரமாக சர்வதேச அளவில் எடுத்துச் சென்றுவிட்டிருக்கும் என இலங்கை கருதியிருந்தது. ஆனால் இந்தியப்

→ 9

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஹொங்கொங் கையேற்பு: சீன அமெரிக்கப் பனிப்போரின் ஆரம்பம்?

ஆர். எம். இம்தியாஸ்
(பீஜிங் பல்கலைக் கழகம்)
சீனா

ஜூன் மாதம் 30ம் திகதி நடு இரவு சீன மக்களது வரலாற்றில் அற்புதமான நாள். மிக நீண்ட காலமாக பலாத்காரமாக பிரித்தெடுக்கப்பட்ட பிள்ளையொன்று வீடு வந்து சேரும் போது குடும்பத்தாருக்குள் குதூகலிக்கப்படும் அழகான மகிழ்ச்சி எப்படி இருக்கும்? அவ்வாறான அனுபவம் அன்றைய இரவில் சீன மக்கள் மத்தியில் பரந்த நாட்டின் செறிந்த சனத்தொகையினரிடையில், வேறுபாடுகளை எல்லாம் ஒதுக்கிவிட்டு வேரூன்றி இருந்தது. 1841ம் ஆண்டு போதைவஸ்து யுத்தத்துக்கு பிறகு (Opium war) பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் பிரித்தெடுக்கப்பட்ட அல்லது பறித்தெடுக்கப்பட்ட ஹொங்கொங் மீண்டும் சீன அரசுக்கு கையளிக்கப்பட்ட அற்புதமான நாள்தான் அந்த நாள் இரவு. இந்த இரவில் சீன மக்கள் மத்தியில் காணப்பட்ட மகிழ்ச்சியின் அடுத்த பக்கம் எவ்வாறு காணப்பட்டது என்பதனை விளக்குவதே இக்கட்டுரையின் இலக்காகும்.

குளிர் யுத்தத்துக்கு பிறகு (Post Coldwar) உலக அரசியல் போக்கு பல்துருவத்தை நோக்கி (Multipolarization) நகரும் போக்கில் காணப்படுகிறது. குளிர்யுத்த காலத்தில் ஆதிக்கம் செலுத்திய இருதுருவ அரசியல் (Biopolarsystem) முறைமை அந்நியமாகி, பல்துருவ முறைமை அவ்விடத்தை நிரப்பியுள்ளது. இவ்வாறான முறைமையில் பல நாடுகளது ஆதிக்கப் போக்கு சாதாரணமாக சாத்தியமாகலாம். இப்பின்புலத்தில் இருந்து நோக்கும் போது சீனாவின் அண்மைக்கால பொருளாதார வளர்ச்சி 10% அதிகரித்துச் செல்லும் போக்கில் உள்ளது. உலகத்தில் மிக அதிவேகமாக (Rapid growth) வளரும் பொருளாதாரமாக சீனப் பொருளாதாரம் காணப்படுகிறது. உலக வங்கியின் மிக அண்மைய அறிக்கைப்படி இன்னும் இருபது வருடங்களில் சீனப் பொருளாதாரம் அமெரிக்கப் பொருளாதாரத்தையே மிஞ்சும் அளவுக்கு அதிகரித்துச் செல்லும் சாத்தியங்கள் அதிகமாக உள்ளன.

இப்பின்னணியில் ஹொங்கொங் வருகை சீனாவின் செல்வாக்கை உலக அரசியலில் அதிகரிக்கச் செய்யும் என்பதில் சந்தேகமே இல்லை. ஹொங்கொங் ஏற்கெனவே பொருளாதார வளர்ச்சியடைந்த பகுதியாகும். குளிர்யுத்தக் காலத்தில் சோஷலிச முகாமுக்கு எதிராக தென்கிழக்கு ஆசியாவில் சில நாடுகளை முதலாளித்துவ சக்திகள் தெரிவு செய்தன. இத்தெரிவு வலைக்குள் ஹொங்கொங் சிக்குப்பட்டதன் விளைவாக முதலாளித்துவ சக்திகள் ஹொங்கொங்கினை சுவர்க்கமாக வளர்த்தெடுத்தது. சுவர்க்கமான ஹொங்கொங் சீனாவின் கையில் சமாதான பூர்வமாக மீண்டும் கையளிக்கப்பட்டது.

சீன மக்கள் எப்போதும் தாம் உலக வல்லரசுகளால் ஒடுக்கப்பட்ட மக்களாக கருதி வருகிறார்கள். சீனர்களது 5000 வருடத்துக்கு மேற்பட்ட வரலாற்றில் அந்நியசக்திகளது ஊடுருவல் அதிகமான பாதிப்பினை விளைவித்தே உள்ளன. மற்றும் பிரான்ஸ் படைகளின் ஊடுருவலும் அவர்களது அட்டகாசங்களும், ஜப்பானியர்களது வருகையும் அவர்களது மனிதப் படுகொலைகளும் மாபெரும் தலைவர் தோழர் மாவோவின் நவ சீனத்துக்குப் பிறகு அமெரிக்காவின் அரசியல் மற்றும் பொருளாதார சதிகளும் சீன மக்களினை மிக அதிகமாக பாதித்தே உள்ளன.

ஹொங்கொங் கையளிப்பு விழாவின் போது இந்த உணர்வினை தெளிவாக அடையாளம் காணக் கூடியதாக இருந்தது. பிரிட்டிஷ் நாட்டு தேசியக் கொடி இறக்கப்படும் போது முழு சீனாவும் மகிழ்ச்சி ஆரவாரத்தில் இருந்தது ஒரு புறமிருக்க, அவ்வேளையில் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக மக்களது ஆர்த்தெழும் புரட்சி சுலோகம் என் கண்களில் கண்ணீரை அழைத்தது. அதேவேளை செஞ்சீனாவின் சிவப்பு நிறக்கொடி, பிரிட்டிஷ் தேசியக் கொடியினை நிரப்பும். போது சீன தேசியவாத சுலோகமும் சீன சோஷலிச சுலோகமும் அற்புதமான உணர்வுகளின் கூட்டு மொத்தமாகவே காணப்பட்டது. சீன மக்கள் ஒருவரையொருவர் கட்டியணைத்து முத்தமிட்டு ஆனந்தக் கும்மாளமாடிய அந்தப் பொழுது... என்னால் அந்த நிமிடத்தை கற்பனை செய்தே பார்க்க முடியவில்லை. அடக்கி ஒடுக்கப்பட்ட சீனத்தேசியவாதத்தின் ஒரு அடையாளமாக அந்த நாள் காணப்பட்டது என்றாலும் பிழையாகாது.

''சீனர்கள் இனியும் கோழைகளில்லை. எங்களை எந்த சக்தியும் இனி ஆதிக்கம் செலுத்த முடியாது''

''எங்களது தேசிய உணர்வு பிழையில்லை''

''சோஷலிசத்தில் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது. முதலாளித்துவத்துக்கு தோல்வியே''

''பிரிட்டிஷாரின் துரோகத்துக்கு முடிவு நாள் இது''

'அமெரிக்கா எங்களுக்கு அறிவுரை கூற அவசியமில்லை. ஹொங்கொங் எமது உள்நாட்டு விவகாரம்''

''சீனா உலகத்துக்கு அச்சுறுத்தலாகாது''

அன்றைய நிமிடங்களில் என்னால் தொடுக்கப்பட்ட வினாக்களுக்கு வழங்கப்பட்ட பதில்கள் இது.

அன்றையை சீனா முழுமையாக சிவப்பு நிறக்கொடிகளால் நிரப்பப்பட்டிருந்தது. புரட்சிகர பாடல்களும், சீன மக்களது வரலாற்று துன்பியலினை உணர்த்தும் தேசியத்துவப் பாடல்களும் பரவலாக ஒலி, ஒளிபரப்பப்பட்டுக்கொண்டே இருந்தன. சீனத் தொலைக் காட்சி, மற்றும் வானொலி சேவை பொதுவாக சீன தேசியத்தை பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகளையே வழமையாக ஒளி, ஒலிபரப்பரக்குவதுண்டு. அன்றையை தினம் இதற்கெல்லாம் ஒரு மைற் கல்லாக நிகழ்ச்சிகள் அமைந்திருந்தன. மிக இலகுவாக தேசியத்துவத்துக்குள் ஈர்க்கப்படும் வகையில் நிகழ்ச்சிகள் அமைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

சீனாவின் இன்றைய துரித வளர்ச்சியின் ஹொங்கொங் பெரும் சாதகத் தாக்கத்தையே ஏற்படுத்தும். அதேவேளை, 1999 டிசம்பர் மாதம் 'மெக்காவோ' நாடும் சீன இறைமைக்குள் உள்ளாக்கப்படும். மெக்காவோ (Meccao) தற்போது போர்த்துக்கலின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளது. ஹொங்கொங் பிரச்சினைக்கு முன்னெடுக்கப்பட்ட ஒரு நாடு, இரு முறைமை (One Country Two System) தீர்வு இந் நாடுக்கும் பொருந்தும் என்றே எதிர்ப்பார்க்கப்படுகிறது. அதே வேளை 'தாய்வான்' (Taiwan) பிரச்சினையும் சமாதானப் பூர்வமாகத் தீர்க்கப்பட்டால் சீனாவின் வளர்ச்சி அமெரிக்காவுக்கு சவால் என்பது சந்தேகமில்லை.

ஹொங்கொங் கையளிப்பு விவகாரத்தை தாய்வானுடன் தொடர்புபடுத்தி பீஜிங் பல்கலைக்கழக சர்வதேச அரசியல் பேராசிரியர் ஜியா அவர்களுடன் கதைத்தபோது தாய்வான் விடயத்தில் நம்பிக்கையே தெரிவித்தார்கள். ''சீன மத்திய அரசாங்கம் ஹொங்கொங் விடயத்தில் வாக்குறுதியினை உறுதிப்படுத்தினால் தற்போதைய **''தாய்வான் ஆட்சியாளர்களுக்கு''** தொடர்ந்தும் தனி அரசினை நிலைநாட்ட நியாயம் இருக்காது.

பேராசிரியர் சங் சியாமிங் அவர்களிடம் அமெரிக்காவின் ''சீனஅச்சுறுத்தல்'' அறிக்கைகள் பற்றி கேட்ட போது ''சீனா அன்றும் ஆதிக்க நாடாக இருந்ததில்லை. இனியும் ஆதிக்க நாடாக இருக்காது. சீனத் தேசியவாதம் அவர்களால் பிழையாக உணரப்பட்டுள்ளது'' அவரது குரலில் உறுதி காணப்பட்டது.

பீஜிங் பல்கலைக்கழக சர்வதேச அரசியல் கலாநிதி பட்ட மாணவர்களுடன் இது பற்றி உரையாடிய போது அவர்கள் சீனத் தேசியவாதத்தின் தேவையினையும், உலக சமாதானம், குறைந்தது அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளது சமாதானம் சீனாவின் மூலம் மலரும் சாத்தியத்தை நம்பிக்கைப் படுத்தினார்கள்.

சீன வளர்ச்சியென்பது ஒரு பெரும் அதிர்ச்சியேயாகும். மிகவும் குறைந்த அல்லது பின்தங்கிய நாடாக இருந்து ''சோஷலிச சந்தைப் பொருளாதாரத்தின்'' கீழ் அபிவிருத்தி அடையும் நாடு சீனா.

''அமெரிக்கா இன்னொரு குளிர் யுத்தத்தை துரிதமாக வளரும் சீனாவுடன் தொடுக்கும் காலம் அதிகமில்லை. இதன் ஒரு படிதான் சீன அச்சறுத்தல். அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கைக்கு சீனா தடையாக இருக்கும் என்பது மேற்கத்தைய நம்பிக்கை'' என்ற பீஜிங் பல்கலைக்கழக சர்வதேச அரசியல் துறை மாணவர்களது கருத்தும் கவனிக்கத்தக்கது.

வளர்ந்து வரும் சீனத்தேசியவாதத்தை மேற்கத்தைய சக்திகள் சந்தேகமாக நோக்குவது எவ்வளவு தூரம் பொருந்தும் என்பது சந்தேகத்துக்குரியது. சீனாவின் வெளிநாட்டுக்கொள்கை மேற்கத்தைய நாடுகளது வெளிநாட்டுக் கொள்கையில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. குளிர் யுத்தக் காலத்திலும் சீனா ஆதிக்கம் செலுத்தும் நாடாக இருந்ததில்லை. சீனாவின் நிகழ்கால பொருளாதார வளர்ச்சியினை ஹொங்கொங் மற்றும் மெக்காவோ வருகையினை அடிப்படையாகக் கொண்டு மேற்கத்தைய தொடர்பு சாதனங்களும், மேற்கத்தைய அரசியல்வாதிகளும் பாதகமாக கதை பரப்புவது அவர்களது ''குளிர்யுத்த அரசியல்சிந்தனையே'' வெளிப்படுத்துகிறது. மேற்கத்தைய நாடுகள் அனுபவத்தின்படி துரிதமாக அபிவிருத்தி அடையும் நாடு இராணுவத்தை கட்டியமைத்து ஆக்கிரமிப்பு நாடாக தம்மை பதிவு செய்ததுண்டு. இந்தப் பாடத்தை சீனாவும் கற்றுக்கொள்ளவேண்டும் என்ற மேற்கத்தைய எதிர்பார்ப்பு அப்பாவித்தனமானதே!

ஆர்த்தெழும் சீனத் தேசியவாதம் பிழையானது என கூற இடமில்லை. அடக்கி ஒடுக்கப்பட்ட ஒரு இனத்தின் விடுதலை எவ்வாறு முக்கியமோ அவ்வாறே அடக்கி ஒடுக்கப்பட்ட நாட்டின் எழுச்சியும் முக்கியம். ''சோஷலிசம் தூக்கிலிடப்பட்டுவிட்டது'' என்று கத்தும் மேற்கத்தைய சார்பு பிரசசாரதத்தின மத்தியில் சீனாவின் ''நடுநிலை சோஷலிசப் போக்கு'' எமக்கு நம்பிக்கை தருவதாகவே உள்ளது. சீனத் தேசியவாதத்தின் பின்னால் காணப்படும் ''சீன சிவப்பு சோஷலிசம் தான்'' அமெரிக்காவுக்கும், அதன் கூட்டாளிகளுக்கும் குறிப்பாக ஜப்பானுக்கும், பெரும் கவலையாகும். ''சீன அச்சுறுத்தல்'' வாதத்தின் அடிப்படையே இதுதான் என்பதும் வெளிச்சமானதே. ஒடுக்கப்பட்ட நாடுகளும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும் சீனாவின் வளர்ச்சி பற்றி கவலைப் படுவதற்கில்லை. ஒரு நேர்மையான தோழனாக சீனா எதிர்காலத்தில் பரிமாணம் பெறும் என்பதற்கான கட்டியங்கள் நிகழ்காலத்தில் நிறையவே உள்ளன.



29 ஓகஸ்ட் 1842இல் சீனப் பிரதிநிதி கீ ஷான். ஆங்கிலேயர்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டபோது

3→

## தங்கத்துரை..

எட்டப்பர்களாகவும் வர்ணிக்கப் பழக்கிய வாய்கள் அவர்கள் வாய்கள். இந்த அரசியல் போக்கு, ஜனநாயக மறுப்பையும் பாசிச அரசின் கூறுகளையும் கொண்டதாக வளர்ந்து வந்ததும், இறுதியில் அதுவே, த.வி.கூ தலைவர்கள் பலருக்கு எமனாகிப் போனதும் எமது கசப்பானவரலாறுகள்.

தமிழ் அரசியல் கட்சிகள், ஆயுதப் போராட்ட அரசியலையும், தனிநபர் பயங்கரவாதத்தையும் வேறுபடுத்திப் பார்க்கத் தவறிய, தனிநபர் பயங்கரவாதத்தை ஆயுதப் போராட்ட அரசியலின் ஒரு அம்சமாக கொண்ட தமது அரசியல் வரலாற்றை மீளப்பரிசீலிக்கவும், இத்தவறுகளை களையும் விதத்தில் சுயவிமர்சனம் செய்யவும், இச்சிந்தனைப் போக்கை எதிர்த்த அரசியல் போராட்டத்தை நடாத்தவும் முன்வராதவரை இப்போக்கில் மாற்றம் ஏற்படுவதைக் காண்பது கடினமே.

புலிகளை தாக்குகின்ற ஒவ்வொரு கட்சியும், இப்போக்குக்கு தாமும் பொறுப்பு என்ற தார்மீக உணர்வுடன் இந்த விடயத்தை பேசாமல், இது வெறும் புலிகளுக்கு மட்டும் சொந்தமான போக்காக அணுகும் வரை அவர்களால் இப்பிரச்சினையில் மாற்றத்தை கொண்டு வரமுடியாது.

அப்படிச் செயற்படும்வரை, இப்போக்குக்கு தாம் ஒவ்வொருமே (பிரபாகரன் உட்பட) பலியாகும் வாய்ப்பு உண்டு என்பதை மறந்துவிடக்கூடாது.

நிகழ்ச்சிகளை தனிமனிதர்கள் தீர்மானிப்பதில்லை. போக்குகளே தீர்மானிக்கின்றன. மனிதர்கள் வெறும் கருவிகள் மட்டுமே.

போக்குகளை மாற்றி அமைக்கின்ற தனிமனிதர்களே தலைவர்கள் ஆகிறார்கள். புதிய போக்குகளுக்கே தலைவர்களும் தேவைப்படுகிறார்கள். ஏற்கெனவே இருக்கும் போக்குக்கு தலைவர்கள் தேவையில்லை. கருவிகளே தேவை! தலைவர்கள் தாமாகவே தேவைக் கேற்ப உருவாகிக்கொள்வார்கள்.

ஜனநாயக பூர்வமான, அரசியல் போராட்டத்தில் இறங்க விரும்புகின்ற, தாம் சார்ந்துள்ள மக்களின் விடுதலையை வெற்றெடுக்க தம்மை அர்ப்பணிக்க விரும்புகின்ற ஒவ்வொரு கட்சியினதும் கடமை இது. இதை செய்யாதவரை, இப்போப்பட்ட நிகழ்வுகள் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கும்.

நாமும் வெறும் அனுதாபங்களை தெரிவிப்பதற்கப்பால் வேறெதையும் செய்ய முடியாத கையாலாகாதவர்களாக, இதுபோன்ற நிகழ்ச்சிகட்கு சாட்சிகளாக, சிலவேளைகளில் நாமே நிகழ்ச்சிக்கான காரணியாக இருந்து கொண்டிருப்போம்.

எதை நாம் தெரிவு செய்வது என்பதை ஒவ்வொரு கட்சிகளும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இந்தப் போக்கில் த.வி.கூவுக்கு நடந்த கடைசி இழப்பு தங்கத்துரை. அவரது மக்களுக்கும், அவரது பிரதேசத்திற்கும், குடும்பத்திற்கும் இது ஒரு பெரும் இழப்பு.

ஆனால், தமிழ் மக்களின் அரசியல் உரிமைப்போராட்டத்தில் நீண்டிருக்கும் இப்பேற்பட்ட கொலைகளின் பட்டியலில் அவரும் வெறும் ஒருவரே. இதுவே எமது தேசத்தின் பெருந்துயர்.

தங்கத்துரை அவர்களது மரணம் துயர்தருவது. யார் செய்திருந்தாலும் அது கண்டனத்திற்குரியதே. அவரது குடும்பத்திற்கும், கட்சிக்கும் மக்களுக்கும் எமது அனுதாபங்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை இந்திய ஒப்பந்தம்

## சில அவதானங்கள்

ஐ. பயஸ் றெஸ்ஸாக்.

இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டு பிரிவை உண்டு பண்ணும் கிளர்ச்சியை அடக்குவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தம் இலங்கை - இந்திய சமாதான உடன்பாடாகும். இவ்வொப்பந்தம் இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்துவதை உறுதிப்படுத்துவதாயும் அமைந்தது. இவ்வொப்பந்தத்தின் பிரகாரம் ஆயுதம் ஏந்திய அனைத்துத் தமிழ் குழுக்களும் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொண்டன.

1987ம் ஆண்டு ஜூலை 29ம்திகதி வரலாற்றுப் புகழ்மிக்க இலங்கை - இந்திய சமாதான உடன்படிக்கை முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன அவர்கட்கும், முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இடையில் கொழும்பில் வைத்து கைச்சாத்திடப்பட்டது. இவ்வொப்பந்தத்திற்காக இலங்கைக்கு முதற் தடவையாக விஜயம் செய்த இந்தியப் பிரதமர் ஓர் இராணுவ வீரரால் அவமதிக்கப்பட்ட சம்பவத்தை வரலாற்றில் இருந்து அழித்திட முடியாது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் எந்நோக்கத்தினை முதற்கொண்டு முன்வைக்கப்பட்டதோ அந்நோக்கம் முற்றாய் தனது குறிக்கோளை எய்தவில்லை. இவ்வொப்பந்தத்தின் காரணமாய் ஏற்படுத்தப்பட்ட 13வது திருத்தச் சட்டத்தின் ஊடாக மாகாணசபை அமைப்பு முன்வைக்கப்பட்டது. இதன் காரணமாய் இலங்கையில் மாகாண சபைகளை ஏற்படுத்தி, அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு இசைவு காணப்பட்டிருந்தது.

ஆனால் துரதிருஷ்டவசமாய் வடகிழக்கிலே மாகாண சபை அமைப்பு வெற்றியடையவில்லை. அதனால் மத்திய அரசு வடகிழக்கு மாகாண அரசை தன்னிச்சையாய் கலைத்தது. வடகிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் மாகாண அரசில் எவ்விதமான சிக்கல்களும் ஏற்படவில்லை.

இது இவ்வாறு இருக்க ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP) இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் மீதான நம்பிக்கையின்மையை வெளிப்படுத்தியிருக்கின்றது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் சரத்து 2.16(e) சரத்து 2.14 ஆகிய பிரிவுகளை முன்வைத்து இவ்விரு நாடுகளின் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய ஈ.பி.டி.பி. முடிவு செய்திருக்கின்றது. (சில ஆங்கிலப் பத்திரிகைகளில் ஒப்பந்த சரத்து இலக்கம் 2.16(a), 2.4 என தவறுதலாய் குறிப்பிடப்பட்டுள்ளது.)

சட்டரீதியாக இவ்வொப்பந்தத்தினை நோக்கும் போது இவ்வொப்பந்தம் இருநாட்டு தலைவர்களிடையே செய்து கொள்ளப்பட்டது. இவ்விரு நாட்டு பாராளுமன்றத்தினாலும், உயர்நீதிமன்றத்தினாலும் அங்கீகரிக்கப்பட்டது. சட்டவலிமை பொருந்தியது. சட்டரீதியாக செல்லுபடியானது. இன்னும் அமுலில் உள்ளது. இதே விடயத்தினை சரிநிகர் இதழ் 112ல் ''அவசரகாலச்சட்டமும் கிருஷாந்தி வழக்கும்'' என்ற கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன்.

எனவே சட்டபூர்வமாக செல்லுபடியாகும் தன்மையைக் கொண்ட இவ்வொப்பந்தத்தின் ஏதாவது ஓர் பிரிவு மீறப்படுமாய் இருந்தாலும் அது 'ஒப்பந்த முறிப்பு' (Breach of Agreement) ஆகவே கருதப்படும். இதற்கெதிராக வழக்குத் தொடுப்பதற்கும் சட்ட ஏற்பாட்டில் இடமுண்டு.

ஈ.பி.டி.பியினைப் பொறுத்தமட்டில் இவ்வழக்கினை தாக்கல் செய்வதற்குரிய சகல தராதரங்களும் தாராளமாய் உண்டு.



பதிவு செய்யப்பட்ட ஓர் அரசியற் கட்சி. பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களைக் கொண்டிருக்கும் ஓர் அரசியல் அமைப்பு. இலங்கை -இந்திய ஒப்பந்தத்தினை ஏற்று ஜனநாயக அரசியல் அமைப்புக்கு திரும்பிய அமைப்பு என சாதகமான அம்சங்கள் பல.

பெரும்பாலும் இவ்வழக்கு இந்திய உயர்நீதிமன்றத்திலும் இலங்கை உயர் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்படவேண்டும். இதன் போது சட்டச்சிக்கல் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

ஏனெனில், இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இரண்டு நாட்டினதும் தலைவர்களும் இப்போது உயிருடன் இல்லை. மாறாக இவ்விரு தலைவர்கள் பிரதிநிதித்துவம் செயத கட்சியும் தற்போது ஆட்சி அதிகாரத்தில் இல்லை. இருந்தாலும் இவ்விரு தலைவர்களும் இருநாட்டினதும் சார்பாகவே உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டதால், தற்போதைய அரசு இவ்வழக்கினை சந்தித்தாகவே வேண்டும். இனி இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் சொல்லப்பட்டிருக்கும் விடயங்களை நோக்குவோம்.

1.1. இலங்கையின் ஐக்கியம், இறைமை, எல்லைப்பாதுகாப்பு என்பன பாதுகாக்கபபடுதல்.

1.2. இலங்கைத் தீவானது பல்லின மக்களைக்கொண்ட, பல்வேறுபட்ட சமூக விழுமியங்களை கொண்ட சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கிய மக்களினை உள்ளடக்கிய நாடு என்பதனை ஏற்றுக் கொள்ளல்.

1.3. ஒவ்வொரு சமூகமும் தனக்கென்றொரு தனித்துவமான கலாசார அடையாளத்தை கொண்டிருப்பதை ஏற்றுக்கொள்வதுடன், அதனை அவதானமாய் வெளிப்படுத்தல்.

1.4. வடகிழக்கு பிரதேசம் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பூமி என்பதனை ஏற்றுக்கொள்ளுதல். அத்தோடு இப்பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ் பேசும் மக்கள் ஏனைய இனத்துடன் ஒற்றுமையாக வாழ்ந்து வந்தார்கள் என்பதையும் ஏற்றுக் கொள்ளுதல்.

1.5. பல்லின பல் சமூக பல்வேறுபட்ட இணைப்புக்களை கொண்ட மக்கள் சுமுகமாக, சமாதானமாக, அமைதியாக வாழ வழியமைத்தல். அத்தோடு இலங்கையின் ஒருமைப்பாடு, இறைமை, எல்லைப்பாதுகாப்பு என்பவற்றில் விழிப்புணர்வோடு செயற்படுதல்.

2. சரத்தின் மற்றையபாகம்.

2.1. மாகாணங்கள் இணைக்கப்பட்டு ஒரு அலகாக இயங்குவதற்கு அனுமதி வழங்கப்படும் அதே வேளை அவை தனித்தனி மாகாணமாக இயங்குவதை தீர்மானிக்க விருப்பு வாக்கெடுப்பு (Referendum) நடைபெறும்.

2.2. வடக்கும் - கிழக்கும் இணைக்கப்பட்டு ஒரு மாகாண அலகாக கருதப்படும். ஒரு ஆளுநரும், முதலமைச்சரும், மந்திரி அவையும் அமையும். இக்காலப்பகுதி இடைக்கால நிருவாகமாகக் கருதப்படும்.

2.3. 1988 டிசம்பர் 31இற்கு முன்பு கிழக்கிலே ஓர் விருப்பு வாக்கெடுப்பு நடாத்தப்படும். இவ்வாக்கெடுப்பில் (அ) சரத்து 2.2ற் குறிக்கப்பட்டவாறு கிழக்கு மாகாணம் வடமாகாணத்தோடு இணைக்கப்பட்டு ஒரே அலகாக இருக்க வேண்டுமா அல்லது

(ஆ) கிழக்கு தனியான மாகாணமாக அடையாளப்படுத்தப்பட்டு தனி அலகாக தனி ஆளுநர் முதலமைச்சர், மந்திரி சபை என்பன ஏற்படுத்த வேண்டுமா என்பதனை மக்கள் தீர்மானிப்பர்.

ஜனாதிபதி இவ்விருப்பு வாக்கினை ஒத்திவைப்பதற்கு சரத்து இடமளிக்கும்.

2.4. இனப்பிரச்சினையின் விளைவால் அல்லது வேறுகாரணங்களினால் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியவர்களும் இவ்விருப்பு வாக்களிப்பில் கலந்து கொள்ள உரிமையுண்டு. அவர்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பி வருவதற்கான வழிவகைகள் உருவாக்கப்படும்.

2.5. பிரதம நீதியரசை தலைமையாய் கொண்டு இலங்கை அரசாங்கத்தால் பிரேரிக்கப்பட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒருவரையும், கிழக்கு மாகாண தமிழ் பேசும் மக்களின் நிர்வாகம் அம்மக்களால் பிரேரித்து ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஒருவரையும் கொண்ட குழுவானது விருப்புத் தேர்தலை கண்காணிக்கும்.

2.6. சாதாரண பெரும்பான்மை இவ்விருப்பு வாக்சின் முடிவை தீர்மானிக்கப் போதுமானது.

2.7. விருப்பு வாக்கினைப் பற்றிய கூட்டங்களும், கொள்கை வளங்களும், இந்நாட்டின் சட்டவரையறையை மீறாமல் செய்வதற்கு இடம் அளிக்கப்படும்.

2.8. 1987 டிசம்பர் 31ற்கு முன்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு அடுத்த 3 மாதத்திற்கிடையில் மாகாணசபைத்தேர்தல் நடாத்தப்பட வேண்டும். வடகிழக்கு தேர்தலை கண்காணிக்க இந்திய அவதானிகள் குழு அழைக்கப்படும்.

2.9. வடகிழக்கிலே அமுல் செய்யப்பட்டிருந்த அவசரகால விதி 1987 ஒகஸ்ட் 15 உடன் அகற்றப்படும். ஒப்பந்தம் கைச்சாத்தாகி அடுத்த 48 மணித்தியாலயத்தில் யுத்த நிறுத்தம் (Cessation of Hostalities) அமுலுக்கு வரும். ஆயுத குழுக்கள் தம்மிடம் இருக்கின்ற ஆயுதங்களை இலங்கை அரசாங்கத்தால் அமைக்கப்பட்டிருக்கும் அதிகாரமளிக்கப்பட்ட குழுவிடம் ஒப்படைத்தல் வேண்டும். யுத்தநிறுத்தத்தின் விளைவாக ஆயுதக் குழுக்கள் தம்முடைய ஆயுதங்களை ஒப்படைக்கும் அதே வேளை, இராணுவம் தமது முகாம்களுக்கு வந்து விடவேண்டும். யுத்த நிறுத்தம் அமுல் செய்யப்பட்டு 72 மணித்தியாலத்தில் இவையாவும் செய்யப்படவேண்டும்.

2.10. இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் பாவிக்கப்படும் சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு ஆகிய அதே கட்டமைப்பு வடகிழக்கில் நிலைநாட்டப்பட வேண்டும்.

2.11. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழும் (Prevention of Terrorism Act) அவசரகால விதியின் கீழும் குற்றமிழைத்த, குற்றம் சாட்டப்பட்ட தடுப்புக்காவலில் உள்ள அனைத்துக் கைதிகளும் ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்படுவார்கள். இவர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான சகல நடவடிக்கைகளும் இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும். இந்தியா இதற்கு உதவும்.

2.12. இலங்கை அரசாங்கம் இவ்விதியினை ஏற்றுக்கொண்டு, அதன்படி ஒழுகும். அத்தோடு ஏனைய அமைப்பும் இதன்படி ஒழுகுவதை எதிர்பார்க்கும்.

2.13. இவ்வொப்பந்த கட்டமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டால், இலங்கை அரசு தனது வேலைத்திட்டங்களை உடன் துரிதப்படுத்தும்.

2.14. இந்திய அரசு இவ்வொப்பந்தத்திற்கு எழுத்துருவிலான சட்டபூர்வ உறுதியுரையை (Under Write and Gurantee) வழங்குவதுடன் இவ்வொப்பந்தத்தின் துரிதசெயற்பாட்டுக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கும்.

2.15. ஏலவே 4.5.1986 தொடக்கம் 19.12.86 வரையான காலப்பகுதியில் தீர்மானிக்கப்பட்ட விடயங்களுக்கு இருசாராரும் ஒத்துழைப்பு வழங்கி ஏற்றுக் கொள்வதாயின் மாத்திரம் தான் இவ்வொப்பந்தம் செயற்படுத்தப்படும். இக்காலப் பகுதியில் தீர்மானத்திற்கு வராத விடயங்களுள், இவ்வொப்பந்தம் கைச்சாதிடப்பட்டு 6 வாரகாலத்திற்குள் தீர்வு காணப்படும். அத்துடன் இவ்வொப்பந்த துரிதப்பாட்டுக்கு இந்தியா தனது நேரடிக் கண்காணிப்பை வழங்கும்.

2.16. இவ்வொப்பந்தம் நிபந்தனையுடனான ஒப்பந்தமாக இருப்பதனால், இவ்வொப்பந்தங்களை ஏதாவது ஆயுதங்குழுக்கள் மீறுமாய் இருப்பின் இந்தியா கீழ் கண்ட நடவடிக்கையை எடுப்பதற்கு உரித்துடையது.

→ 8

## சண்டே ...

5→

தத்தினை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட ஆர்.கே.டபிள்யூ. குணசேகர கமிட்டியால் கூட இச்சரத்துக்கள் நீக்கப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றன. முன்னைநாள் தொடர்பு சாதனத்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா அவர்களால் நியமிக்கப்பட்ட இக்கமிட்டியில் பல சட்ட நிபுணர்களும், தொடர்பியலாளர்களும் அங்கம் வகித்தனர். இவர்களது நீண்ட ஆய்வின் முடிவாக வெளியிடப்பட்ட சீர்திருத்த ஆலோசனைகளில் தொடர்பு சாதனத்துறை தொடர்பாக இருக்கும் சட்டத்தில் பல விடயங்களை சீர்திருத்தும் படி தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இவை இந்த அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படவிருப்பதாகவும் கூறப்படுகின்றன. ஆனால், முரண்நகையாக, இந்த அரசாங்கம் நீக்கப்படவுள்ள சட்டங்களை பாவித்து பத்திரிகையாளர் ஒரு வரை குற்றவாளியாகக் கண்டிருப்பதுதான்!

நீதிமன்றத்தில் இப்பத்திரிகையாளரின் தவறுக்கு வழங்கப்படக்கூடிய அதிகபட்ச தண்டனையை வழங்குமாறு அரசு தரப்பு கோரியது. (ஆயினும் நீதிபதி அப்படியான ஒரு தண்டனையை வழங்கவில்லை.) இந்தக் கோரிக்கை, அரச தரப்பு, பத்திரிகையாளர்கள் தொடர்பாக என்ன உணர்வினைக் கொண்டுள்ளது என்பதை தெளிவுபடுத்துகிறது. சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் நடந்த தவறுக்கு, சாதாரண சிவில் சட்டத்தின் கீழேயே வேண்டுமானால் உரிய நிவாரணத்தைக் கண்டிருக்க முடியும். ஆனால் அரசாங்கம், அச்சட்டத்தை விடுத்து குற்றவியல் சட்டத்தை பயன்படுத்தி பத்திரிகையாளரைத் தண்டிக்க முயன்றிருக்கிறது. சிவில் சட்டத்தைப் போலல்லாது குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் காணப்படும் ஒருவருக்கு பாரதூரமான தண்டனைகள் வழங்கப்படலாம் என்பதை தெரிந்து கொண்டே அரசாங்கம் இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தது எனலாம்.

இலங்கையின் அண்மைக்கால வரலாற்றிலேயே நடந்த மிகவும் பாரதூரமான தண்டனை வழங்கப்பட்ட ஒரு வழக்காக இந்த வழக்கு வர்ணிக்கப்படுகிறது. அரசாங்கம் இவ்வழக்கில் என்னதான் வெற்றி பெற்றபோதும், அதனால் அதற்காக பெரிதாக சந்தோசப்படமுடியவில்லை. ஏனென்றால், இந்தத் தீர்ப்பு பொதுவாக எல்லாத் தொடர்புசாதனங்களாலும் தொடர்புசாதனவியலாளர்களாலும், சர்வதேச தொடர்பு சாதனவியலாளர்களாலும் அதிர்ச்சியுடனேயே எதிர்கொள்ளப்பட்டுள்ளது. இத்தீர்ப்புக்கு காரணமாக இருந்த சட்டத்தை நீக்கு மாறும் ஆர். கே. டபிள் யூ. குணசேகர கமிட்டியின் ஆலோசனைகளை உடன் நடைமுறைக்கு கொண்டு வருமாறும் பலத்த கோரிக்கைகள் எழுந்துள்ளன.

தொடர்புசாதன சுதந்திரம் பற்றி பதவிக்கு வரும்வரை வாய்கிழியக் கத்திய அரசாங்கம் தொடர்ச்சியாக அதை மறுக்கும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டு வந்துள்ளது. இந்த நடவடிக்கைகளுக்கு சிகரம் வைத்தாற்போல இந்த வழக்கின் வெற்றியும் அமைந்திருக்கிறது.

இவையெல்லாம் நல்லதற்கல்ல.

அரசாங்கம் தான் பதவிக்கு வருவதற்கு எந்தத் தொடர்பு சாதனத்துறையை ஏணியாகப் பயன்படுத்தியதோ, அதே தொடர்பு சாதனத்துறையின் கழுத்தை நெரிக்கும் விதத்தில் இன்று நடந்து வருகிறது. இதனால் சாகப்போவது தொடர்பு சாதனத்துறை அல்ல. இந்த அரசாங்கம் தான் என்பதை வரலாறு எழுதிக் காட்டும்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "கோணேஸ்வரிகள்" - சில எதிர்வினைகள்

சரிநிகரில் 123 இதழில் 'கோணேஸ்வரிகள்' என்ற தலைப்பில் வெளியாயிருந்த கலாவின் கவிதை ஒன்று பலத்த சலசலப்பை ஏற்படுத்தி விட்டுள்ளது.

கலா தமிழ் கவிதை உலகுக்கு வந்துள்ள ஒரு புதிய பெண் கவிஞர். அவர் எழுதிப் பிரசுரமான இரண்டாவது கவிதை இது. அவரது முதலாவது கவிதையும் சரிநிகரிலேயே வெளிவந்தது. வேறொரு பெயரில்.

கோணேஸ்வரிகள் கவிதையில் கையாளப்பட்டுள்ள மொழி, அது வெளிப்படும் அரசியல் என்பன குறித்தே இந்தச் சலசலப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இக்கவிதையின் மொழி தமிழுக்கு புதியது என்றும், ஆபாச மொழி என்றும், பெண்களையும் அவர்களது சமூகப் பெறுமதியையும் கொச்சைப் படுத்துகிறது என்றும், இனவாதத்தன்மையைக் கொண்டது என்றும், பல்வேறு அபிப்பிராயங்கள் காரசாரமாக வெளிப்பட்டுள்ளன. சரிநிகர் ஆசிரிய பீடத்துடன் சில அன்பர்கள் சண்டைக்கே வந்து விட்டிருந்தார்கள்.

இக்கவிதை அவசர அவசரமாக ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டு (அந்த மொழி பெயர்ப்புக்கு உயிர் இருந்ததா என்பது வேறுவிடயம்) மேர்ஜ் சிங்கள அன்பர்களுக்கும் ஒரு சிலரால் காட்டப் பட்டுள்ளது.

சரிநிகருக்கு எதிரான யுத்தத்திற்கு அணிசேர்க்கும் விதத்தில் ஒரு சிலர் இவ்வாறான விஷமத்தனமான முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

அதேவேளை அக்கறையுடன் இக்கவிதை பற்றி தீவிரமான விமர்சனங்களை முன்வைக்கும் சிலரும் இருக்கவே செய்கிறார்கள். இக்கவிதையை ஏற்றுக் கொள்ளாவிடினும் இவர்களது விமர்சனங்கள் முக்கியமானவை.

ஆயினும், இது தொடர்பாக காரசாரமாக விமர்சித்த பலர், இதுபற்றிய தங்கள் அபிப்பிராயங்களை எழுதித் தருமாறு நாம் கேட்ட போது, தருவதாக ஒப்புக் கொண்டிருந்தும் இதுவரை எமக்கு அனுப்பி வைக்கவில்லை.

இந்நிலையில், இக்கவிதை இதன் மொழி, இதன் அரசியல், இலக்கியமும், ஆபாசமும், பெண்ணியமும் இக்கவிதை தொற்றிய இலக்கிய சிந்தனைகளும் என்ற பல்வேறு கோணங்களில் ஒரு கருத்தாடலை ஆரம்பிப்பது சிறப்பானது எனக்கருதுகிறோம். இவ்விதழில் சில கருத்துக்கள் வெளிவருகின்றன.

வாசகர்கள் ஆர்வமுடன் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

முடிந்தவரை கருத்துக்களை சுருக்கமாகவும், தெளிவாகவும் எழுதி அனுப்புங்கள்

-ஆர்.

## வெட்கித் தலை குனியுங்கள்!

ஜூன் 5 - ஜூன் 18 சரிநிகர் இதழில் வெளியிடப்பட்ட 'கோணேஸ்வரிகள்' என்ற கவிதை ஒரு ஆழ்ந்த அருவருப்பு உணர்ச்சியை ஏற்படுத்தியது. பாலியல் வல்லுறவு என்பது பெண்களின் பால்மையின் பாற்பட்ட வன்முறையின் வெளிப்பாடு. இது ஒரு கொடூர நிகழ்வு. அந்நிகழ்வை கவிதைப்பொருளாகக்கொள்ளும் பொழுது அதன் வன்முறை, அதன் பால்நிலை, உள்ளடக்கம், அரசின் அதர்மம் பெண்களின் அவல, அபல நிலை போன்றவையே வெளிப்படுத்தப்பட வேண்டும் என்ற கட்டாய நியதி ஒன்று உண்டென்று நாம் கூறவில்லை. ஆனால் குறைந்த பட்சம் ஒரு நாகரீகப் பண்பு இருக்கவேண்டும். சொல்லாடலில் நளினமில்லா விட்டாலும் அர்த்தப் பொதிவு பண்பின் வெளிப்பாடாக இருக்க வேண்டும். தமிழச்சிகளே, சிங்கள சகோதரிகளே என்று இன ரீதியில் எழுத்தாளப்பட்ட சொற்றொடர்கள் எதை உணர்த்துகின்றன? இது இனவாதத்தின் பாற்படுமா? பெண்களின் பால்மைக்கு சாதி, சமய, வர்க்க, இன வேறுபாடில்லை. ஆணாதிக்கத்தின் வன்முறை வெளிப்பாட்டில் இவ் வேறுபாடுகள் கரைந்து விடும். (தமிழச்சிகளையும், அம்மாவையும் நிர்வாணமாக்கித்தான் கோணேஸ்வரி தாக்கப்பட்டதை கண்டிக்க வேண்டுமா? கோணேஸ்வரிக்கு இது அனுதாபச் செய்தியா?)

''புத்தரின் வழிவந்தவர்கள் இந்த வேலையை நிச்சயமாகச் செய்யவில்லை. அபௌத்தர்கள்தான் இதை செய்யக்கூடும். ஒரு பெரும் மகானான புத்தரை ஏன்தான் கொச்சைப்படுத்த வேண்டும்...? ஏன்தான் அவர் கோணேஸ்வரிக்காக களங்கத்தை ஏற்க வேண்டும்? அவர் இன்று இருந்தால் கட்டாயமாக கோணேஸ்வரிக்காக கண்ணீர் விட்டிருப்பார்.

ஏனையோரின் வக்கிரங்களுக்கு எந்தப் பெண்ணும் எதனையும் திறக்க வேண்டாம் கலா அவர்களே

பெண்மையை இவ்வளவு தூரம் இழிவுபடுத்தி கோணேஸ்வரிக்கு நியாயம் தேட வேண்டியதில்லை.

இக்கவிதையை பிரசுரித்த சரிநிகர் ஆசிரியர் குழு வெட்கித்தலை குனிய வேண்டும்.

*செல்வி திருச்சந்திரன்*

## ஆற்றல் மிக்க வரிகள்!

ஒரு கவிதை....!

ஓராயிரம் அதிர்வுகள்.....!!

''கோணேஸ்வரிகள் .... கவிதை.... வரிகளுக்கும் கண்கள் மேய்கையில் மூளைக்குள் நரம்புகள் புடைத்துக்கொண்டன. படித்து முடித்ததும் நெஞ்சு வலித்தது. ஆத்திரம், ஆவேசம், துயரம்... என்னென்னவோ உணர்ச்சிகள் பல மணித்தியாலயங்களாக என்னைப் போட்டு அலைக்களித்தன. நடந்து முடிந்த சம்பவம் தொடர்பாக கதைப்பதல்ல. இங்கு எனது நோக்கம்,. எழுதப்பட்டிருந்த கவிதை.... ஒரு விரிவான கட்டுரை. நீண்ட நேர மேடைப்பேச்சு. அனைத்தையும் தூக்கியெறியக்கூடிய ஆற்றலுடன் சில வரிகளுக்குள் தனது அரசியலை உணர்த்தி நிற்கும். அதன் ஆளுமையால் நான் ஆகர்ஷிக்கப்பட்டேன். ஒரு கவிதை எதைச் செய்ய வேண்டுமோ அது நிறைவேற்றப்பட்டுள்ளது. ஒடுக்குமுறைக்குள்ளாகியிருக்கும் தமிழ்ப் பெண்களது பெண்ணிலைவாத அரசியல் அக்கவிதைக் கூடாக முஷ்டியுயர்த்தி நிற்கிறது. தமிழ்ப் பெண்களின் தேசிய மற்றும் பால் ஒடுக்குமுறையின் ஆழத்தை ஒரு சிறு கவிதைக் கூடாக உணர்த்தியிருக்கும் இக் கவியின் ஆற்றலைக் கண்டு நான் வியக்கிறேன்.

*துஷ்யந்தி*

## எல்லாப் பெண்களையும் நிர்வாணமாக்குகிறது

இக்கவிதையை வாசிக்கும் போது தூஷணத்தை வாசிப்பது போன்று ஏற்படுகிறது. யோனி, நிர்வாணப்படுத்தல் போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் பெண்களை இழிவுபடுத்துகின்றன. இவ்வாறான பிரச்சினைகளின் போது அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கி அதிலிருந்து விடுவிக்கப் பட வேண்டும் என்பதற்கு பதிலாக, எல்லாப் பெண்களையுமே நிர்வாணமாக்குவது போலிக்கிறது இக்கவிதை. (உடைகளைக் கழற்றி/ உங்களை நிர்வாணப்படுத்தி கொள்ளுங்கள்/ என் அம்மாவே உன்னையும் தான்/ என்பதனூடாக) அது தவிர இக்கவிதை இனரீதியான மனதைப் புண்படுத்தும் விதத்தில் அமைந்துள்ளது.

*பாத்திமா*

## இரண்டாவது தடவையும் பாலியல் வல்லுறவு!

இக்கவிதையை வாசிக்கும் போது நான் அருவருப்படைந்தேன். பெண்களை முற்றுமுழுதாக இழிவு செய்கிறாற் போல இருக்கிறது கவிதை. குறிப்பாக அதன் வார்த்தைப் பிரயோகங்களும், மொழியும் பெண்களை இழிவு படுத்தும் விதத்திலேயே அமைந்துள்ளன.


கோணேஸ்வரி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டி ருப்பது உண்மை. அதனை நாம் எல்லோரும் கண்டிக்க வேண்டும். இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாமல் எப்படித் தடுப்பது, பெண்களை எப்படிப் பாதுகாப்பது என்பதாகவே படைப்பு இருக்க வேண்டும். உண்மையில் இக்கவிதையூடாக கோணேஸ்வரி இரண்டாவது தடவையாக வல்லுறவுக்குட் படுத்தப்பட்டிருக்கிறார்.

*சன்மார்க்கா*

## ஆபாசமொழி!

இதிலுள்ள பிரச்சினை இதன் அர்த்தத்திலேயே தங்கியுள்ளது. வார்த்தைகள் அவை பயன்படுத்தப்படும் இடத்தைப் பொறுத்து வெவ்வேறு அர்த்தங்களைப் பெறக்கூடும். என்னைப் பொறுத்தவரை, இந்தப் படைப்பாளி தனது உணர்வுகளை பாவிக்க பயன்படுத்தியுள்ள மொழி நாகரிக மொழியிலிருந்து வெகு தூரத்தில் இருக்கிறது. இதுபற்றி எனது தமிழ் பெண் நண்பர்களுடன் நான் பேச முனைந்த போது அவர்களில் பலர் இந்தக் கவிதையின் ஆபாசத்தன்மை காரணமாக பேசவே மறுத்து விட்டார்கள். உண்மையில் பத்திரிகைச் சுதந்திரம் என்பது இது அல்ல. படைப்பாளியுடன் சேர்ந்து நானும் இந்தக் காட்டுமிராண்டித்தனமான இராணுவத்தின் நடவடிக்கையை வெறுக்கிறேன். ஆனால் இவ்வாறான விடயங்களை வெளிப்படுத்துவதில், அதுவும் மேர்ஜ் பத்திரிகை ஒன்றில் வெளிப்படுத்துவதில் வேறு முறைகளைக் கையாள வேண்டும்.

*சிரால் லக்திலக*



## பால் அடையாளத்தைக் காட்ட பொருத்தமான சொல் தேவை?

'மகளிர் விவகார அமைச்சு', 'மகளிர் மேம்பாட்டு நிலையம்', 'மாதர் முன்னேற்றக் கழகம்', 'சைவ மங்கையர் கழகம்' ............ இப்படியாக பெண்களுக்கான நிறுவனங்கள், பெண்களுடன் தொடர்பு படுத்தப்பட்ட களங்கள் அழைக்கப்படுகின்றன. மகளிர், மாதர், மங்கையர் என்பதெல்லாம் பெண் என்பதன் ஒத்த சொற்கள் தானே? அவற்றை ஏன் புதிதாகக் கேள்விக்குள்ளாக்க வேண்டும்? என வாசகர்கள் பலரும் நினைக்கலாம். உண்மைதான். பெண்களைக் குறிப்பிட மகளிர், மாதர், மங்கையர் என்பதைவிட இன்னும் பல ஒத்த சொற்கள் இருக்கின்றன. உதாரணத்திற்கு சில: அறிவையர், பூவையர், தையலர், மடந்தையர், பாவையர், நங்கையர், வனிதையர்...... இப்படி அடுக்கிக் கொண்டே போகலாம். எனினும் இச்சொற்களுக்கெல்லாம் பின்னால் ஒரு சமூக சித்தாந்தமே மேலோங்கி நிற்பதை நாம் காணத்தவறிவிடக் கூடாது

பெண்களை மென்மையானவர்களாக, மிருதுவானவர்களாக, நளினமானவர்களாக, நால்வகைக் குணங்களான 'அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு' உடையவர்களாக சுட்டிடும் குறியீட்டுப் பெயர்களே மகளிர், மடந்தையர், மாதர், அறிவையர்...... எனும் இப்பெயர்கள் எல்லாம். சுருங்கச் சொன்னால் பெண்ணின் உயிரியல் அடையாளத்தை (Biological Identification) அல்ல சமூக அடையாளத்தையே (Social Identification) இக்குறியீட்டுப் பெயர்கள் சுமந்து நிற்கின்றன. இங்கு நாம் சமூக அடையாளம் என்பது சமூகத்தால் கட்டமைக்கப்பட்டிருக்கும் பால்நிலை வேறுபாட்டின் (Gengerd differentiation) அடிப்படையிலமைந்த - ஆணிலும் பெண் வேறுபட்டவள், கீழானவள் எனும் சமூக நிலையை சுட்டும் அடையாளமாகும்.

உத்தியோக பூர்வமான, அதிகாரம் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் என்று வரும் போது 'மகளிர்', 'மாதர்' எனும் சாராம்சத்தில் பால்நிலைப்பட்ட (Genderd) சொற்கள் மிகச் சரியான தமிழ்ச் சொற்களாக அர்த்தப்படுத்தப்படுகின்றன. உதாரணம்: ''மகளிர் விவகார அமைச்சு'' எந்த விதமான தர்க்க அடிப்படையுமின்றி அதிகாரத்திலிருப்பவர்கள் தம்மிஷ்டத்திற்கு 'சொற்கள் தொடர்பாக எடுக்கும் இந்த முடிவுகள் கேள்வியின்றி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப் படுகின்றன. அரச அலுவலகளென்றாலென்ன, தொடர்புத்துறையென்றாலென்ன, இலக்கிய வட்டாரமென்றாலென்ன அதிகாரத்திலிருக்கும் ஆணாதிக்க சிந்தனையுடையவர்களின் ஆணாதிக்க ஆர்வங்களே ''மிகச் சரியானவை'' எனும் பெயரால் நிலைநாட்டப்படுகின்றன.

மிக முன்னேறிய விஞ்ஞான பூர்வமான முறையிலெனும் வகையில் சோஷலிசப் பெண்ணிலைவாதமானது பெண்கள் தொடர்பாக சமூகத்தில் ஏலவே நிலவும் அனைத்து சிந்தனைகளையும் கட்டுடைத்துப் பார்ப்பதனூடாக பெண்ணிலைவாத நோக்கிலமைந்த புதிய சமூகப் பரிமாணங்களை உருவாக்கிச் செல்ல விளையாகிறது. இந்த முரணற்ற பெண்ணிலைவாத நோக்கு நிலையிலிருந்து சமூகத்தில் நிலவும் பால்நிலை வேறுபாட்டை ஒழித்து, ஆண், பெண் சமூக உறவில் சமத்துவத்தை ஏற்படுத்த விளையும் நாம் முதலில் எமது பாலினத்தை (Sex) குறிக்கும் குறியீட்டுப் பெயரை மிகச் சரியான உயிரியல் அர்த்தம் கொண்டதாய் எமது பாலினம் தொடர்பான நேர்மறை பிரதிபிம்பத்தைத் தரக்கூடியதாய் நிச்சயித்துக் கொள்ள வேண்டும்.

குறியீட்டுப் பெயருக்கு இவ்வளவு முக்கியத்துவம் வழங்க வேண்டுமா? என வாசகர் நினைக்கலாம். ஒவ்வொரு குறியீட்டுப் பெயரும் தனக்கான வரலாற்றைக் கொண்டே வருகிறது. வரலாற்று ரீதியாக அப்பெயரைச் சுற்றிக் கட்டமைக்கப்பட்டு வந்திருக்கும் விளக்கங்களுடன் சேர்த்தே அப்பெயர் குறித்து நிற்கும் பொருள் பார்க்கப்படுகின்றது. பெண்களைச் சுட்டும் குறியீட்டுப் பெயர்களை எடுத்துக் கொண்டால் நாம் ஏற்கெனவே பார்த்த பெயர்களனைத்தும் பெண் தொடர்பான எதிர்மறை பிரதிபிம்பத்தை தருகின்ற குறியீட்டுப் பெயர்களாயுள்ளன. எனவே மகளிர், மாதர், மங்கையர், நங்கையர்.... ஆகிய பால்நிலைப்பட்ட (Genderd) பெயர்களை எமது சிந்தனையிலிருந்து அகற்றிவிட்டு அவ்விடத்தில் உயிரியல்தன்மையை மாத்திரம் உணர்த்தக் கூடிய குறியீட்டுப் பெயரை பாவிக்க வேண்டும்.

இன்று தமிழ் மொழிமூலமான உயிரியல், விஞ்ஞான நூல்கள் மற்றும் உரையாடல்களில் 'பெண்' எனும் குறியீட்டுப் பெயரே பெண் பாலினத்தை சுட்டும் குறியீட்டுப் பெயராகப் பாவிக்கப்படுகிறது. இக்குறியீட்டுப் பெயரினூடாக பெண்களின் உயிரியல் ரீதியான அடையாளத்தை (Bioligical Identification) கூடுதலாகத் தக்க வைத்துக்கொள்ள முடியும். எனவே 'பெண்' எனும் பாலின அடையாளத்தை (Sex Identification) சுட்டும் குறியீட்டுப் பெயரை மிகப் பொருத்தமான குறியீட்டுப் பெயராக தெரிவு செய்வோம்.

*-ஜனனி-*

www.tamilarangam.net



# வலயத்தில் நாம்!



*ஜயந்தி தங்தெனிய (38), தமிழ் வாசகர்களால் அதிகம் அறியப்படாத ஒரு நபராயினும், சுதந்திர வர்த்தக வலயத்தின் தொழிலாளர் உரிமைகளுக்காக சளையாது போராடுபவர் என பரவலாக அறியப் பட்டவர். 1989 பயங்கர காலகட்டத்தில் சக தொழிலாளி ஒருவரின் உரிமைக்காக குரல் கொடுத்து, தனது உயிரை டயர்களுக்கு பலியாக்கிய அவரது கணவர் ரஞ்சித்தின் மரணத்திற்கு பின், சுதந்திர வர்த்தக வலய தொழிலாளர்களின் உரிமைகளுக்காக "வலயத்தில் நாம்"(We are in the Zone) எனும் அமைப்பை 1993 ஒக்டோபர் 27ல் கட்டியெழுப்பி, அதன் தலைமைத்துவத்தை ஏற்று போராடும் இவர் மாத்தறை மாவட்டத்தை பிறப்பிடமாகக் கொண்டவர்.*

*இன்று வரையில் ரஞ்சித்தின் மரணம் தொடர்பாக நட்ட ஈடு வழங்களோ, விசாரணைகளோ இடம்பெறாத நிலையில் அதற்கான போராட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டும், பல நிறுவனங்களின் அநீதியான நடவடிக்கைகளுக்கு எதிராக போராடியும் ஜயந்தி பெற்றுக்கொண்ட விழுப்புண்கள் எண்ணிலடங்காதவை. அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றின் உதவியுடன் தமது போராட்டங்களையும் கோரிக்கைகளையும் தாங்கிய வகையில் மாதாந்தம் 'நிவேக்கா' எனும் பத்திரிகையை ஜயந்தி நடாத்தி வருகிறார்.*

*சமூகத்தில் நிலவும் சுதந்திர வர்த்தக வலயப் பெண்கள் மீதான கருத்தியல்கள், சுரண்டல் தன்மை, தொழிலாளர்களின் பாதுகாப்பின்மை, என்பன தொடர்பாக தர்க்க ரீதியாக கருத்துக்களையும், ஆக்கங்களையும் இப்பத்திரிகை வெளியிடுகின்றது.*

*கட்டுநாயக்கா, 305, பேஸ்லைன் வீதி, அமந்தொலுவ, சீதுவையிலுள்ள ஜயந்தியின் காரியாலயத்திற்கு செல்லும் வழியில் வெகுபகிரங்கமாக இளைஞர் சிலர் "தம்முடன் இரவைக்கழிக்க அழைப்பு விடுத்தது" அதிர்ச்சியான சம்பவமாயினும் அது, வலயத்தின் சர்வசாதாரணமான யதார்த்தத்தையும், கொடுமையையும் வெளிப்படுத்தியது.*

*புது அனுபவங்களை சுமந்து கொண்டு ஜயந்தியை சந்திக்கச்சென்ற நடுப்பகல் வேளையில் (அவர் தொழிலாளி ஒருவரின் வழக்கு சம்பந்தமாக அமைச்சர்ஜெயராஜ் அவர்களைக் காணச் சென்றிருந்தார்) காரியாலயத்தில் இருந்த இளைஞர், யுவதிகளுடன் கதைக்க கிடைத்த சந்தர்ப்பமானது சுதந்திர வர்த்தக வலயத்தின் வாழ்க்கை அனுபவங்களையும், அவலங்களையும் பிரதிபலித்தது. அவ்வனுபவங்களை, கருத்துக்களை எதிர்வரும் காலகட்டங்களில் பகிர்ந்து கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் ஜயந்தியுடனான இச்சிறு கலந்துரையாடலைத் தருகிறேன்.*

***"வலயத்தில் நாம்" (காலாப்பே அ(ப்)பி) அமைப்பின் குறிக்கோள்களைக் கூறமுடியுமா?***

ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து 1993 ஒக். 27ம் திகதி இவ்வமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.

ஐந்து கோரிக்கைளை வென்றெடுத்தல், தொழிலாளர்களால் மேற்கொள்ளப்படும் தொழிலாளர் போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள் என்பனவற்றை பாதுகாத்தல், ஆதரவு வழங்குதல் , முன்னெடுத்தல், தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்தல், வெளியேற்றுதல் போன்ற நடவடிக்கைகளில் தொழிலாளர்களுக்கு சட்ட உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல், அலுவலகங்கள், நீதிமன்றங்கள் ஆகியவற்றில் தொழிலாளர்களுக்காக ஆஜராகுதல், கோரிக்கைகளை வென்றெடுக்க தொழிலாளர் அமைப்பொன்றைக் கட்டியெழுப்புதல். என்பனவே எமது குறிக்கோள்கள்.

நாம் முன்வைத்திருக்கும் ஐந்து கோரிக்கைகள் இது தான் (பொ.ஐ.மு. வாக்குறுதி அளித்தபடி):-

தொழிலாளி ஒருவரின் ஆகக் குறைந்த சம்பள்மாக ரூ.3000 இருத்தல், தொழிற் சங்கங்களை கட்டியெழுப்பும் உரிமை, காணாமல் போனோர்/ கொலை செய்யப்பட்டடோரின் உறவினர்களுக்கு நீதியை, நட்ட ஈடுகளைப் பெற்றுக் கொடுத்தல், மூடப்பட்டத் தொழிற் சாலைகளில் தொழில் புரிந்த தொழிலாளர்களது உரிமைகளை பெற்றுக்கொடுத்தல், வேலைத் தளங்களில் உணவு, தங்குமிட வசதி, சுகாதாரம், போக்குவரத்து மற்றும் இளைப்பாறும் வசதிகளை தொழிலாளர்களுக்கு செய்து கொடுத்தல். என்பனவாகும்.



***உங்கள் கோரிக்கைகளில் ஒன்றான "ஆகக்குறைந்த சம்பளமாக 3000த்தைப் பெற்றுக்கொள்வது" சாத்தியமாகியுள்ளதா, இல்லையாயின் நான்கு வருடங்களாகியும் இன்னும் சாத்தியமாகததன் காரணம் என்ன?***

இக் கோரிக்கைக்காக நான்கு வருடங்களாக் போராடி வருகிறோம். தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் வெகு தைரியமாக மேடையேறி வாக்குறுதிகளை அள்ளித்தருகின்றனர். தேர்தல் முடிந்தவுடன் அக்கோரிக்கைகளை நிறைவேற்றிக்கொள்ள கூடியளவிலான போராட்டங்களை மேற்கொள்ளவேண்டியுள்ளது. ஆரம்பத்தில் ரூ.100, ரூ.250 என சம்பளத்தை உயர்த்தினர். அதுவும் ஒரு சில அமைப்புக்களின் அழுத்தத்தின் காரணமாகவே. எனினும் முழுமையாக அக்கோரிக்கையை வென்றெடுக்க முடியவில்லை. காணாமல் போனோர், கொல்லப்பட்டோர்களுக்கான விசாரணைகள், நட்டஈடுகள் பொ.ஐ.மு வாக்குறுதியளித்தப்படி இன்னும் வழங்கப்படவில்லை. தற்போதைய பொ.ஐ.மு ஆட்சிக்காலத்தில் கூட தொழிற்சாலைகள் மூடப்பட்டே கிடக்கின்றன.

***தொழிலாளர்கள் தொடர்பான பிரச்சினைகளின் தீர்வில் ,உங்களது அமைப்பின் தாக்கம் பற்றிக் கூற முடியுமா?***

தொழிற் சாலையில் ஏதேனும் பிரச்சினை காரணமாக தொழிலாளி ஒருவர் நீக்கப்பட்டால், நாம் அதற்கெதிராக சட்ட நடவடிக்கைகளில் இறங்கி விடுவோம். பிரச்சார ரீதியாக ஏனைய தொழிலாளர்களை அறிவுறுத்துவோம். சுவரொட்டிகளை முக்கியமான இடங்களில் ஒட்டுதல், எமது "நிவேக்கா" பத்திரிகை மூலம் அது தொடர்பான ஆக்கங்களை, கருத்துக்களைப் பிரசுரித்தல் என்பனவற்றை குறிப்பிடலாம். இந் நடவடிக்கைகளுக்கு இளைஞர், யுவதிகள் சுயவிருப்பத்துடன் எமக்கு உதவிபுரிகின்றனர். பெரும்பாலானோர் பல்கலைக்கழக மாணவர்கள். அத்துடன் வேலைத் தளங்களின் அநீதிக்குட்பட்ட இளைஞர், யுவதிகளும் எம்முடன் இணைந்து பணியாற்றுகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

***பத்திரிகை ஒன்றை வெளியிடுவதன் மூலம் நீங்கள் எதிர்பார்க்கும் பெறுபேறுகள் யாவையென கூறமுடியுமா?***

ஆம். நாம் பத்திரிகை ஒன்றை வெளியிடுவதன் மூலம் வலயத்தில் தொழில் புரியும் ஆண், பெண் இருபாலாருக்கும் அறிவூட்ட முயற்சிக்கின்றோம். குறிப்பாக வலயத்தில் தொழில் புரியும் பெண்கள் பற்றி வெளியுலகத்தில் மோசமான, கீழ்த்தரமான எண்ணங்கள் நிலவுகின்றன. இதை அப்பெண்கள் அறியாமலுமில்லை. வெகு பிரசித்தமாக, பத்திரிகைகளில்பிரசரிக்கப்படும் திருமண விளம்பரங்களில் "வலயத்தில் தொழில் புரியாத பெண்" தேவையென குறிப்பிடுகின்றனர். இது தொடர்பாக பெண்கள் அமைப்புகளும் அதிக அக்கறை காட்டவில்லை எனலாம். இது வரை ஒரு பெண்கள் அமைப்பு கூட எம்முடன் இணைந்து பணியாற்ற முன் வரவில்லை என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். இப்பிரச்சினையை நிவர்த்திக்க சுயாதீனமான தர்க்கரீதியான கட்டுரைகளை பிரசுரித்து, இவ்விடயம் தொடர்பாக பிழையான கருத்துக்களை கொண்டோருக்கு அறிவூட்ட முனைகிறோம். அத்துடன் வாசித்தலை ஊக்குவித்தலும் எமது ஒரு குறிக்கோள்.

மற்றும் காணாமல் போனோர் பற்றிய செய்திகள் உலக செய்திகள், யுத்தத்துக்கு எதிரான செய்திகள் என்பனவற்றை பிரசுரிக்கிறோம்.

***உங்களது பத்திரிகையில் சுதந்திர வர்த்தக வலய பெண்களின் பங்களிப்பு எவ்வாறு உள்ளது?***

நாம் பெண்கள் பற்றிய செய்திகளை. ஆக்கங்களை, திறந்த விவாதங்களை வெளியிடுவதன் மூலம் பெண்களின் பங்களிப்புகளையே அதிகம் எதிர்பார்க்கிறோம். எனினும், துரதிருஷ்டவசமாக பெண்களின் பங்களிப்பும் மிக மிகக் குறைவாகவே உள்ளது. வர்த்தக வலயச் சூழ்நிலை பெண்களை ஓர் எல்லைக்கு மேல் செல்ல அனுமதிப்பதில்லை எனலாம் இச் சூழ்நிலையை உடைத்தெறியவே நாம் அதிகம் போராட வேண்டியுள்ளது.

***சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில்புரியும் பெண்கள்பற்றிய கருத்தியல்கள் வித்தியாசமாக இருப்பது பற்றிய உங்கள் கருத்து யாது?***

அரசியல், பொருளாதார, சமூக நிலவரம் தொடர்பான முற்போக்கு கருத்துக்கள் கொண்டவர்கள் மத்தியில் இவ்வாறான பார்வை இல்லையெனலாம். முழுமையாக சுதந்திர் வர்த்தக வலய பெண்கள் தொடர்பாக கீழ்த்தர நிலையில் நோக்குவது வருந்தத்தக்கது. அவர்களது வாழ்க்கை முறையையும், அவர்களை பாதிக்கும்புறக்காரணிகளையும் நாம் கவனத்தில் எடுத்தல் வேண்டும். மாறாக கலாசாரத்துக்கு குந் கம் விளைவிக்கின்றார்கள் ஏற குற்றச்சாட்டு எவ்வளவு மே. மானது? அதற்கான காரணம்யார் என்பதை குற்றம் கூறுபவர்கள் முதலில் எண்ணவேண்டும். நாம் எவ்வளவு தூரம் கடினமாக உழைக்கின்றோம். நாமும் மனிதர்கள்தானே. எமக்கும் உணர்ச்சிகள் உண்டு என்பதை அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள் இல்லையே. கலாசாரம்பற்றி கவலை கொள்பவர்கள் சுதந்திர வர்த்தக வலயங்களை அனுமதித்தது ஏன்? அவர்கள் இதற்கு முதலில் பதில் சொல்ல வேண்டும்.

***உங்களது எதிர்கால வேலைத் திட்டம் பற்றி கூற முடியுமா?***

இந்த வருடம் பெப்ரவரி 2, இப்புது அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டது. எதிர்வரும் காலங்களில் பெண்கள் தங்கியிருக்கும் .விடுதிகளுக்கு சென்று பார்வையிட, அவர்களுடன் கதைக்க, அவர்களது பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய முனைகின்றோம். விடுதிகளை இலக்குகளாகக் கொண்டு அலுவலகத்தில் கலை நிகழ்ச்சியொன்றையும் அண்மையில் ஒழுங்கு செய்துள்ளோம்.

***சந்திப்பு: ரத்னா***

---

6 →

## இலங்கை- இந்திய...


(அ) இலங்கையின் இறைமைக்கும் ஐக்கியத்திற்கும் பாதுகாப்பிற்கும் குந்தகம் ஏற்படும் வகையில் இந்தியாவில் எந்தவொரு நடவடிக்கையும் ஏற்படாத வகையில், இந்தியா நடவடிக்கை மேற்கொள்ளும்.
(ஆ) கடற்பிராந்தியத்தில் தமிழ் ஆயுதக் குழுக்களின் நடவடிக்கையைத் தடுப்பதற்கு இந்தியக் கடற்படையும், இலங்கைக் கடற்படையும் கூட்டாய் நடவடிக்கை மேற்கொள்ளும்.
(இ) இவ்வொப்பந்தத்தின் துரிதப் பாட்டுக்குதவும் முகமாய் இலங்கை அரசு, இந்திய அரசிடம் இராணுவ உதவியை கோரினால் இந்தியா இராணுவத்தை அனுப்பும்.
(ஈ) இலங்கையில் உள்ள இந்தியப் பிரஜைகளும் இந்தியாவில் உள்ள இலங்கை தமிழ் அகதிகளும் சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பப் படுவார்கள்.
(உ) இலங்கையின் வடகிழக்கில் வாழும் மக்களின் பாதுகாப்பையும், அமைதியையும், நிலைநாட்டி உறுதிப்படுத்த இலங்கை இந்திய அரசு கூட்டாக நடவடிக்கை மேற்கொள்ளும்.
2.17. நேர்மையான, நீதியான, சுதந்திரமான முறையில் வடகிழக்கில் வாழும் வாக்காளர்களின் வாக்களிப்புக்கு இலங்கை அரசு உறுதியளிக்க வேண்டும். இவ்விடயத்தில் இந்தியா தமது ஒத்துழைப்பை நல்கும்.
2.18. இலங்கையின் உத்தியோக பூர்வ மொழியாக சிங்களம் இருக்கும் (Official Language) அத்தோடு ஆங்கிலமும், தமிழும் உத்தியோகபூர்வ மொழியாய் கருதப்படும்.
இச்சரத்துகளோடு 6 விடயங்களை உள்ளடக்கிய பின்னிணைப்பும் செயற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இறக்கக்கண்டி முஸ்லிம்கள் கடத்தல்: சில பின்னணிகள்...



கடந்த இரண்டாம் திகதி இரவு 9.30 மணிபோல் திருமலை இறக்கக்கண்டி பிரதேசத்துள் நுழைந்த புலி உறுப்பினர்க்ள் சுமார் 41 பேரைக் கடத்திச் சென்றுள்ளனர். இதில் 36 பேர் முஸ்லிம்கள் என்றும், ஏனையவர்கள் சிங்களவர்கள் என்றும், இவர்கள் அனைவரும் மீனவத் தொழில் செய்பவர்கள் என்றும் செய்திகள் மூலம் அறியமுடிகிறது. இவர்களை கடத்தப்பட்ட தினத்திலிருந்து இன்று வரையிலும் இவர்கள் விடுவிக்க எடுக்கப்பட்ட எதுவித நடவடிக்கையும் பயன்தரவில்லை. இச்செய்தியை எழுதிக் கொண்டிருக்கும் இன்றைய தினத்தில் (11-07-1997) இவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது. அதே வேளை கடத்தப்பட்டவர்களில் பத்துபேர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள் என்று முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளது. எனினும், இது இன்னும் ஊர்ஜிதப்படுத்தப்படவில்லையெனவும், சந்தேகக்கதையெனவும் திருமலையைச் சார்ந்தோர் குறிப்பிடுகின்றனர். இப்பிரதேச வாசிகளைத் தொடர்பு கொண்ட பத்திரிகையாளர்களின் அறிக்கைபடியும், இச்செய்தி ஊர்ஜிதமாகவில்லை. இவர்களில் பெரும்பாலானோர் திருமலையின் வேறு பாதுகாப்பான பிரதேசங்களுக்கு புலம்பெயர்ந்திருக்கின்றனர். கடத்தப்பட்டவர்கள் இன்று (11-07-1997) விடுவிக்கப்படாதவிடத்து அப்பிரதேசத்து அனைவருமே புலம்பெயர்ந்துவிடுவதாகக் கூறியுள்ளனர்.

இதுபற்றிய செய்திகள் மிக முக்கியத்துவமற்று தேசியப் பத்திரிகைகளில் 3,4ம் திகதிகளில் வெளிவந்திருந்தன. அவை வாசகர்களை குழப்பத்திலாழ்த்துபவையாகவும் இருந்தன. ''குச்சவெளியில் 14 மீனவர்கள் கடத்தல்- '' (03.07.1997 - தினகரன்), 'இறக்கக் கண்டியில் 10 பேர் கடத்தல்'' (04.07.1997 - தினக்குரல்), 'இறக்கக் கண்டியில் 41 பேர் கடத்தல்'' (04.07.1997- வீரகேசரி) 'குச்சவெளியில் கடத்தப்பட்ட 14 மீனவர்களும் விடுவிப்பு'' (04.07.1997 வீரகேசரி)

இந்தச் செய்திகள் இறக்கக் கண்டியில் கடத்தப்பட்டவர்கள் தவிர்த்து, குச்சவெளியிலும் 14 பேர் கடத்தப்பட்டுள்ளரென்பதைத் தெரிவிக்கிறது. தற்போது விடுவிக்கப்படாது இருப்போர் இறக்கக்கண்டியைச் சேர்ந்தோர் இவர்கள் 41 பேர். கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டோர் 14 பேர். இவர்கள் குச்சவெளியைச் சேர்ந்தவர்கள். திருகோணமலை - புல்மோட்டை வீதியில் அமைந்துள்ள கிராமங்களே இறக்கக் கண்டியும், குச்சவெளியும். குச்சவெளி மக்களுடனான புலிகளின் கொடுக்கல் வாங்கல் பிரச்சினைகளால் ஏற்பட்ட காட்டிக் கொடுப்புக்கள், தகராறுகள் காரணமாகவே ஒரு குழுவினரால் 14 முஸ்லிம்கள் கடத்தப்பட்டுள்ளனர். முஸ்லிம்களுடன் நல்ல் முறையில் உறவுகளைப் பேணுகின்ற இன்னொரு குழுவினரின் தலையீட்டால் பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்கள் இறக்கக்கண்டி சம்பவம் தொடர்பாக கைதாகி விடுதலையானவர்கள் என்றும் சிலர் தெரிவிக்கின்றனர்.

இறக்கக்கண்டி முஸ்லிம்கள் கடத்தப்பட்டது தொடர்பாக கிடைக்கிற செய்திகள் வருமாறு.

குறித்த கடத்தல் சம்பவம் இடம்பெற்ற ஓரிரு நாட்களுக்கு முன், இறக்கக்கண்டியை அண்டிய கடல் பிரதேசத்தில். வாகரையில் சேகரிக்கப்பட்ட பொருட்களுடன் புலிகளின் படகொன்று வந்துள்ளது. இப்படகில் இருபெண்களும், ஒரு ஆணும் வந்ததாக பிரதேசத்தவர்கள் தெரிவிக்கின்றனர். வேறொரு தகவலின் படி மூன்று பெண்களும் இரு ஆண்களும் வந்துள்ளதாகத் தெரிகிறது. இப்படகிற்கு பாதுகாப்பு அளிக்கும் நோக்குடன் புலிகளின் இன்னொரு படகும் வந்து, இடையில் தொடர்பறுந்து போனதாகவும் தெரியவருகிறது.

குறித்த இந்தப் படகு இறக்கக் கண்டியை அண்டிய புறாமலை எனும் தீவருகில் வைத்து பழுதடைந்து போயுள்ளது. அதில் வந்தவர்களும் செய்வதறியாது நின்றிருக்கின்றனர். இச்சந்தர்ப்பத்தில் அவ்விடம் வந்த இரு மீனவர்களிடம் இவர்கள் உதவி கோரியுள்ளனர். தம்மைக் காப்பாற்றிவிட்டால் நிறைய பொருட்கள் தருவதாகவும் கூறியுள்ளனர். இதற்கெல்லாம் சம்மதித்து அவரில் ஒருவரை கரைக்கு அழைத்து வந்துள்ளனர். கரைக்கு வந்த பின் அவரை இராணுவத்திடம் பிடித்துக் கொடுத்துள்ளனர். இத்தகவலையடுத்து அங்கு வந்த கடற்படையினர் அந்தப்படகை இழுத்துச் சென்று பொருட்களைக் கைப்பற்றியுள்ளனர். இப்பொருட்கள் தொலைக்காட்சியிலும் காண்பிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு தகவலின்படி இப்படகில் வந்த அனைவருமே இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டதாக அறியமுடிகிறது. எனினும் இதை பிரதேசத்தவர்கள் மறுத்துள்ளனர். இச்சம்பவத்தின் பின்னணியிலே மேற்படி கடத்தல் நடந்துள்ளது. இந்தக்கடத்தலை வாகரையிலிருந்து வந்த புலிகள் குழுவே செய்துள்ளதாகவும் அறியமுடிகிறது.

காணாமல் போன பெண்களின் பெயரைச் சொல்லி அவர்களை அழைத்து வருமாறு, கடத்தப்பட்ட சிலரை புறா மலைப் பகுதிக்கு அனுப்பியுள்ளனர் புலிகள். எனினும், அவர்களால் அவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இதை வைத்தே ஒருவர் தான் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டார் என்று சொல்கின்றனர். அதில் வந்தவர்கள் முக்கியமானவர்கள் என்றபடியால் தான் இந்தளவு மக்களை பணயம் வைக்க வேண்டிய தேவை புலிகளுக்கு ஏற்பட்டுள்ளதாக தெரிகிறது. காணாமல் போனவர்கள் பற்றி தகவல் கிடைக்கும் இடத்து இவர்கள் விடுவிக்கப்படலாம் என்று கூறியுள்ளனர் புலிகள்.

இராணுவத்திடம் பிடித்துக் கொடுத்தவர்கள் வேறு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் ஓரிருவரின் செயலுக்காக முழு ஊருமே பழிவாங்கப்படுவது நியாயமில்லையென்றும் பலர் தெரிவித்துள்ளனர். கடத்தப்பட்டவர்களை விடுவிப்பதற்காக ஆண், பெண், குழந்தைகள் என அனைவரும் புலிகளின் புடவைக்கட்டு முகாமுக்கு சென்று மன்றாடியுள்ளனர். பல மைல்கள் நடந்து சென்று பட்டினி கிடந்து இவர்கள் ஏமாற்றத்துடன் திரும்பி வந்துள்ளனர். நல்லெண்ண முயற்சியாக இவர்களுடன் தமிழ் மக்களும் சென்றது குறிப்பிடத்தக்கது.

கடத்தப்பட்டவர்களில் ஒருவரின் மனைவி (இவர் மிக அண்மையில் குழந்தை பெற்றவர்) திக்பிரமை பிடித்தவராக கூரையைப் பார்த்துக் கொண்டிருப்பதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்பிரதேச மக்கள் அடிக்கடி யுத்தக்கெடுபிடிக்கு ஆளாகுபவர்கள். அடிக்கடி புலம்பெயர்பவர்கள் இராணுவ நிர்ப்பந்தம் காரணமாகவே மிக அண்மையில் இவர்கள் மீளக் குடியேறியிருந்தனர். திருகோணமலையில் சில பிரதேசத்து முஸ்லிம்கள் புலிகளுடன் சுமுக உறவையே பேணி வருகின்றனர். இதனால் அவர்கள் இராணுவத்தின் சந்தேகங்களுக்கு உட்பட்டு வருகின்றனர். முன்னர் சரிநிகர் செய்தியொன்று குறிப்பிட்டது போல் ''இருதலை கொள்ளி எறும்பாகவே'' இவர்கள் உள்ளனர்.

சிலரின் நடவடிக்கைகளைக் அடிப்படையாகக் கொண்டு ஒரு சமூகத்தினரைப் பழிவாங்கும் முனைப்புடன் இருப்பது, போராட்டத்தை வலுவிழக்க செய்கிற காரணியாகும். எமது கடந்த கால வரலாற்றில் இவ்வாறான தவறுகள் நிறைய இடம்பெற்றுள்ளன. அவை இப்போது தான் மீள் பரிசீலிக்கப்பட்டு கொண்டிருக்கின்றன. இக்குறித்தப் பிரச்சினையில் உள்ளூர் சமூகங்களை வேறு பிரதேசங்களைச் சார்ந்தோர் குழப்புவதை விடுதலைப் புலிகள் எந்தவகையிலும் அனுமதிக்கக்கூடாது. முஸ்லிம் - புலிகள் உறவுகள் அதிகம் சிக்கல்பட்டுக் கொள்வது கிழக்கின் மட்டக்களப்பு சார் பிரதேசத்திலிருந்தே. இப்பிரதேசம் உறவுச் சீர்குலைவின் கேந்திர தானமாக உள்ளது. இப்பிரதேசத்திலிருந்து வந்தவர்களே முஸ்லிம்களைக் கடத்தியுள்ளார்கள். நாங்கள் செய்யவில்லை. செய்தவர்களைப் போய் கேளுங்கள் என்று திருமலைப் பிராந்திய புலிகள் கூறியிருக்கின்றனர். ஆக மொத்தத்தில் சமூகத்தின் சுதந்திரமான இருப்பு இன்னொருவரின் கைகளிலேயே உள்ளது.

இந்தப் பிரச்சினையில், முஸ்லிம்களில் சிலர் புலிகளின் பார்வையில் குற்றவாளிகளாகத் தெரியுமிடத்து அவர்களை உரிய முறைப்படி விசாரித்திருக்கலாம். அதைவிடுத்து இவ்வாறு செய்திருப்பது இராணுவம் முழுத் தமிழர்களுக்கும் எதிராக செயற்படும் முறையை நியாயப்படுத்துவதாக அமைகிறது.

இது விடத்தில் பாதிக்கப்பட்ட ஏனைய பலரும் எதிர்நடவடிக்கைகளில் ஈடுபட சந்தர்ப்பம் காத்திருப்பதாக அறியக் கிடைக்கிறது. விடுதலை செய்யாவிட்டால் வேறு நடவடிக்கை எடுப்போம் என்று கூறியுள்ளார்கள். அந்த ''வேறு'' ஒரு கலவரமாக இருந்து விடுமோ என்று மக்கள் அச்சப்பட்டுக் கொண்டிக்கிறார்கள்.

எனவே இது விடயத்தில் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவி முஸ்லிம்களுக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய வகையில் புலிகள் தாங்கள் பேணுகிற குறைந்தளவு ஜனநாயகத்தின் அடிப்படையில் சுமுகம் காண வேண்டும். ஏற்கெனவே புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பல முஸ்லிம்களுக்கு என்ன நடந்தது என்பதும் இன்றுவரைக்கும் தெரியாத தாகவே உள்ளது. இந்த நிலை இன்னும் தொடராதிருக்க விடுதலைப் புலிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே பாதிக்கப்பட்ட மக்கள் சார்பான ஒவ்வொருவரதும் கோரிக்கையாகும்.

பாதுஷா

4 →

## இந்திய...

படைகளே நேரடியாக களத்தில் இருந்ததால் எதிர் விளைவுகள் பற்றிய எந்த தயக்கமும் இன்றி போர் விமானங்கள், கனரக ஆயுதங்கள் என்பனவற்றைப் பயன்படுத்தி குண்டு மழை பொழிந்து ஈவிரக்கமின்றி தமிழ் மக்களை கொன்றொழித்தது.

பல பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார்கள். முன்னெப்போதையும் விட அதிகளவு உயிர், உடமை, சொத்துக்களின் இழப்பு காணப்பட்டது. இதனைத்தான் அன்று கொழும்பு ஆங்கிலப்பத்திரிகையொன்று IPKF என்பதை Innocent People Killing Force என்றது. வேறும் சில பத்திரிகைகள் Indian Peace Killing Force என்றன.

இதற்கிடையில் இந்தியாவிலும் இலங்கையிலும் முறையே வி.பி.சிங்கும், பிரேமதாசவும் ஆட்சியலமர்ந்தனர். பிரேமதாசவுக்கு தேர்தல் வாக்குறுதிகளில் ஒன்றான "இந்தியப்படையை வெளியேற்றுவது" என்பதை நிறைவேற்ற வேண்டியிருந்தது. அதன்படி புலிகளுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்ததுடன் இந்தியப் படையை "வெளியே போ!" என்றார். இந்தியா மிகவும் கோபமடைந்திருந்த நிலையில் வரதராஜப்பெருமாளைக் கொண்டு தமிழீழப் பிரகடனமும் செய்யப்பண்ணி பிரச்சினையை வேறுபக்கமாக திருப்பி மேலும் சிக்கலாக்கிவிட்டு இந்தியப்படை வெளியேறியது. மாகாண சபையும் கலைக்கப்பட்டது. சரதராஜப்பெருமாளையும் கூடவே கூட்டிச்சென்றுவிட்டது இந்தியா.

இந்தியப்படையை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்காகவே உருவான பிரேமதாச-புலிகள் கூட்டு இந்தியப் படை வெளியேறியதைத் தொடர்ந்து அவசியமற்றதாகியது.

இவ்வாறு இந்திய நலனையே முதன்மையாகக்கொண்ட இவ்வுடன்படிக்கை குறித்தும் 13வது திருத்தச்சட்டம் குறித்தும் இன்றும் தமிழ் இயக்கங்கள் நம்பிக்கை வைத்திருப்பது தான் வேடிக்கை. சில இயக்கங்கள் தமது ஆயுதங்களைக் களைந்தமை குறித்து இன்றும் கவலைப்படுவதை காணமுடிகிறது.

இந்தியா குறித்து நிலவுகின்ற மாயை இரண்டு வகையானது. முதலாவது வகை, இந்தியா தமிழ் மக்களில் அக்கறையுள்ளது. தமிழக மக்களின் அக்கறைக்காக இலங்கை தமிழரிலும் அதற்கு அக்கறையுண்டு. தமிழ் மக்களின் மீதான ஒடுக்குமுறைக்கு எதிரானது. தேவைப்பட்டால் தலையிடும். உணவு அனுப்பும், அகதிகளை ஏற்கும், பராமரிக்கும், ஆயுதங்களை வழங்கும் பயிற்சி வழங்கும்... என இந்தியாவில் அதீத நம்பிக்கை கொண்ட மாயை.

அடுத்த மாயையானது இந்தியாவை மீறி எதனையும் செய்யமுடியாது என்பதாகும். அது உலகின் நான்காவது பெரும் படை, ஒரு வல்லரசு, பிராந்தியத்தின் ஏகபோக சண்டியன். எந்த நேரத்திலும் இந்தியா எனும் பாறை சிறு எறும்பின் மீது விழுந்து நசுக்கி விடும். ஆகவே அதை மீறி எதையும் செய்யமுடியாது அதன் ஆதரவு கட்டாயம் தேவை. அது சொல்வதைக் கேட்டு நடப்போம் என்பதே.

இரண்டு போக்குமே அபாயகரமானது. இந்தியாவை மையப்படுத்தி பிரச்சினையை பார்க்கும் போக்கு அபத்தமானது. ஒடுக்குமுறை, ஒடுக்குமுறை கருவிகள், என்பவற்றிலிருந்து பாதுகாப்பது. உரிமை பெறுவது எப்படி என்கின்ற மூலோபாயங்களிலிருந்து கொண்டு அவற்றை கையாள்வது தொடர்பான தந்திரோபாய நிலையை எட்டுவதே இலக்கை அடைய வழிசெய்யும். மாறாக ஒடுக்குமுறை சக்திகளைக் கண்டு அதீத பீதி கொள்வதோ அதீத நம்பிக்கை கொள்வதோ அவற்றின் தந்திரோபாயங்களுக்கு பலியாவதில் போய்தான் முடியும்.


ஏற்கெனவே இந்த வரலாற்றை பல தடவை படித்துவிட்டோம்.

இன்னும் தொடர்ந்து புதிதுபுதிதாக படிக்கத்தான் வேண்டுமா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## இந்தியா நடுரோட்டில் விட்டுவிட்டது?

– சுதா மாஸ்டர்

## நல்லெண்ணத் தீர்வே அது!

– சிவசிதம்பரம்

சுதா மாஸ்ரர்

(ஈழப் புரட்சிகர அமைப்பு)

இந்தியா இப்பிராந்தியத்தில் தன்னுடைய ஆதிக்கத்தை நிலை நாட்டவும், அதேநேரம் தமிழ் அமைப்புகளை தனக்கு சாதகமாக பயன்படுத்தி இலங்கை அரசுக்கு ஓர் நெருக்கடியையும் கொடுத்து மேற்குலகுக்கு சாதகமாக போய்க் கொண்டிருந்த இலங்கை அரசை தனக்கு சாதகமாக மாற்றிக் கொள்ளவுமே இலங்கை - இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட தெனலாம்.

தமிழரின் பாதுகாப்பு தமிழரின் நலன் என்பது இங்கு முக்கிய மாகப்பேணப்படவில்லை. தமிழ் அமைப்புகள் எல்லாம் அன்று விட்ட தவறு இந்தியாவின் அனைத்து அணுகுமுறைகளையும் முழுமை யாக நம்பி ஆயுதங்களை ஒப்ப டைத்ததேயாகும் என இன்று எம்மை சிந்திக்க வைக்கிறது.

இந்தியாவின் நலனுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட்டு எமது நலன் அடுத்தபடியாகவே பார்க்கப்படுகிறது.

ஆயுதங்களை ஒப்படைப்பது பற்றி பிரபாகரன் அன்றே உணர்ந்தார். ஏனைய தமிழ் அமைப்புகள் கால தாமதமாகியே உணர்ந்து கொண்டன.

ஆயுதங்களை ஒப்படைத்த இந்த பத்து வருட கால ஜனநாயக வாழ்க் கையில் எந்தத் தமிழ் அமைப்பு களுமே எதையுமே சாதிக்கவில்லை. எமது சமூகத்துக்கு எதைச் செய்தீர்கள் என்றால் ஒன்றுமே செய்ய முடியவில்லை என்பது தான் பதிலாகவுள்ளது.

இந்தியா எப்படி ஒரு தலைப் பட்சமாக இந்த ஒப்பந்தத்தை செய்ததோ அதேபோலவே இடை நடுவில் பிரச்சினைகளுக்கு மத்தி யில் ஒப்பந்தத்தையும் கைவிட்டு ஒரு தலைப்பட்சமாக ஜனநாயக வழிக்கு வந்தவர்களையும் நடு ரோட்டில் விட்டு விட்டு திரும்பிப் போனது.

பாராளுமன்ற வழிமுறைகளால் இனிமேலும் தமிழ் மக்களின் நியாயபூர்வமான உரிமைகளுக்கு தீர்வு கிட்டுமா என்பதிலிருந்து நாம் மெல்ல மெல்ல விடுபட்டு வருகிறோம்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் இந்தியாவுக்கு ஓர் தார்மீகக் கடமையுண்டு. ஆனால் குஜ்ரால் போன்ற ஒரு தலைவர் இருக்கும் ம.டும் அது எந்தளவு சாத்தியப் படுமென்று சொல்ல முடியாது. குஜ்ரால் வெளியுறவு அமைச்சராக இருந்து இலங்கைக்கு வந்தபோது கூட, இலங்கை விடயத்தில் தலை யிட மாட்டோம் என்று கூறியவர்.

இலங்கை விடயத்தில் தலையிட மாட்டோம் என்று கூறிக்கொண்டே இலங்கை அரசுக்கு இந்த யுத்தத் திற்கு அதிகளவில் இன்று உதவி செய்யும் ஒரு நாடாக இந்தியாவே உள்ளது. எல்லாவகையான உதவி களும் செய்கிறது. செய்வதற்கு தயாராகவும் உள்ளது.

இலங்கைப் பிரச்சினையில் தலை யிடமாட்டோம் என்று கூறிக் கொண்டு விடுதலைப் புலிகளுக் கெதிரான யுத்தம் என்று சொல்லப் படுகின்ற இந்த யுத்தத்திற்கு இந்திய அரசு எந்த வகையில் உதவுகின்றது என்பது தான் புரியாமலுள்ளது.

இலஙகை - இந்திய ஒப்பந்தம் குழப்பியடிக்கப்பட்டதற்கு விடு தலைப் புலிகள் பிரேமதாச, ராஜீவ் காந்தி ஆகியோர் முக்கிய கர்த்தாக்கள்.

ஆரம்பத்திலிருந்தே விடுதலைப் புலிகள் இலங்கை - இந்திய ஒப்பந் தத்தை எதிர்த்தே வந்துள்ளார்கள். ''நாங்கள் அதை ஒரு சாதகமாக பயன்படுத்தலாம்'' என கூறி ஏற்றது. பின்னர் தேர்தலில் கலந்து கொண்டமை, வெற்றிபெற்ற எமது வேட்பாளர்களை பாராளுமன்றம் செல்லவிடாது தடுத்தமை, எமது ஜனநாயக நீரோட்டத்துக்கான செயற்பாடுகளை ஏற்றுக்கொள் ளாமை என்பனவே விடுதலைப் புலிகளுக்கும் எமக்குமான முரண் பாடுகளை தோற்றுவித்தன.

ஆயுதங்களை ஒப்படைத்து ஜன நாயக வழிக்கு வந்த இந்த பத்து வருடகாலத்தில் நாம் தமிழ் மக்களுக்கு எதையுமே செய்ய வில்லை. ஆயுதங்களை ஒப்படைத்த தையிட்டு நாம் சலிப்படைந் திருக்கின்றோம். அதேநேரம் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த ஆயுதங்களையிட்டு இன்று மிகவும் சலிப்படைந்தவர்களாகவுள்ளதையும் உணர்கின்றோம். ஒரு வேண்டத் தகாத பொருளாகவே அதனைப் பார்க்கின்றார்கள். ஏனெனில் அந்தளவு துயரப்பட்டுள்ளார்கள்.

இலங்கையிலுள்ள அனைத்து தேசிய சக்திகளும் இன்றைய நெருக்கடியை உணர்ந்து தீர்வு காணத்தவறினால் விடுதலைப் புலிகளின் போராட்டத்தை தமிழ் பேசும் சமூகம் அங்கீகரித்து ஏற்றுக் கொள்ளத்தான் போகிறது. அதைத் தவிர வேறு வழி இன்றைய நிலை யில் தமிழ் மக்களுக்கு இல்லை யென்பதைத்தான் சொல்லக்கூடிய தாகவுள்ளது.



## இந்தியாவின் விசுவாசத்தை ஸ்ரீ பெரம்பதூர் குண்டு சிதறடித்து விட்டது!

– ஸ்ரீகாந்தா

ஸ்ரீகாந்தா - தமிழீழ விடுதலை இயக்கம்

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அன்றைய நிலையில் ஆதரிப் பதைத்தவிர வேறெந்த முடிவுக்கும் வரமுடியாது. அதைக்கூட ஒரு நிபந்தனையுடன் தான் ஏற்றுக் கொண்டோம். குறிப்பாக கிழக்கில் சர்வஜன வாக்கெடுப்பு எந்தச் சந்தர்ப்பத்திலும் நடத்தக்கூடாது என்பதாகும்.

அந்த நேரத்தில் புலிகள் தவிர்ந்த எல்லாத் தமிழ் அமைப்புக்களும் பலவீனப்பட்டிருந்த காலகட்டம். அதைவிட இந்தியாவைத் தவிர வேறு யாரையும் நாம் நம்ப முடியாமலிருந்த காலகட்டம். இந்தியா எமது நண்பன் என்ற அடிப்படையில் தான் ஆதரவு நல்கி னோம். அதைவிட இது ஒரு இடைக்கால தீர்வேயாகும்.

நிச்சயமாக அன்றைய சூழ்நிலை யால் நாம் இதை தமிழர் நலனில் அக்கறை கொண்ட ஒன்றாகவே ஏற்றுக்கொள்கிறோம்.

பிரேமதாச அரசின் நிர்ப்பந்தம் புலிகளின் நெருக்கடிகள் போன்ற வற்றின் மத்தியில் இந்தியப்படைகள் வெளியேறியதிற்கு பின்னரும் இந்தியா எமது விடயத்தில் விசு வாசத்துடன் தான் செயற்பட்டது. ஸ்ரீபெரும்புத்தூரில் வெடித்த குண்டுடன் எல்லாம் சிதறிப் போய் விட்டதென்றே சொல்வேன்.

அந்த நேரத்தில் ஆயுதங்களை ஒப்படைப்பதைத் தவிர வேறுவழி இருக்கவில்லை. ஆயுத ஒப்படைப்பு என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செய்யப்பட்ட விடயமே மீண்டும் எமது கரங்கள் ஆயுதங்களைத் தழுவாது என்று அர்த்தம் கொள்ளலாகாது.

பத்து வருட காலத்தில பலவேறு ஏமாற்றங்களை சந்தித்திருக்கிறோம். எமது மக்களுக்கு ஒரு நிம்மதியான சுபிட்சமான வாழ்க்கையை அமைத் துக் கொடுக்க முடியவில்லை என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

புலிகள் இந்திய அமைதிப் படைக்கு எதிராக ஆயுதம் ஏந்தியிருக்கா விட்டால் இன்று நிலைமை எவ்வாறு இருந்திருக்கும் என்பதை நான் சொல்லித்தான் தெரிய வைக்க வேணுமென்றில்லை. தொடர்ச்சி யான இவ்வாறான தவறுகள் தான் இன்றைய எமது நிலைக்கு காரணம். இன்னும் கூட நாம் ஜனநாயக வழியில் முற்றுமுழுதாக நம்பிக் கையை இழந்துவிடவில்லை. ஜன நாயக கூட்டமைப்புக்கூடாக இன்றைய நெருக்கடியை தீர்க்கலா மென்பது பலவீனமடைந்த நிலையிலும் கூட அற்றுப்போக வில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்தியா - இலங்கை ஒப்பந்தம் தமிழர்களுடைய போராட்டத்தை திசை திருப்புவதற்கு தான் கொண்டு வரப்பட்டது என்றால் நிச்சயமாக இல்லை. அதே நேரம் இந்தியா செய்த மிகச்சிறந்த செயல் என்று கூட நான் சொல்லவில்லை. இலங்கைத் தமிழர்களின் நலனை மனதில் வைத்துக் கொண்டே இந்தியா இவ்ஒப்பந்தத்தை செய்தது உண்மையாகும்.

இதை நாமெல்லாம் மறந்தது ஒரு நன்றி மறந்த செயலென்றே சொல்வேன். ஆனால் இதில் சில குறைபாடுகள் இருந்தன. இடை வெளிகள் இருந்தன. இது நடை முறையில் இருந்திருந்தால் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கும் இலங்கை - இந்திய ஒப்பந்தம் செழுமைப் படுத்தப்பட்டிருக்கும்.

இந்தியா தார்மீகக் கடப்பாட்டின் மூலம் எமது நெருக்கடிக்கு மீண்டும் தீர்வுகாண வரவேண்டும் என்பதே எமது வேண்டுகோளாகும்.

இந்தியா தொடர்ந்தும் தமிழர்களின் நெருக்கடியான இந்நிலைமையை உலகின் எங்கோ ஓர் மூலையில் நடக்கின்ற பிரச்சினையாக தொடர்ந் தும் பார்த்தால் அது தென்னிலங்கை யிலுள்ள யுத்தத்தின் மூலம் தீர்வைத்தேடும் இனவாத சக்திக ளுக்கு மிகவும் சாதகமான தொன்றாக அமைந்துவிடும். இந்தியா எமக்கு கை கொடுக்கா விட்டால் எமது மக்களை காப்பாற்ற எவருமே முன்வரமாட்டார்கள்.

இந்தியா எமது மக்களை காப்பாற்ற முன்வராமல் தொடர்ந்தும் காலம் கடந்துமென எமது மக்கள் உணர் வார்களாயின் இதனால் தோற்கடிக் கப்படுவது எமது மக்கள் மட்டு மல்ல. இந்தியாவின் அரசியல் பூகோள நலன்களுமேயாகும்.

புலிகளை பேச்சுக்கு அழைக்காத எந்த அரசியல் நாடகமும் நிச்சய மாக தீர்வைத்தரப்போவதில்லை. எமது அமைப்புக் கூட பல தடவை களில் புலிகளால் தாக்கப்பட்ட சம்பவங்கள் நிறையவே நடந்துள் ளன. அது ஒரு வேதனையான விடயம்.

புலிகளை புறக்கணித்துவிட்டு கொண்டுவரப்படும் எந்தத் தீர்வும் நிச்சயமாக இந்தப் போருக்கு முற்றுப்புள்ளி வைக்காது. எனவே எவ்வாறெனினும் புலிகளையும் அழைத்து நடத்தப்படும் ஒரு பேச்சுவார்த்தையே நிரந்தர நெருக் கடிக்கு ஓர் தீர்வைத்தரக்கூடிய தொன்றாக இருக்கும்

சுரேஷ் பிரேமச்சந்திரன்

(ஈழ மக்கள் புரட்சிகர விடுத்லை முன்னணி)

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஒரு இடைக்காலத் தீர்வாகவும், போராட்டம், தனது திசையை மாற்றிக்கொண்ட இக்கால கட்டத் தில் இவ்வொப்பந்தத்தை ஏற்று அதற்கூடாக எமது சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்கக் கூடிய ஒரு கட்டத்துக்கு போகலாமென்ற அடிப்படையிலும் தான் இதை நாம் ஏற்றுக் கொண்டோம்.

முழுமையான அதிகாரங்களை பெற்றுத்தந்தது என்று நாம் சொல்ல வில்லை. இதை ஒரு இடைக்கால தீர்வாக ஏற்றுக் கொண்டோம். இதில் முக்கியமென்னவென்றால், வட கிழக்கு இன்னமும் இணைந்திருப்ப தாகும். இல்லையேல், இன்னமும் வடக்கு வேறு, கிழக்கு வேறாகத் தானிருந்திருக்கும்.


வடகிழக்கு மாகாண சபை கலைக் கப்பட்டது புலிகள் மாகாண சபையை விரும்பாதது போன்ற காரணங்கள் இன்று வடகிழக்கு மாகாணசபை இல்லாமல் போய் விட்டது. இல்லையேல் வடகிழக்கு மாகாண சபை அரச கட்டுமா னங்களினூடு சுயநிர்ணய உரி மையை வென்றெடுப்பதற்கான பல்வேறு விடயங்களை எம்மால்







## இந்திய இலங்கை ஒப்பந்தம் செய்... ஆயுதமேந்தி போராடிவந்த இயக்க... புலிகள் இதில் விதிவிலக்கு. அவ்... பலாபலன்கள் தொடர்பாக...



## முஸ்லிம்களைக் கணக்கெடுக்காத ஒப்பந்தம்!

–சேகு இஸ்ஸதீன்

## கௌரவ... இந்தியா... கி...

செய்திருக்க முடி... இந்திய அரசு ... களிலிருந்து இ... கலாம். அதை... அரசும் தனது ... பார்த்திருக்கலா... இதைத்தமிழர்க... ஒப்பிட்டே பார்...

மு. சிவசிதம்ப...

( தமிழர் விடு...

இனப்பிரச்சி... கடியைத் தீர்ப்... யாவை நல்லெ... அணுகினோம். ... பினார்கள். பே... படிக்கை கைச்ச...

இந்தியாவின் ... படையில் இ... உருவாகியிரு... இந்த நிலைமை... இந்தியாவின் ... யுடன் ... தியை மேம்படு... இடையில் எல்... பட்டு விட்டது...

சேகு இஸ்... மரைக்கார்

(முஸ்லிம் கட்...

இலங்கை ... வடகிழக்கில் ... மக்களை ஒரு... இனமாகவோ ... களாகவோ ... தனித்துவமு... காரமுள்ளவ... படவுமில்லை...

வடகிழக்கு ... முக்கிய சக்தி... எல்.எப்பின் ... மிஹ்லார், ரூ... போது முஸ்... மாகாணம் ஒ... அது பற்றி ... கூறினார்.

ஆனால் அ... எவ்வாறு இ... பற்றி கூறவி... எல்.எப். தலை...

உரைய...

www.tamilarangam.net





...மான தீர்வு
...னாலேயே
...க்கும்!
...ரேஷ்

...ஓ.
...னுடைய நலன்
...ப்பார்த்திருக்
...பால் இலங்கை
...னோடு ஒத்துப்
...ஆனால், நாம்
...நலன்களுடன்
...ாம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் போது பரிமாறப்பட்ட கடிதங்கள் கூட இந்தியா தனது நலனில் அக்கறை செலுத்தியிருப்பதை காட்டுகிறது. ஆனாலும் ஜே.ஆரை இந்தியா நிர்ப்பந்தித்தது.

புலிகள் ஏன் இவ்வொப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அவர்கள் தான் சொல்ல வேண்டும். ஆனாலும் அதை அவர்கள் தமிழர்களின் நலன்கள் என்பதை விட தங்களின் நலன்களிலிருந்து பார்த்தார்கள் என்பதே உண்மை.

எங்களுடைய போராட்ட வடிவம் என்பது வெறும் தமிழர்களுடன் மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. அது இந்த பிராந்திய, பூகோள அரசியலோடு பின்னிப் பிணைந்துள்ள ஒன்றாகும்.

இலங்கை அரசு சட்ட ஒழுங்குப் பிரச்சினைகள் கூட இழுத்தடித்துக்கொண்டு வந்ததை ராஜிவ் காந்தி நன்கு உணர்ந்திருந்தார்.

இந்தியாவை பகைவனாகப் பார்க்காமல் நண்பனாக தொடர்ந்திருந்தால் நாம் கூடுதலான விடயங்களை சாதித்திருக்கமுடியும். ராஜிவ் காந்தியின் கொலைக்கு பின்னர் எமக்கு குரல் கொடுக்கக் கூடிய எல்லா சர்வதேச சக்திகளையும் நாம் இழந்து விட்டோம் என்பதுதான் உண்மை.

நாம் ஆயுதங்களை ஒப்படைத்தது அந்தச் சந்தர்ப்பத்தில் அந்தச் சூழ்நிலையில் சரியே. ஆனால் அதற்கு பின்னரான மிக மோசமான நிலைக்கு முழுப்பொறுப்பையும் எடுக்க வேண்டியது தமிழீழ விடுதலைப்புலிகளே.

தூரநோக்குடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இதை சரியான மாதிரி பயன்படுத்தி இருந்தால் இன்னும் கூடுதலான உரிமைகளை நாம் நிச்சயமாக பெற்றிருக்கலாம்.

நாம் மிக குறைந்த காலமே வடகிழக்கு மாகாண சபையில் இருந்தோம். இக்காலகட்டத்தில் பாரிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தோம். வடகிழக்கு மாகாண அரசியல் நிர்வாகத்தை திருமலையை தலைமையைக் கொண்டு ஸ்தாபித்தோம். அதே ஒரு பெரிய விடயம் தான். இதைக்கூட புலிகளின் மரண அச்சுறுத்தலுக்கும், மத்திய அரசின் நெருக்கடிக்கும் மத்தியில் தான் நிறைவேற்றினோம்.

வடகிழக்கு இணைப்புப்பற்றி எக்கால கட்டத்திலும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படமாட்டாது என எமக்கு ராஜிவ் காந்தியால் உறுதியளிக்கப்பட்டது. அதைவிட பேசிமுடிக்கப்படாத இன்னும் பல விடயங்கள் இருந்தன. பின்னர் அதற்குரிய சூழ்நிலை இல்லாமல் போய்விட்டது.

இந்தியத்தலையீடு அவசியமற்றது என்று சொன்ன பெரும்பான்மையானவர்கள் இன்று அது தேவையென்று உணர்கிறார்கள் என்பதே உண்மை: நானும் நிச்சயமாக அதைத்தான் சொல்கிறேன். தமிழ் மக்களுக்கு ஒரு கௌரவமான தீர்வு அவசியமெனில் அது இந்தியாவால் தான் சாத்தியப்படுத்தப்பட முடியும்.

இன்றைய நெருக்கடியில் இலங்கை அரசுக்கு இந்திய அரசு எவ்வாறு உதவுகிறது என்பது எனக்கு தெரியாது. ஆனால் தமிழர்கள் விடயத்தில் பாராமுகமாக இருக்கிறார்கள் என்பது உண்மையே. தமிழர்கள் கொல்லப்படுவது, இங்கு நடக்கும் மனித உரிமை மீறல் விடயங்கள் போன்றவற்றில் இன்றைய இந்திய பிரதமர் குஜ்ராலும் இந்திய அரசும் அக்கறை செலுத்தவில்லை என்பது உண்மையே.

இந்திய அரசு எமது நலனில் அக்கறை செலுத்தாமைக்கு முக்கிய காரணம் நாம் விட்ட தவறுகள் தான். குறிப்பாக புலிகளால் மேற்கொள்ளப்பட்ட ராஜிவ் காந்தி படுகொலையை குறிப்பிடலாம். புலிகளுக்கு எதிரான போக்கு தமிழர்களுக்கு எ[illegible]ரான போக்காக மாறிவிட்டது.



## நழுவவிடப்பட்ட பொன்னான வாய்ப்பு

**- டக்ளஸ்**

## தமிழர் நலனுக்காக செய்யப்பட்டதல்ல

**- குமார்**

டக்ளஸ் தேவானந்தா

(ஈழ மக்கள் ஜனநாயக முன்னணி)

இலங்கை இந்திய ஒப்பந்தம் ஒரு பொன்னான வாய்ப்பு. அதை நாமெல்லோரும் நழுவவிட்டு விட்டோம்.

இந்தியபபடை வருவதற்கு முன்பு (நான் ஈ.பி.ஆர்.எல்.எவ். இல் இருந்த போது) ஈரோஸ் புலிகள் நாங்கள் பேசிய போது கூட இந்தியப்படை வந்தால் அந்தப் பேரலையை நாம் எதிர்க்காமல் எல்லோரும் ஐக்கியப்பட்டு அவர்களை எல்லைப்புறங்களுக்கு அனுப்பிவிட்டு அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நாம் எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லலாம் என்றே கூறினேன். இதையே ஈரோசும் கூறியது.

அன்று இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்டோமோ இல்லையோ, ஆனால் இன்றும் கூட அதை ஒரு ஆரம்பமாக முன்னெடுத்து செல்லலாம் என்பதே எமது நிலைப்பாடு. அன்று நாம் பங்கேற்காததிற்கு காரணம் அன்றைய சூழ்நிலையில் எங்களுக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. அந்த வாய்ப்பு புலிகளுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ். க்கும் தான் கிடைத்தது. அவர்கள் இருவரும் அதை சரியாக பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று தான் சொல்வேன்.

அரசின் தீர்வுப்பொதியை குழப்பியடிப்பதற்காகவே நமது திருத்தச் சட்டத்தை வலியுறுத்த இந்தியா என்னைப் பாவிக்கிறது என்ற குற்றச்சாட்டு முற்றிலும் உண்மைக்கு புறம்பான ஒன்றாகும்.

அண்மையில் இந்தியாவுக்கு சென்ற போது கூட இந்தியாவின் முக்கிய தலைவர்களை சோனியா காந்தி, சந்திரசேகரன், வாஜ்பாய் போன்றவர்களை புதுடில்லியில் சந்தித்தேன். அவர்கள் தமிழர் பிரச்சினையில் அக்கறையற்றவர்களாக தென்படவில்லை.

வடகிழக்கு மக்களின் பிரச்சினையும் இலங்கையின் ஏனையபகுதி மக்களின் பிரச்சினையும் வெவ்வேறானவை. அதிகாரப்பரவலாக்கல் என்பது நாடுதழுவியது. ஆனால் வடகிழக்குக்கு விசேட அதிகாரங்கள் தேவை என்பதே எமது நிலைப்பாடாகும்.

அதிகாரப்பரவலாக்கல் என்பது ஒரு விடயம். இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது ஒரு விடயம். ஆகவே இவை இரண்டும் இணைந்ததாகவே வடகிழக்குக்கான தீர்வு அமைய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

13 வது திருத்த சட்ட மூலத்தை நாம் வலியுறுத்துவதன் அவசியமென்னவென்றால் பொது ஜனமுன்னணியும், யூ.என்.பியும் இணைவதற்கான இடம் எங்கே இருக்குதென்றால் 13வது திருத்தச் சட்ட மூலத்தில் தான் இருக்கிறது. ஆகவே இதை ஒரு முதலடியாக எடுத்துக் கொள்ளலாம்.

நாம் ஆரம்பம் முதல் இடைக்கால நிர்வாக சபையை வலியுறுத்தி வந்தது ஏனெனில், வடகிழக்கில் அத்துமீறிய குடியேற்றங்களை தடுத்தல், சீரழிவுகளை சீர்திருத்தல், அழிவுகளை தடுத்தல், இருக்கிற நிர்வாக அமைப்பை பலமுள்ளதாக்கி மக்களின் நாளாந்த பிரச்சினைகளைத் தீர்த்தல் இப்படியான பல விடயங்களை செய்யலாம்.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அன்று நாங்கள் சரியாக நடைமுறைப்படுத்தியிருந்தால் இந்த பத்து வருடகாலத்துக்குள் இன்னும் கூடுதலான உரிமைகளை வென்றெடுத்திருக்கலாம். இன்று இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது.

வெளிநாட்டு மத்தியஸ்தம் என்று சொல்லும் போது ஏன் அது இந்தியாவாக இருக்க முடியாது. இந்தியா என்றால் எங்களுக்கு வாய்ப்புகள் அதிகம். அதைவிட இலங்கை அரசையும் புலிகளையும் ஒரு நிலைக்கு கொண்டுவரக்கூடிய சக்தியும் இந்தியாவுக்கு தான் இருக்கென்று நம்புகிறேன்.

இந்தியாவோ இலங்கையோ அவர்கள் தங்கள் நலன்கள் இல்லாமல் நிச்சயமாய் வரமாட்டார்கள். ஆனால் அதற்கூடாக அதையெல்லாவற்றையும் மீறி எங்கள் உரிமைகளை வென்றெடுக்கலாம் என்பதே எமது நிலைப்பாடு. பாராளுமன்ற ஜனநாயக வழியினூடாக நிறைய சாதித்தோம் என்று சொல்ல வரவில்லை. ஆனால் அதற்கான அடித்தளங்களை இன்றும் இட்டுக் கொண்டுதான் வருகிறோம்.

...லக் கூட்டணி)

...க்கான நெருக்
...காகவே இந்தி
...னத்துடன் நாம்
...ர்களை அனுப்
...ார்கள். உடன்
...னது.
...லண்ண அடிப்
...க்கால அரசு
...ல் இன்றைக்கு
...பட்டிருக்காது.
...ளாதார உதவி
...ன் அ... ருத்
...திருக்கலாம்.
...குழப்பியடிக்கப்
...ல்லாவிட்டால்

எத்தனையோ விடயங்களை நாம் சாதித்திருக்கலாம். ஜே.ஆர். நேர்மையாக நடந்திருந்தால் இவ்வொப்பந்தம் நிச்சயமாக குழப்பியடிக்கப்பட்டிருக்காது. அவர்களைப் பற்றி (புலிகள்) எனக்குத் தெரியாது. 13வது அரசியல் திருத்தச்சட்டத்தில் மேலும் பல திருத்தங்களை செய்வதாக ராஜிவ் காந்தியால் எமக்கு உறுதியளிக்கப்பட்டது. ஆனால் எங்களின் துரதிருஷ்டம் ராஜிவ் காந்தியும் போய்விட்டார்.

இன்றைய சூழ்நிலையில் இந்தியா என்ன பங்களிப்பு செய்யுமென்று எனக்குத் தெரியாது. ஆனால் இந்தியா தலையிட்டு சமாதானத்துக்கான ஓர் அரசியல் தீர்வை காண வேண்டுமென்பதே எனது அவா.

குமார் பொன்னம்பலம்.

(அகில இலங்கை தமிழ் காங்கிரஸ்)

இலங்கை - இந்திய உடன்படிக்கை இந்தியாவின் வான் மார்க்கமான (உணவுப் பொட்டலங்களை தமிழர் பிரதேசங்களில் போட்டமை) அச்சுறுத்தலாலும் தொடர்ச்சியான நெருக்கடிகளினாலுமே ஜே.ஆர். அரசுக்கு ஒரு நிர்ப்பந்தத்தை உருவாக்கி கைச்சாத்திடப்பட்டது.

இருப்பினும் இது தமிழர் நலனுக்கானதல்ல. ஆனாலும் ஒரு சில நலல விடயங்கள் இருந்தன. முக்கியமாக இலங்கைக்கு அப்பாற்பட்ட ஒரு நாடு, வடகிழக்கு பிரதேசம் தமிழர்களின் பாரம்பரிய பிரதேசம் என ஏற்றுக்கொண்டது முக்கியமானதாகும்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, மாகாண சபை அமுல்படுத்தப்பட்டு, 10 வருடங்களாகியும் தமிழ் மக்களைப் பொறுத்தளவில் எவ்வித மாற்றமும் இல்லை.

விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் எந்தக் கட்டத்திலும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆரம்பம் முதல் இதை எதிர்த்தே வந்துள்ளார்கள். சுதுமலைக் கூட்டத்தில் கூட இந்திய அரசை நம்பியே தமிழர்களின் பாதுகாப்பை ஒப்படைக்கிறோம் என்றார்கள்.

இந்தியா இனிமேலும் எமது பிரச்சினையில் தலையிடுமென்ற நம்பிக்கை என்னைப் பொறுத்தவரை இல்லை. இன்றைய நிலைமைகளை பார்க்கும் போது கைவிட்டு விட்டார்கள் என்றே நம்பத்தோன்றுகிறது.

**...ப்பட்டு பத்து வருடங்கள் பூர்த்தியாகி விட்டன. இவ்வொப்பந்தத்தை அடுத்து அதுவரை ...ள் அனைத்தும் ஆயுதங்களைக் கைவிட்டு பாராளுமன்ற ஜனநாயகவழிக்குத் திரும்பின. ...யில் ஏற்பட்ட அனுபவங்கள் தொடர்பாகவும் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தால் ஏற்பட்ட ... தமிழ் கட்சிகளுடன் நடத்திய உரையாடல்களின் முக்கியமான பகுதிகள் இவை.**

...ன், ஜவாத்

...திய ஒப்பந்தம்
...கின்ற முஸ்லிம்
...ப்பட்ட தேசிய
...துவமுள்ளவர்
...பிடவில்லை.
...அரசியல் அங்கீ
...க கருதி செயற்
...ண சபையில்
...ருந்த ஈ.பி.ஆர்.
...தி மருதமுனை
...னியில் பேசும்
...க்கள் முஸ்லிம்
... விரும்பினால்
...கப்படுமென
...ாகாண சபை
...ம் என்பதைப்
...நான் ஈ.பி.ஆர்.
...த்மநாபாவுடன்

பேசும் பொழுது அவரும் அதையே கூறினார். இருப்பினும் வடகிழக்கு மாகாணம் இணைந்து இருப்பதே தமிழ் - முஸ்லிம் சமூகங்களுக்கு பாதுகாப்பானதாகவும் நன்மை பயக்கக்கூடியதாகவும் இருக்கும் எனக் கூறினார்.

இணைந்த வடகிழக்கு மாகாண சபையில் முஸ்லிம்களுக்[illegible] அதிகாரங்கள் எவ்வாறு [illegible]றுக்கப்பட வேண்டுமென [illegible]லோசித்து தீர்வு காணப்ப[illegible] [illegible]மன கூறினார். அதற்கான [illegible]பற்சிகளிலும் நாம் ஈடுபட்டோம். முடிவில் வடகிழக்கு மாகாண சபையும் கலைக்கப்பட்டு விட்டது. பத்மநாபாவும் இன்று இல்லாமல் போய் விட்டார்.

இணைந்த வடகிழக்கு மாகாண சபையில் முஸ்லிம்களின் அதிகாரங்களை பகிர்ந்து கொள்வது பற்றிப்பேசினோம். அதைவிட இந்த இரண்டு நாடுகளுக்குமிடையிலான ஒப்பந்தம் முஸ்லிம் மக்களின் நலனில் பெரிதாக எதையும் செய்ததென்று சொல்வதற்கில்லை.

ஏனைய மாகாண சபைகளுக்கு இருந்த அத்தனை பிரச்சினைகளும் வடகிழக்கு மாகாண சபைக்கும் இருந்தது. அதைவிட ஒரு குறிப்பிட்ட காலமே நாம் இருந்தோம்.

ஈ.என்.டி.எல்.எப் அமைப்பினரால் அலிஉதுமான் சுட்டுக்கொல்லப்பட்டமை, ஈ.பி.ஆர்.எல்.எப். [illegible]மைப்பின் பத்மநாபா போன்றவர்களுக்கு இருந்த புரிந்துணர்வு ஏனைய ஈ.பி.ஆர்.எல்.எப். உறுப்பினர்களுக்கு இல்லாமல் போய், முஸ்லிம் மக்களுடன் முரண்பட்ட சில கசப்பான அனுபவங்களும் எமக்கு கிடைத்தன.

தனித்துவமுள்ள, பிரத்தியேக அடையாளமுள்ள தேசியம் என பத்மநாபா போன்றவர்கள் தான் ஏற்றுக்கொண்டார்களேயொழிய இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளவில்லை.

தமிழர்களாயிருந்தாலென்ன, முஸ்லிம்களாயிருந்தாலென்ன இணைந்த வடகிழக்கின் ஒருமைப்பாட்டுக்கு ஒருத்தருக்கு ஒருத்தர் விட்டுக்கொடுத்து செயற்பட வேண்டும். இல்லையேல் அது முழு தமிழ் - முஸ்லிம் சமூகங்களின் நிலைமையை இன்னும் மோசமானதாக்கும்.

இனிமேலும் இந்தியாவின் தலையீடு என்பதை விட வடகிழக்கின் தமிழ் இயக்கங்கள் முஸ்லிம் அரசியல் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து ஒரு ஒருமைப்பாட்டுக்கு வருமெனில் இந்தியாவின் தேவை இருக்காது என நினைக்கிறேன்

எல்லோருடைய அபிலாஷைகளும் இந்தியாவின் அணுகுமுறையின் மூலம் தீர்க்கப்படுமெனில், அது பரவாயில்லை. ஏனெனில் இப்பிராந்தியத்தில் இந்தியாவின் மேலாதிக்கம் மேலோங்கியுள்ளதையும் நாம் கவனிக்க வேண்டும்.

வடகிழக்கிலுள்ள தமிழ் - முஸ்லிம் கட்சிகளிடையே ஒரு சரியான புரிந்துணர்வு இல்லாமல் யாருடைய மத்தியஸ்தம் இருந்தாலும் அது ஒரு சரியான தீர்வாக இருக்காது என நான் நம்புகிறேன்.


...வர்கள்: வர்மா - ரமேஷ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே... 34



## பிறப்புறுப்புடன் சார்ந்த இன்பங்கள்

டொக்டர் .ஜெயிம் ஜி ஜினோல்ட் - தமிழில்: அருண்

### பால், கழிப்பறை குறித்த பயிற்சி

பால் உறுப்புகளும் கழிவகற்றும் உறுப்புகளும் அருகருகாக இருப்பதால், கழிப்பறைப் பயிற்றுவிப்பு, பாலியல் வளர்ச்சியிலும் ஒரு வித பாதிப்பை ஏற்படுத்துகிறது. இரண்டாவது வயதுக் காலத்தில் குழந்தை மலம் கழித்தலின் போதான சுகத்தில் அதிகம் கவனம் செலுத்துகிறது. அதைப்பொறுத்தவரை அதற்கு அருவருப்பூட்டும் எதுவும் தெரிவதோ, நாற்றமடிப்பதோ இல்லை. மலத்தை அழைவது கூட அதற்கு அருவருப்பாக இருப்பதில்லை. நாம் குழந்தைக்கு கழிவகற்றும் பழக்கங்களை கற்றுத்தரும் போது, அதனது உடலிலிருந்து வெளியேறும் கழிவோ, அதன் உடற்பகுதியோ அருவருப்பானது என்ற உணர்வு அதற்கு தொற்றும் விதத்தில் நாம் செயற்பட்டு விடக்கூடாது என்பதில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். எமது அவசரமான, இறுக்கமான நடவடிக்கைகள், குழந்தைக்கு தமது உடலின் அப்பகுதிகளின் செயல்கள் சந்தோசத்துக்குரியவை அல்ல. மாறாக அச்சத்திற்குரியவை என்று கருத வைத்து விடுகின்றன.

அமைதியற்ற பயிற்றுவிப்பு சுய தோல்வியிலேயே முடிவடையும். குழந்தைகள் இரண்டுவயது வரும் வரை மலம்கழிக்கும் பாத்திரத்திற்கு (Bowl) கட்டுப்பட தயாராக இருப்பதில்லை. மூன்று வயதுவரை சிறுநீர் கழிப்பதில் கட்டுப்பாடு இருக்காது. அடிக்கடி 'விபத்து'க்கள் நடக்க வாய்ப்புண்டு! ஐந்து வயதுவரை இவற்றுக்கு 'வரி' விலக்கு அளிக்கப்பட வேண்டும்.

பயிற்சியின் ஆரம்பகாலங்களின் போது, குழந்தைகட்கு அவர்களது உடலிலிருந்து வெளியேறுபவைகளை அளையாதிருக்கப் பழக்க வேண்டும். ஆனால் இது அவர்களது விருப்பத்தை தடைசெய்வதாக அமையக்கூடாது. அவ்வாறு செய்வது அவசியமானதோ விரும்பத்தக்கதோ அல்ல. அவர்களுக்கு விலக்கப்பட வேண்டிய ஆசைகளை வேறு வழிகளில் செய்ய அனுமதிக்கலாம். மண், கலர், சேறு, களி (அது கபில நிறமாக இருப்பது நல்லது!) என்பவற்றை பிசைய அனுமதிப்பதன் மூலம் அவர்களது மன விருப்பை நிறைவு செய்ய முடியும். இவ்வாறு செய்வது மிகவும் பயனுள்ள ஒன்றாகும். அவர்களது உள்மனதில் இவ்வாறான களித்தன்மையான, பிசையக்கூடிய பொருட்கள் எல்லாம் அவர்கள் விரும்பும் உண்மையான பொருட்களின் பிரதிவிம்பங்களாக தொழிற்படும். இவ்வாறு செய்வதன் மூலம் அவர்களுக்கு பதிலான ஒரு சந்தோசத்தை எம்மால் வழங்க முடியும். இது அவர்களது அசல் சந்தோசத்திற்கு பதிலாக அவர்களுக்கு வேண்டிய திருப்தியை வழங்கும்.

பயிற்சியை குறைவாக வழங்குவதும் கூட சுயதோல்விக்கு இட்டுச் செல்கிறது. குழந்தை கவனிப்பின்றி விடப்படும் போது அது தன்னை நனைத்துக்கொண்டும், அளைந்து கொண்டும் நீண்ட நேரம் இருக்கிறது. குழந்தைக்கு இது சந்தோசத்தைத் தரக்கூடும். ஆனால் அது உண்மையான முடிவின்பின் வரும் சந்தோசத்தை இழந்து விடுகிறது. குழந்தை தயாராகும் போது அதற்கு அன்பாகவும் தெளிவாகவும் நாம் அதனிடம் எதை எதிர்பார்க்கிறோம் என்று சொல்லிவிட வேண்டும். ''நீங்க்ள் சின்ன குழந்தையாக இருக்கும்போது அப்படிச்செய்வது முசுப்பாத்தியாக இருக்கும். உங்களது உடுப்புக்குள் சூடான உணர்வு ஏற்படுவதை நீங்கள் விரும்பக்கூடும். ஆனால் அது இனியும் எமக்கு வேண்டியதில்லை, இப்போது நீங்கள் அதை அந்தப் பாத்திரத்தினுள் (Potty) செய்ய வேண்டும்.

பயிற்சிக்காலங்களின் போது குடலை சுத்தம் செய்யும் அல்லது குதவழியாக வெப்ப நிலையை அளவிட வேண்டிய நிலைவந்தால் விஷேட கவனத்துடன் செய்ய வேண்டும். கடுமையான அல்லது தொடர்ச்சியான இவ்வாறான செயற்பாடுகள் குழந்தைகளை மிகவும் பயத்துக்குள்ளாக்கி விடுகிறது. இது பிற்காலத்தில் பெரிதாக வளர்ந்த பின்னும் உட்புகுத்துதல் குறித்து அச்ச உணர்வுள்ளவர்களாக்கிவிடும்.

அடிக்கடி கையால் அடித்தல் கூட, பால் வளர்ச்சியில் ஒரு எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தி விடுகிறது. பால் உறுப்புக்கள் அருகருகாக இருப்பதால், பிட்டப்பகுதியில் அடிக்கும் போது அது குழந்தை பாலியல் ரீதியான தூண்டுதலுக்கு உள்ளாகி விடக் காரணமாகின்றது. இது, இவ்வாறு அடிவாங்குவதற்காகவே தவறான செயல்களில் ஈடுபடவைக்கிறது. அன்புக்கு அடி ஒரு முன் நிகழ்வாக அமைய வேண்டும் என்று அது கருதத் தொடங்குகிறது. இது வளர்ந்த பின்னும் தொடர்ந்து நிலைக்கும் ஒன்றாகும். பல வளர்ந்த சோடிகளுக்கு, இனிய இரவுக்கு ஒரு நல்ல சண்டை தேவைப்படுகிறது!


### பிறப்புறுப்புடன் சார்ந்த இன்பங்கள்

குழந்தைகள் உடல்ரீதியாகவும், மனோரீதியாகவும் வளர்ச்சியடைந்து வரும் போது, தமது பிறப்புறுப்புகளில் மிக அதிகமான இன்பமூட்டும் கிளுகிளுப்பு உணர்வுகளை உணரத் தொடங்குகிறார்கள். இவ்விடத்திலும் நாம் குழந்தைகள் எந்தவித குற்றவுணர்வுக்கும் ஆட்படாது தமது உடல் ரீதியான உணர்வுகளை கொண்டிருக்க அனுமதிக்க வேண்டும். உண்மையில் இந்தக் காலத்தில் தான் முன்னெப்போதையையும் விட அதிகளவுக்கு எமது அன்பான வழிகாட்டல் அவசியமாகும். குழந்தையின் இன்பமூட்டும் உணர்வுகள், உளவியல் ரீதியில் ஆபத்தாக அமையாமலிருக்க எமது அன்பான வழிகாட்டல் அவசியமாகும்.

ஒரு பெண்குழந்தை தனது பெண்குறியின் மேடான பகுதியை (Clitoris) தனது தாயாருக்குக் காட்டி 'இதுதான் எனக்கு மிகவும் அதிக உணர்ச்சியை ஊட்டும் பிரதேசமாக உள்ளது' என்று கூறும் போது மிகுந்த நிதானமாக, புத்திசாதுரியத்துடனும், உண்மையாகவும் பதிலளிக்க வேண்டியது அவசியம். 'ஐயோ.. தொடாதே அதிலே' என்று கத்துவது கூடாது. மாறாக, உண்மையில் குழந்தை சாதாரணமான வளர்ச்சியை அடைந்து விட்டது; வாய் மூலமானதாகவோ, அல்லது மலவாசலுடன் சம்பந்தப்பட்டதாகவோ அல்லாமல் அதன் இன்ப உணர்வு பிறப்புறுப்புகளுடன் சம்பந்தப்பட்டு வருகிறது என்பதை அது தெரிந்து கொண்டிப்பது சரியானதே என்ற உண்மையை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

வரும்...

# பலஸ்தீன் போராளி பற்றிய நூலும் வேறு சில குறிப்புகளும்



உலகெங்கினும் இடம்பெறுகின்ற ஆக்கிரமிப்புக்கெதிரான போராட்டங்களில் பலஸ்தீன விடுதலைப் போராட்டம் அதிக கவனம் பெற்றதாக உள்ளது.

அத்துடன் இந்த 97ம் ஆண்டு, பலஸ்தீன மண்ணுக்கெதிரான திட்டமிட்ட ஆக்கிரமிப்பின் நூறாவது ஆண்டாகவும் உள்ளது. ஜெரூஸலத்திலுள்ள பைதுல் மக்திஸ் எனும் புனித நகரை தலைநகரமாகக்கொண்டு, உலகெங்கும் சிதறி வாழ்கிற யூதர்களை ஒன்று திரட்டி ஒரு தாயகத்தில் வாழவைக்கிற ஆரம்ப முயற்சி 1897ம் ஆண்டு நடைபெற்றது. ஆக்கிரமிப்பு இன்று நூறு வருடங்களை வெற்றிகரமாகக் கொண்டாடுகிறது.

இந்த இடைக்காலத்தில் பலஸ்தீனில் இடம்பெற்ற போராட்டங்கள், போராட்டங்கள் உருவாக்கிய கவிஞர்கள், போராளிகள் என நாம் பலரை அறிந்திருக்கிறோம்.

போராட்ட இலக்கியத்தில் பலஸ்தீனக் கவிதைகளின் தாக்கம் முதன்மை பெற்றுக் காணப்படுகிறது. மஹ்மூத் தர்வீஷ், சமி அல்காஸிம்.. போன்று எத்தனையோ போராளிக் கவிஞர்களை நாம் எம் தாய் மொழி மூலம் அறிந்திருக்கிறோம். எம்.ஏ.நுஃமான், முருகையன் (பலஸ்தீனக் கவிதைகள்) யமுனா ராஜேந்திரன், சி. சிவசேகரம், பண்ணாமத்துக் கவிராயர் என பலர் இவர்களை எம் உலகுக்கு கொண்டு வந்திருக்கிறார்கள்.

மஹ்மூத் தர்வீஷின் அண்மைக்கால (1995) கவிதையொன்று சமாதானத்துக்கான தாராள விட்டுக்கொடுப்புக்கு முன்வருகிறது.

*".... அவர்கள் எங்களிடம் கேட்பவை, கேட்காதவைகள்*
*எல்லாவற்றையும் கொடுத்து*
*சமாதானத்தை நான் எடுத்துக் கொள்வேன்,*
*சமாதானம் - நிலத்தினை விடவும்*
*உறுதியானது, வளமானது, பலமானது.*
*அவர்கள் கஞ்சர்கள்,*
*நாங்கள் தாராளவாதிகள், மிகு தர்மர்கள்....*
*... சமாதானம் நீடூழி வாழட்டும்..."*

இது போன்ற ஒரு சமாதானக் கவிதையை நுஃமான் சரிநிகரில் எழுதியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

ஆக, போராட்டம், பல்வேறு வடிவங்களூடே பல்வேறு பரிமாணங்களை பரிணாமங்களை பெற்றுச் செல்கிறது என்று பொதுவாக சொல்லலாம்.

இந்தப் போக்கில், இலக்கியத்தில் நிலைத்தவர்கள் போல போராட்டத்தில் நிலைத்தவர்களும் பலர் இருக்கிறார்கள். இதில் எமது தசாப்தத்தில் குறிப்பிடத்தக்கவர் 'ஹமாஸ்' இயக்கத்தைச் சேர்ந்த 'இன்ஜினியர்' எனப்படும் யஹ்யா அய்யாஷ் எனும் இளைஞராவார்.

இவர் பற்றி இங்கு விஷேடமாகக் குறிப்பிடக் காரணம் இவர் பற்றிய வாழ்க்கை நூலொன்று 'நாவலாக' இலங்கையர் ஒருவரால் எழுதப்பட்டுள்ளமையாகும்.

'பூகம்பம்' எனும் தலைப்பில் 'ஆஸிம் அலவி' என்பவர் பல ஆய்வுத் தகவல்களுடன் இதை எழுதியுள்ளார். இது நாவலென்றே குறிப்பிடப்படுகிறது. எனினும் நாம் தமிழ் நாவல் இலக்கியப் பின்னணியில் பார்க்கையில் கேள்விகள் எழும்புகின்றன. (தமிழில் நாவல்களே இல்லையென்றமாதிரியான விவாதங்கள், சர்ச்சைகள் தமிழ் இலக்கிய உலகில் தோன்றியிருக்கிறது. ஜெயமோகனின் 'நாவல்' என்ற நூல் இதற்கு அடித்தளமிட்டது எனலாம். பல்வேறு கருத்துக்கள் இருப்பினும் அதை வாசிப்பது நாவல் பற்றி அறிய உதவும்)

'பூகம்பம்' எனும் நூலை நாம் தமிழ் மொழியிலான இஸ்லாமிய நவீனமெனலாம். இஸ்லாமிய இலக்கியம் கருத்து, கொள்கை நிலைப்பட்டது. எந்த மொழியாயினும் மொழி அதற்கான ஊடகமே. இந்நூலும் இவற்றின் அடிப்படையிலேயே எழுதப்பட்டுள்ளது. மறுபக்கம், மொழியென்று பிரதானப்படுத்திப் பார்க்கையில் தமிழ்(மொழி) இலக்கியத்திலும் இது கருத்திற் கொள்ளப்படவே வேண்டும். விமர்சனங்களுக்குட்படவும் வேண்டும்.

பலஸ்தீன போராட்டத்தைப் பற்றிய ஆரம்பத் தகவல்களுட்பட பல விடயங்களை இந்நூல் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

முன்னரும் லிபிய சுதந்திரப் போராட்டவீரர் 'உமர் முக்தாரி'ன் வரலாறும் நாவல் வடிவில் தமிழில் வந்ததும் குறிப்பிடத்தக்கது. சிலுவைப் போர் வீரர்களை பிரதானப் படுத்திய 'நாவல்களும்' வந்துள்ளன. இந்த வரிசையில், இந்நூலை அடக்கலாம் வேறு சில சிறப்பு அடையாளங்களுடன்.

185 பக்கங்களைக்கொண்ட, 100/= பெறுமதியான இந்நூலை இலங்கை - பலஸ்தீன நட்புறவுச் சங்கம் வெளியிட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## தொடரும் விவாதம்:

# பெண் புலிகளும் பெண் விடுதலைப் பிரச்சினையும் ராதிகாவுக்கு ஓர் பதில்

-வளவன்



பெண்களுக்கு எதிரான வன்முறை பற்றிய ஐ.நா சபையின் விசேஷ அறிக்கையாளராகப் (Special Rapporteur) பணியாற்றும் கலாநிதி ராதிகா குமாரசாமியின் பெண்புலிகள் குறித்த கட்டுரைகள் தங்கள் பத்திரிகையில் வந்திருந்ததைப் படித்தேன். இவை தொடர்பாக, தமிழர் தாயகத்தில் நிலை கொண்டு, பெண் புலிகளை நேரடித் தரிசனமாகக் காண்கின்ற நான், எனது கருத்துக்களைக் கூறுதல் கடமையாகிறது. அல்லாது போனால், மேதாவிலாசத்துடன் ரா.குவால் கூறப்பட்ட தவறான பல கருத்துக்கள் உண்மையென உலா வரும். அவரின் கட்டுரைகளின் விசேஷம் என்னவென்றால், வடக்கு கிழக்கிற்கு ஒருதடவையாவது வந்து பெண்புலிகளைச் சந்திக்காது எழுதப்பட்டவைதான். கேள்விப்பட்டவை, புகைப்படங்களில் பார்த்தவை, நூல்கள், வெளிநாட்டு ஆய்வாளர்களின் அறிக்கைகள், பி.பி.சி. போன்ற செய்தி நிறுவனங்களின் விவரணப்படங்கள் ஆகியவற்றை வைத்துக்கொண்டு எழுதப்பட்டதில்தான் அவரின் மேதாவிலாசம் புலப்படுகின்றது. எனவேதான் அவரின் கட்டுரைகளுள் பல்வேறு முரண்பாடுகள் காணப்படுகின்றன.

ஒரு தடவை, பெண் புலிகளால் ''தமிழ்ச் சமூகத்தின் இயங்கியலே மாற்றத்திற்குள்ளானது'' என்கிறார். பின்னர், ''இந்த மாற்றங்கள் கருத்தியல் ரீதியான மாறுதலாக உள்வாங்கப்படவில்லை'' என்கிறார். ''தமிழ்ச் சமூகத்தினது மாற்றமெல்லாம் ஓர் இடைக்கால மாற்றமாக இருக்கிறதைப் புரிந்து கொள்ளலாம்'' என்று தெரிவிக்கும் அவர், ''சில மாறுதல்கள் நிரந்தரமானதாகக் கூட மாறும் சூழலும் உள்ளது'' எனக் குழம்புகிறார். இவரது மேலெழுந்தவாரியான ஆய்வினால், இவர் பெண் புலிகள் பற்றிய தனது கருத்துக்களைத் தொடர்ந்து மாற்றிக்கொண்டிருப்பார் என்பதற்கு ஆதாரங்களாக இவை காணப்படுகின்றன. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், இது ஒரு சந்தர்ப்பவாத எழுத்து என்று துணிந்து கூறலாம். உள்ளும் வெளியும் கலந்து நேரடி அனுபவமாக எழுத்துகள் வெளிவரும் இக்கால கட்டத்தில் இது வாசகர்களை முட்டாள்கள் ஆக்கும் விசித்திரமான முனைப்புத்தான் எனக் கொள்ள வேண்டியுள்ளது.

### *நீதியான வன்முறை:*

சமாதான தேவதைகளுக்குரிய அற்புதமான வார்த்தைப் பிரயோகங்களை ரா.குவும் கையாள்கிறார். ''நாம் மனித உரிமைகளில் கரிசனை கொண்டவர்கள்...'', ''எந்த வடிவத்திலான முரண்பாட்டையும் தீர்ப்பதற்குப் பலாத்காரத்தைப் பயன்படுத்துவதற்கு நான் உடன்பாடில்லை...'', ''ஒரு தமிழ் மனிதாபிமானத்தின் தெளிவான குரல் அவர்களின் செவிகளில் ஒலித்தல் வேண்டும்'' ''மனித உரிமைகளுக்காகவும், பன்மைத்துவத்துக்காகவும் போரிடும் அர்ப்பணிப்பு உணர்வு கொண்ட எம்மைப் போன்றவர்களுக்கு இனத்துவப் பெருமை மற்றும் தேசிய சுயநிர்ணயம் என்பவற்றை விட முக்கியத்துவம் கூடிய உலகளாவிய விழுமியங்கள் உள்ளன''

மேற்காட்டியவை வன்முறை ஒடுக்குதலுக்கு உள்ளாவோர், தமது இருப்புக்காகவும், விடுதலைக்காகவும் எதிர்வன்முறையை (Counter Violence) பிரயோகிப்பதைத் தடுக்கின்ற போலியான கருத்துக்கள். குடும்பத்திலோ, சமூகத்திலோ, தேசத்திலோ, சர்வதேசத்திலோ இத்தகு நீதியான, தற்காப்பான வன்முறை, தார்மீக ரீதியாகவும், சட்டரீதியாகவும் அங்கீகரிக்கப்பட்டே உள்ளது. வீட்டில் கணவனோ அல்லது கணவன் குடும்பத்தாரோ சீதனம் கேட்டுப் பெண்ணை அடித்துத் துன்புறுத்துவது மாத்திரமல்ல, பெற்றோல் ஊற்றிக் கொழுத்திய சம்பவங்கள் நிறைய உண்டு. சிங்கள இராணுவத்தினர் கோஷ்டியாகப் பெண்களை பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்திக் கொலை செய்வது தமிழீழப் பகுதிகளில் சர்வசாதாரண நிகழ்வுகளாகி விட்டன. இத்தகு வேளைகளில், சாந்தத்தையும், சகிப்புத்தன்மையையும் பெண்கள் கடைப்பிடிக்குமாறு ரா.கு. அறிவுரை கூறுகிறாரா? சில சந்தர்ப்பங்களில் சிங்கள, இந்திய இராணுவக் காடையர்களுக்கு எதிராக தமிழீழப் பெண்கள் தம் கையில் கிடைத்த ஆயுதங்களைப் பயன்படுத்தி விரட்டியதை அறிகிறோம். இவ்வெதிர் வன்முறையை உண்மையான மனிதாபிமானிகள் பாராட்டவே செய்வர் சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளைப் பிரயோகிப்போருக்குக் கடும் தண்டனை வழங்கப்பட வேண்டும் என ரா.கு. ஐ.நா. சபை மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அண்மையில் சமர்ப்பித்த அறிக்கையில் சிபாரிசு செய்துள்ளதையும் அறிகிறோம். எனவே, ''வன்முறையால் பாதிக்கப்படுகின்ற பெண்களைப் பாதுகாக்கின்ற ஒரு பணியில் ஈடுபடுகின்ற நான் எவ்வாறு பெண்களே வன்முறையாளர்களாக மாறுகின்ற சூழலை எதிர்கொள்வது''? என்ற அவரது கேள்வியில் பொய்மை இழையோடுகிறதல்லவா?

வீட்டிலும், சமூகத்திலும் கையாளப்படும் நீதியான வன்முறையே தேசத்திலும், சர்வதேசத்திலும் விரிவாக்கம் பெறுகிறது. ஒரு தேசத்தின் இறைமை, நில ஒருமைப்பாடு ஆகியவற்றைப் பாதுகாக்கவே போருக்குப் பயிற்றப்பட்ட இராணுவம் உண்டென்பதையும், தேவையான போது வன்செயலைக் கைக்கொள்ளவே அதன் இருப்பு என்பதையும், ரா.குவுக்குக் கூறத்தேவையில்லை. சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவின் ''சமாதானத்துக்கான போரையும்'' அவர் ஏற்றுக்கொண்டதாகவே தெரிகிறது. இராணுவம், போர் குறித்த நியதிகள், ஐ.நா. சபையின் பட்டயத்தினாலும், பல்வேறு சர்வதேச சட்டங்களினாலும் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளதையும் அவர் மறுக்க முடியாது. சர்வதேச ரீதியில் ஈராக்கிற்கு எதிராக ஐ.நா. சபையின் பேரில் நடத்தப்பட்ட போர் நீதியான போர் என்ற வரையறைக்குள் வகுக்கப்பட்டதையும், அதன் போது பாரதூரமான பல மனித உரிமை மீறல்கள் நடந்ததையும் ரா.கு அறிவார். இஸ்ரேலிய அரசாங்கம், ஜெருசலேம் பகுதியில் யூதக் குடியேற்றங்களை அமைக்க முனைவதை வன்செயல் என்று பலஸ்தீன ஜனாதிபதி யசீர் அரபாத் கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது. அநீதியான இலக்குத்தான் இங்கு வழியை வன்செயல் என்று நிர்ணயம் செய்ய உதவி உள்ளதை அவதானிக்கலாம். எனவே, நீதியான இலக்கை நோக்கிச் செய்யப்படும் பொருத்தமான, வரையறைக்குட்பட்ட வன்முறையையும் நீதியானது என்றே வகுக்கலாம். இது ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்ததான செயல்பாடு (Process) என்ற ரீதியில் இங்கு நீதியான இலக்குத்தான், நீதியான வழியாகவும் இயங்குகிறது. (Just ends are just means) உ+ம் பாலியல் வல்லுறவுக்கு உட்படும் ஒரு பெண் காட்டும் எதிர்வன்முறை. இதன் அர்த்தம், அநீதியான வன்செயல் இல்லாவிட்டால், நீதியான வன்செயலும் தேவையில்லை என்பதாகும்.

### *தேசிய விடுதலைப் போராட்டமும் வன்செயலும்.*

தமிழீழ மக்களின் போராட்டம் தேசிய விடுகலைப் போராட்டமா? அந்நிய (Alien) சிங்கள ஒடுக்குமுறைக்கு உள்ளாகும் தமிழ் மக்கள் அதிலிருந்து விடுதலை பெற வன்செயலைக் கையாளலாமா? ரா.கு இவற்றை மறுப்பதில் இதற்குப் பதிலளிக்க வேண்டியதாக உள்ளது. இலங்கைத் தமிழ் மக்கள் ஐரோப்பிய குடியேற்றவாதம் ஏற்பட்ட காலத்தில் புறம்பான தேசமாகவே (Separate nation) இருந்தனர். எனவே, குடியேற்றவாதத்திற்கு உட்பட்ட தேசங்கள் தொடர்பாக, ஐ.நா சபை 1960ம் ஆண்டுகளில் ஆரம்பித்த செயல்பாடுகளின் பிரகாரம், தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், தமது அரசியல் தலைவிதியைத் தாமே தீர்மானிக்கும் உரிமை உடையோராய் உள்ளனர். அது தவிர தமிழ் மக்கள் மீது தொடர்ச்சியான, பாரதூரமான, இனப்படுகொலை வடிவிலான மனித உரிமை மீறல்கள் சிங்கள அரசால் நடத்தப்படுவதன் விளைவாகத் தமிழ் மக்கள் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கத் தகுதி உடையோராய் உள்ளனர். எனவே, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையிலும், வழிகாட்டலிலும் நடைபெறும் ஆயுதப் போராட்டம் ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாக அமைகிறது சர்வாதிகாரத்திற்கு எதிராக ஒரு மக்கள் தமது இறுதி வழிமுறையாக (Asa last resort) கிளர்ச்சியில் ஈடுபடலாம் என்று ஐ.நா சபையின் குடியியல், அரசியல் உரிமைகள் தொடர்பான சட்டங்கள் தெரிவிக்கின்றன. மேலும் தனது மக்களைப் பாதுகாக்கின்ற கடமையை ஒரு அரசு செய்யாவிடில் (அதாவது ஒடுக்குதலைச் செய்தால்) அவ்வரசுதான், கிளர்ச்சி செய்கின்றது என்றும், அவ்வரசுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்ய அம்மக்கள் உரித்துடையவர்கள் என்றும் ஜோன் லொச் (John loke), Two treatises of government என்ற தனது ஆய்வில் கூறியுள்ளார். இவை விடுதலைப் புலிகளின் ஆயுதப்போராட்டத்திற்கு நியாயத்தன்மையை வழங்குகின்றன.

### *தேசிய விடுதலை தவறானதா?*

மத, இனத்துவ தேசியவாதத் தத்துவங்களே தற்கால உலகில் மனித உரிமைகளை ஈட்டிக் கொள்ளப் பெரும் தடைக்கற்களாக உள்ளதாகப் பொதுப்படையாகக் கூறி ரா.கு. குழப்பத்தை ஏற்படுத்துகிறார். மனித உரிமைக்குத் தடையாக இருப்பவை, மத அடிப்படைவாதம் (Religious Fundamentalism), இனவாதம்(Racism), தீவிர தேசியவாதம் (Facism) என்பவையே. ஒரு மக்கள் தமது மத, இன, தேசய அடையாளங்களைப் பேணுதலோ, அவற்றைப் பாதுகாக்கப்போராடுதலோ தவறாகாது. அவை பாதுகாக்கப்பட்டு, சுதந்திரம், சமத்துவம் நிலைநாட்டப்பட்டு அவ்வடிப்படையில் நல்லுறவுடனும், பரஸ்பர ஒத்துழைப்புடனும், மக்களும் தேசங்களும் வாழ்தலே (Co - Exist) சிறந்ததெனத் தற்கால ஆய்வாளர்கள் பலர் தெரிவிக்கின்றனர் இதன் சிங்கள அரச ஆக்கிரமிப்புககு எதிராகத் தனது இறைமையையும், ஒருமைப்பாட்டையும் நிலைநாட்டத் தமிழீழத் தேசம் தேசிய விடுதலைப் போரில் ஈடுபடவேண்டியுள்ளது. இது நீதியான தற்காப்புப் போர். இதனை சர்வதேச சமூகம், உள்நாட்டுப்போர் என்ற அளவில் அங்கீகரித்துள்ளதே தவிர, தேசிய விடுதலைப் போராக அங்கீகரிக்கவில்லை. சர்வதேச சமூக நாடுகள் இன்னும் அங்கீகரிக்காது போயினும், சர்வதேச மனித உரிமை அமைப்புகள் அங்கீகரிப்பது முதற்படியாக அமைகிறது. இவ்வடிப்படையிலேயே, ஐ.நா சபையின் மனித உரிமை ஆணைக்குழுவின் அமர்வுகளின் போது, பல அரச சார்பற்ற மனித உரிமை அமைப்புகள் தமிழீழ மக்களின் தாயக உரிமையையும், சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரித்து வருகின்றன. ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவின் இவ்வருட 53வது அமர்வில், 53 அரச சார்பற்ற மனித உரிமை அமைப்புகள், தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்ததோடு, தமிழீழ தாயகத்திலிருந்து சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவம் வெளியேற வேண்டும் என்று கோரியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்கள் தமது தேசிய, அரசியல் உரிமைகளைச் சமாதான, ஜனநாயக வழியாகப் பெறுவதற்கான கதவு, சிறீலங்காவின் அரசியல் யாப்பு 6வது திருத்தத்தின் மூலம் மூடப்பட்டுள்ளதும் அவதானிக்கத்தக்கது. தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை ரா.கு மறுப்பது சிங்கள அரசின் தமிழீழம் மீதான ஆக்கிரமிப்பையும் ஒடுக்குமுறையையும் ஆதரிப்பது போன்றதாகும்.

மூலமே சமாதானத்திற்கும சமதுவ சகவாழ்விற்குமான ஓர் உலகை உருவாக்கலாம் என்பது அவர்களது கணிப்பு. ஓர் அரசிற்குள் ஓர் அங்கமாக ஒரு மக்கள் இருத்தல் என்பது அம்மக்களின் சுயவிருப்பத்தின் அடிப்படையில் அமைதல் வேண்டும். அவ்விருப்பைப் பலவந்தமாகத் திணித்தல் கூடாது. தமிழ்த் தேசிய இனம் பிரிந்து தனக்கென தனியரசு அமைத்து வாழ விரும்புகிறது. இதற்கு மாற்றாக, இன சமத்துவம் தரக்கூடிய திட்டமொன்றை இதுவரை சிங்கள அரசு முன்வைக்கவில்லை. சிங்கள மேலாதிக்கத்தை இராணுவத் தீர்வு மூலம் நடைமுறைப்படுத்தும் முயற்சியிலேயே அது தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. சிங்கள - பௌத்தத்திற்கு முதன்மை ஸ்தானம் அளித்தவாறே சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் அனைவருக்கும் சம அந்தஸ்து வழங்கும் தீர்வொன்றைக் காணப்போவதாக அது வாயளவில் சொல்லி வருகின்றது. ரா.கு.வின் பண்பாட்டுக் கலப்பு, கலாசாரப் பன்மைத்துவம் ஆகிய கருத்துக்கள், சிங்களப் பேரினவாதத்தின் கீழ் மிதிபட்டு அதற்குச் சேவகம் புரியும் பரப்புரைகளாக உதவுகின்றன.

ரா.கு கூறும் பண்பாட்டுக் கலப்புக் குறித்து மிக எச்சரிக்கையாய் இருத்தல் வேண்டும். ஓர் இனம் தனது தனித்த பண்பாட்டு அடையாளங்களைப் பாதுகாத்தலை, கலாசார ஒருமைத்துவம் என்று ஒதுக்கிவிடல் கூடாது. வேற்றுப் பண்பாட்டின் நல்ல அம்சங்களை உள்வாங்குதல் நல்லதே. அது எம் பண்பாட்டை வளம்படுத்த உதவ வேண்டுமே தவிர அழித்துவிட வழிவகுக்கக் கூடாது. சிங்களப் பெரும்பான்மை குடியேற்றம், இராணுவ அடக்குமுறை, ஆதிக்கம் மூலம் எமது தனித்த (Distinct) தேசிய அடையாளங்களைக் கபளீகரம் செய்து சிங்களமயமாக்கி விடத்திட்டமிட்டு முயலுகிறது. இத்தருணத்தில் தங்கு தடையற்ற பண்பாட்டுக் கலப்பை வலியுறுத்தல், சிங்கள மயமாக்கலுக்கு (Assimilation or Sinhalisation) உதவுவதாகவே இருக்கும்.

உலகில் புதிய தேசிய அரசுகள் உருவாவதைத் தடுத்தல் (Stopping of Pooliferation of new staxes), புதிய உலக ஒழுங்கு (New world order), Globalisation, பல்நாட்டு தொழில் நிறுவனங்களின் பலம் (Power of Transnational Companies), தகவல் ஆட்சி (Information realm) போன்றவை மேலாதிக்க சக்திகளின் குறிக்கோள்களாக உள்ளன. இவற்றையே உலகளாவிய விழுமியங்களாக ரா.கு. தூக்கிப்பிடிப்பதாக சந்தேகம் எழுகிறது. இக்கருத்துக்கள் ரா.குவுக்கு நோபல் பரிஷசக்கூடப் பெற்றுக்கொடுக்கலாம். ஆனால் இலங்கைத் தீவிலோ, உலகிலோ உண்மையான சமாதானத்தைக் கொண்டு வர இவை உதவப்போவதில்லை.

சுருத்த இதழில் முடியும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






*தீலினா வீரசிங்க, இரண்டு சிங்கள சிறுகதை தொகுதிகளை எழுதியவர். தீவிர பெண்ணிலைவாதி ராவய, எய ஆகிய வெளியிடுகளில் பத்தி எழுத்தாளராகவும், பிற பத்திரிகைகளில் கட்டுரைகளை எழுதுபவராகவும் உள்ளார். இவை தவிர பெண் விமோசனத்துக்கு நிறைய கருமமாற்ற வேண்டும் என்ற பிரக்ஞை கொண்ட மனுஷி; பல பெண்கள் அமைப்புகளுடன் இணைந்து பணி புரிந்து வருபவர்.*

*இவரது சிறுகதைகளிலும், கட்டுரைகளிலும்காரசாரமான கருத்துக்கள், போலியற்றத் தன்மைகள், சமூகத்தின் யதார்த்தம் என்பன அதிகம் வெளிப்படுவது வழக்கம். அவை பலரின் எதிர்ப்புகளுக்கும் விமர்சனங்களுக்கும் அவரை ஆழாக்கிய ஆக்கங்களாக உள்ளன.*

*அந்த வகையில் அவரது அனுபவங்களை "இனம் தெரியாத பெண்" (நாந்துனன கெஹனிய), "வெளியேற்றப்பட்ட பெண்" (பிட்டுவாக்கள தருணிய) என்ற இரு சிறுகதை தொகுதிகளாக வெளியிட்டுள்ளார். "வெளியேற்றப்பட்ட பெண்" தொகுதியில் இருந்து ஒரு கதை பிரசுரமாகின்றது.*




சிங்கள மூலம் : திலினா வீரசிங்க
தமிழில் : ரத்னா

*வழக்கறிஞர்: உமது முறைப்பாடு யாதோ?*

முறைப்பாட்டாளர்: கதைப்பதற்கு வந்துள்ளேன், ஐயா!

*எதைப்பற்றி?*

நான் இழந்ததைப் பற்றி.

*உமக்கு உரிமையாகவிருந்தது எது?*

எனக்கு நான் உரிமையாகவிருந்தேன்.

*இப்பொழுது?*

மீண்டும் எனது உரிமைகள் தேவைப்படுகின்றன

*உனக்கு என்ன நடந்தது என்பது தெளிவின்றி உள்ளது... தயவு செய்து விடயத்தை தெளிவுபடுத்தவும்.*

நான் முப்பது வயதானவன், இராணுவத்தில் இருந்து தப்பிச் செல்பவன்.

*நீ செய்ததை நியாயப்படுத்தவா எண்ணுகின்றாய்........? நீ இராணுவ நீதிமன்றத்தை நாடு.*

இராணுவ நீதிமன்றத்துக்குச் செல்ல நான் தயாராயில்லை, ஐயா. அங்கு நியாயம் கோர நான் குற்றம் ஏதேனும் புரியவில்லை. உயர்வான இந் நீதிமன்றத்தின் முன், அனைத்து மனிதர்க்கும் சமமான சட்டத்தின் முன், எனது அனைத்து உரிமைகளையும் கோருவதே எனது தேவை.

*உனக்குத் தேவையானதை தெளிவாக கூறவும்?*

மன்னிக்கவும் ஐயா. அவ்விடயத்தை தெளிவாக கூற முடியுமா என்பது எனக்கு சிக்கலான விடயம். ஏனெனில், உளவியல் ரீதியாக நான் என்னிலிருந்து விலகியிருக்கிறேன். எனினும், நீதிமன்றத்தின் முன் உண்மையை கூற நான் எனது உச்ச சக்தியை பயன்படுத்துவேன் என உறுதி கூறுகிறேன்.

*நீர் நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிக்க மாட்டீர் என நம்புகின்றேன்.*

சத்தியமாக ஐயா. நான் தற்பொழுது எதற்காகவும் காலத்தை வீணடிப்பதில்லை. தெளிவாக கூறுவதாயின், இம் முறை தேர்தலில் எனது பெயரை பதிவு செய்தலுக்காகக் கூட கால நேரத்தை வீணடிக்கக் கூடாது என தீர்மானித்துள்ளேன்.

*உமது உரிமைகள் உம்மாலேயே மீறப் படுகின்றது என்பதை ஏற்றுக் கொள்வீரா?*

இல்லை, ஐயா. எனது சகல உரிமைகளும் பறிக்கப்பட்டு விட்டன.

*யாரால்?*

காலத்தினால்.

*நீர் ஓர் மனநோய் மருத்துவமனையை நாடுவது நல்லது.*

நன்றி, ஐயா. மனநோய் மருத்துவரிடம் செல்வதற்கு முன்னர், மீண்டும் எனது மனோ நிலையை பெற்றுக் கொள்ளவே நான் நீதிமன்றத்தை நாடி வந்தேன்.

*ஓர் நபர், அமைப்பு, நிறுவனம் போன்ற வற்றை தவிர காலத்தை குற்றவாளியாக்க நீதிமன்றத்தால் முடியாது என்பதை நீர் உணர வேண்டும்.*

மன்னிக்கவும், ஐயா. அவை அனைத்தினாலுமே கடந்த காலத்தை ஆள முடிந்தது. காலம் எனது அனைத்து உரிமைகளையும் பறித்து விட்டது. சரியாக முப்பது வருட காலமாக எனது வாழ்க்கையை காலம் கொள்ளையடித்து விட்டது.

*நீர் இனி வாழப்போவதில்லை என கூறுகிறீரா?*

உண்மையாக, ஐயா. நான் இங்கு வந்தது எனது வாழ்வை மீண்டும் பெற்றுக் கொள்ளவே.

*நான் மருத்துவன் அல்லவே. உனக்கு ஒரு நல்ல மருத்துவன் தேவை.*

நீங்கள் ஓர் வழக்கறிஞர். மக்களின் வாழும் உரிமைக்காக முன் நிற்பவர். நான் அவ்வுரிமையையே கோரி நிற்கிறேன்.

*உனக்கு எவராலும் பிரச்சினைகள் ஏற்படவில்லை. யாரும் உனது உரிமை களை பறிக்கவில்லை. அவ்வாறெனின் நீர் நீதிமன்றத்தில் எதைக் கோருகிறாய்?*

எனது வாழ்க்கை, இருப்பு.

*அது உன்னிடம் உள்ளது. பாதுகாத்துக் கொள். அதைப் பேணு. அதற்கு ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்பட்டால் எம்மிடம் வா. அது வரை உனது சக்தியின் மூலம் அதை காப்பாற்று.*

ஐயா. மன்னிக்கவும். நீங்கள் தவறாக புரிந்து விட்டீர்கள். காலத்துடன் எனது வாழ்க்கையும் இல்லாதுபோய் விட்டது. சிறு வயதிலிருந்தே எனது பலத்தை வானத்தில் பறக்கும் யுத்த விமானத்திற்கு பின் ஓடவும், எதிரி விமானத் தாக்குதலிலிருந்து தப்பவும் மகிழ்ச்சியுடன் செலவழித்தேன். அது மட்டுமல்ல. நான் எவ்வளவு காலத்தை வீரர்கள் தொடர்பாக கதைப்பதில் செலவழித் திருப்பேன்? வீரர்கள் பற்றி நினைத்திருப்பேன். எனது சிறு பராயம் எதிர்கால வீரனைப் பற்றிய நினைவுகளுடன் கழிந்தது. அதனுடன் நான் மறைந்து போனேன். அனைவரும், காலமும் என்னி லிருந்து விலகவே எனக்கு உதவினார்கள்.

*நீர் வீரனாக கனவு கண்டாய். அதற்காக இராணுவத்தில் சேர்ந்து கொண்டாய். அதற்காக கவலைப்பட்டுக் கொண்டு நீதிமன்றத்தில் பெறுமதியான காலத்தை வீணடிப்பதன் நோக்கம் யாது?*

இறுதியாக நான் அந்தக் காலத்தை வெறுக் கிறேன். புதிய காலத்தின் தேவையை உணரு கிறேன். வீரனாகுவதை விட நானாக இருப்பது நன்று என்பதனால்.

*இராணுவத்தில் இருக்கும்போது உன்னால் தவறு ஏதும் இடம்பெற்றதா? உனது மனச் சாட்சிக்கு எதிராக.........?*

இராணுவத்தில் சேர்வதற்கு என்னைத் தூண்டியது காலமே. அது காலத்தால் மேற் கொள்ளப்பட்ட பாரிய தவறு. அதற்கு முதல் எனது வாழ்க்கையை இழந்த கதையை இந் நீதிமன்றில் கூற அனுமதி தாருங்கள்.

*நீர் கூறுபவற்றை ஏற்றுக் கொள்ள நீதிமன்றம் தயாராயில்லை. சட்டத்தின் பெயரால் உன்னால் குறிப்பிடக் கூடியவற்றை கூறி விட்டு துரிதமாக இவ் விடத்தை விட்டு வெளியேறுமாறு கூறுகிறேன்.*

என்னை மீண்டும் மன்னியுங்கள் ஐயா. இங்கிருந்து கூடிய விரைவில் வெளியேறும் தேவை எனக்கில்லை. நான் இங்கு வந்தது, எனக்கு உரிமையானதை பெற்றுக்கொள்ளவே. அது வரை நான் இங்கு தரித்திருப்பேன். அதற்காக நான் உங்கள் உதவியை கோருகிறேன்.

*நீர் இப்பொழுது அதிக நேரமாக எம்மை குழப்பத்திலாழ்த்திவிட்டாய். உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்னர் நீரே சுதந்திரமாக இவ்விடத்தை விட்டு நீங்குவது நன்று.*

என்னால் தீர்மானம் எடுக்க முடியாதுள்ளது. எந்நாளும் தீர்மானம் எடுக்கக் கூடிய சந்தர்ப்பம் எனக்கு கிட்டவில்லை. நான் பழக்கப்பட்டது, பிறரது உத்தரவை மதித்து நடக்கவே. அது எனது அரிச்சுவடி புத்தகத்திலிருந்து, அனைத்து புத்தகங்கள் வரை உள்ளது. நான் கல்வி கற்றது பிறருக்காக இறுதியில் யாரும் எனக்காக முன் வரவில்லை. முடிவெடுக்கும் நபரில் எனது முழு நம்பிக்கையையும் செலுத்த எனது பலத்தை செலவழித்தேன். உண்மையில் காலத்துக்கு ஏற்ற வகையில் வேலை வாய்ப்பொன்றை தேடினேன். எனக்கு கிடைத்த வேலைவாய்ப்பை பயன்படுத்தினேன்.

*நாட்டின் பாதுகாப்புக்காக இளமையை வழங்குவது உத்தமமானதாக இருக்கும் நிலையில், நீர் கவலை கொள்கிறீர். நீர் உம்மை எண்ணி துன்பமுறுகிறீரா அல்லது பிரயோசனமற்ற வீரராக ஆவதற்கு முயற்சிக்கின்றீரா.*

என்னால் எதையும் யோசிக்க முடியாது, ஐயா. என்னைப் பற்றி யோசிக்க முதல் எனக்கு என்னை பெற்றுத் தருமாறு கோருகிறேன். நான் மென்மேலும் தேவையற்ற நபராகி விடலாம். ஐயா, கட்டாயமாக நான் எனக்கு தேவை. நான் இவ்வாறு கூறுவது சரியாக என் வாழ்க்கையின் மூன்று தசாப்தங்களை இழந்த பின்னர்தான். அல்லது ஏனையோரின் வீரனாக மாறும் எண்ணங்களுக்கும், கனவுகளுக்குமிடையில் சிறைப்படுத்தப்பட்ட 30 வருடத்துக்கு பின்னராகும். தற்போது நான் நட்ட ஈடு கோரவில்லை. என்னால் ஏற்பட்ட தவறுகளுக்கு என்னால் நட்ட ஈடும் தர முடியாது. காலத்துக்கும் அவ்வாறே.

எனினும் நான் காலத்துக்கு எதிராக செயற்பட தயார்.

நான் செய்த பாரிய தவறு ஆயுதங்களையும், சீருடையையும் களைந்து விட்டு இராணுவத் திலிருந்து தப்பி வந்தது அல்ல. அங்கு சரியாக எட்டு வருடங்களாக தரித்து இருந்ததாகும். சட்டரீதியாக எனக்கு மனைவியும், இரு பிள்ளைகளும், இரகசியமாக என்னை காதலிக்கும் ஐந்து யுவதிகளும், விருப்பத்துடன் என்னுடன் உறவு கொண்ட பெண்களும், பலாத் காரமாக அடிமையாக்கப்பட்ட பெண்களும், நான் அறியாத எனது பிள்ளைகளும், காலத்தை தேடிச் செல்லப் பணிக்கின்றனர்.

அதே போல், எனது சகோதரர்களை எதிரிகள் என நினைக்க உத்தரவு பிறப்பித்த காலத்திலி ருந்து விலகி, பெற்றுக்கொண்ட குருதியை அவர்களுக்கே மீளளிக்கும் ஆசையும் உண்டு.

இனிமேலும் என்னை முகாமுக்கோ, மனநோய் வைத்தியசாலைக்கோ அனுப்பவேண்டாம் எனத் தாழ்மையுடன் கோருகிறேன்.

சட்டத்தின் பெயரால் எனது வாழ்க்கையை பெற்றுத் தரும்படி கேட்கிறேன். மனச்சாட்சி யின்சுதந்திரத்துடன்...... எனது பலத்துடன் ..........முடிவெடுக்கும் உரிமையையும் சுதந்திரத்தையும் பெற்றுத் தரும் படி கோருகி றேன்.

நீதிமன்றத்தில் இருக்கும் அறிவாறிகளான, பக்கச்சார்பற்ற அனைவரிடமும் நான் கேட்டுக் கொள்வதும் அவ்வளவே. ●

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# துயரி

அவள் வருகிறாள்.
அவள் தனித்து வரும்போது கூட்டமாய்
வருகிறாள்
அவள் கூட்டமாய் வரும் போது
தனித்தே தெரிகிறாள்.
அவள் ஒரு தனித்தனியள்.
அவள் இருப்பே தனிமை
அல்லது
தனிமையே அவள் இருப்பு.
அவள் ஒரு ஒற்றைச்சி.
அந்த ஒற்றைச்சி அதோ வருகிறாள்.
அவள் வரவில் இன்துயர் வாடை வீசுகிறது.

மாலை இருட்டு.
வீதியில் விழாக்காணும் ஜனத்திரளாய்
அவள் பிரவகித்துக்கொண்டிருக்கும் போதும்
அவளை நான் தேடுகிறேன்.
அவளின் தனித்த யெளவன உறைவுகளில்
எனக்குப் பழக்கம்.

அதோ வீதியில் ஜனநெரிசலுக்கிடையே,
ஓரமாக,
விளக்கொளியின் சுருக்கங்களில்,
கையில் கொடுத்த காசை புரட்டிப் புரட்டிப் பார்க்கும்
கடலைக்காரக் கிழவியாக,
அவள் குந்திக் கொண்டிருக்கிறாள்.

ஜன நெரிசலில் விடுபட்ட குழந்தையின்
'வீல்' என்ற ஒற்றைக் கூவல்.
என் இதயம் அதிர்கிறது.
அதுவும் அவள்தான்.

கூட்டத்தில் முண்டியடித்துக் கொண்டுபோன
இளைஞனின் புஜமூட்டால்
இடிபட்டு விழாக்குறையாக,
ஒதுங்கி நின்று பார்க்கும்
ஒரு கிழத்தின் வாய விழலில் அவளின் நிழலாட்டம்.
பின்னால் வந்த யாராலோ இடறுப்பட்டு
என் செருப்பு அறுந்தபோது,
திக்கென்று என் மனம் விழுத்திய இடைவெளிப் பொட்டலில்
அவளின் கூக்காட்டல்.

முகம் தெரியாத ஒருத்தி விழுத்திவிட்டுப்போன
கிண்கிணிச் சிரிப்பின் மிதப்பு அழிந்தபோது
அதன் கடைசி எச்சமான "ண்" என்ற ஓசை
ஓர் நொடிப்பொழுதில் யுக யுகாந்திரமான
அவள் தனிமையின் நீட்சியைக் காட்டி ஓய்கிறது.

கூட்டத்தில் எங்கும் அவள் தனிமையின்
குடியிருப்பு.
தனித்திருந்து கூட்டம் போடுபவள் அவள்.
தனிமையிலோ அவள் கூட்ட மாகவே குடியிருக்கிறாள்.
கூட்டுத்தனிமையினள்.
கூட்டமாய்ப் பேரிகைக்கும் அலைகளிடையே
விரிந்து கிடக்கும் கருங்கடலி.
சதா நகையவிழ்க்கும் விரிந்த நுரை நகைச்சி.

இருட்டில், புயலில் ஓலமிடும் பனங்கூடலின்
கரிய ஓசையில், அவள் கரிய ஓசைச்சி.

மேகங்களைத் தாலாட்டும் வானத்தின் முடிவின்மை அவள்.
எறும்பு நிரையின் மௌனச் சந்தடி ஊர்வலத்தில்
அவள் தன் ராட்சதச் சுவடுகள் பதிய நடக்கும் உக்கிரம்.
தியேட்டரை விட்டுக் குபுகுபுவென வெளியேறிக் கொண்டிருக்கும்
மக்கள் கூட்டத்தின் கூட்டுமொத்த அனாதைத் தனத்தில் அவள்.
அவள் தியேட்டரை விட்டு எங்கே போகிறாள்?
கைவிடப்பட்ட கன்னியை அள்ளிச் செல்லும்
ஒரு துயர்.
யாரால் கைவிடப்பட்டாள்?
மானிடம் கைவிட்ட கண்ணகி?

அவள் இருப்பு துயர்மயமானது.
ஏனெனில் அவள் தனித்தவள்; இன்மையானவள்.
இந்த இன்மை, இருந்துபோன ஒன்றின் இன்மையல்ல.
அது இருப்பின் இன்மை.
அதனால் அது தரும் துயர் -
காதலின் துயரல்ல,
கைக்கிளையின் துயரல்ல,
பிரிவின் துயரல்ல,
இருந்த ஒன்றின் இழப்பின் துயரல்ல,
அது இருப்பின் இன்பத் துயர்.
இசை இழை துயர்
பெருவெளி நெளி துயர்.

அதனால்தான் அவள் மோகனத் தோற்றத்தில்
எல்லையற்ற துயரின் புரையோடல்.
துரித்தி நிற்கும் தெற்றுப்பல், சில பெண்களுக்கு
அழகூட்டுவதுபோல்
இவளிடம் புரையோடிய துயரின் துருத்தல் இவள் அழகின்
வரைவின்மை.
துயரின் பின்னணியில்தான் அவள் மோகனம்
இன்னிசைக்கின்றதா?
அல்லது அவள் மோகனந்தான் இத்துயரின் பின்னணியா?
அவள் இன்னிசைச்சி துயரி, மோகினிச்சி.

**மு.பொ.**

*விரைவில் வெளியிடப்படவிருக்கும் 'துயரி' என்னும் நெடுங்கவிதையிலிருந்து ஒரு பகுதி.*

# முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலத்தை மரணக்குழிக்குள் தள்ளிய ஒப்பந்தம்!

இலங்கையில் நிலவும் இனப் பிரச்சினைத் தீர்வில் இந்தியாவின் பாத்திரத்தையும், பங்களிப்பையும் நாம் தட்டிக்கழித்துவிட முடியாது! ஆனால் இந்தியாவின் பாத்திரமும் பங்களிப்பும், நீண்ட காலமாய் அடக்கப்பட்டு வரும் வடக்குகிழக்கு வாழ் மக்களின் நலன்களில் இருந்தும் உரிமைகளிலிருந்தும் பார்க்கப் பட்டதாகவே இருத்தல் வேண்டும். மாறாக தமிழ் மக்களுடைய ஆயுதப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இந்தியா தனது நலனில் அதிக அக்கறை கொண்டு தன்னை எஜமானாக்கி தமிழ் மக்களுடைய ஆயுதப் போராட்டத்தை தனக்கு சாதகமாகவே பயன்படுத்தியது என்ற உண்மையின்மீது யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது!

தமிழ் இயக்கங்களைப் பயன்படுத்தி தென்னாசியாவில் இந்தியாவின் 'இராசதானி'யை ஸ்திரப்படுத்துவதும் இலங்கையை அச்சுறுத்துவதுமே இந்தியாவின் முதல் நோக்கமாகவிருந்தது. இந்நோக்கத்தை அடைவதற்கு இந்தியா ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்களையும், பொது மக்களையும், சிங்கள மக்களையும் பலிக்கடாவாக்கியதை நாம் வரலாற்றின் ஊடாகப் பார்க்கிறோம்.

இலங்கை இந்திய ஒப்பந்தமானது "இந்தியா எஜமான்" என்ற இந்தியாவின் ஆதிக்கமிக்க பாத்திரத்தை சட்டரீதியாக ஏற்றுக்கொள்ள வைத்த ஒரு ஒப்பந்தமேயன்றி வேறொன்றுமில்லை. இப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வெதனையும் இலங்கை இந்திய ஒப்பந்தம் தந்துவிடவில்லை. மாறாக தமிழ்மக்களுடைய நியாயமான போராட்டத்தை வேறு பாதைக்கு திசைதிருப்பி போராட்டத்தை கொச்சைப்படுத்தியதாகவே உள்ளது.

அடக்குவோருக்கும் அடக்குமுறைக்கும் எதிராகப் போராடிய சக்திகளுக்கு மிடையே இந்தியா தனது அரசியல் சித்து விளையாட்டின் ஊடே இலங்கை அரசையும், தமிழர் இயக்கங்களையும் பகடைக்காய்களாகப் பயன்படுத்திக் கொண்டது. இலங்கை இந்திய ஒப்பந்தமானது தமிழர்களை மட்டும் புறக்கணிக்கவில்லை. வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்களையும் முற்றுமுழுதாகவே புறக்கணித்திருந்தது.

1987ம் ஆண்டு ஜூலை மாதம் ஏற்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் வடக்கு கிழக்கில் வாழும் முஸ்லிம்கள் தொடர்பாய் அவர்களுக்கான அரசியல் ஏற்பாடு, பாதுகாப்பு, நலன்கள் குறித்து ஒரு வார்த்தைதானும் இருக்கவில்லை. முஸ்லிம்களை ஒரு தனித்த சமூகமாகவோ, அவர்களின் அரசியல் அபிலாஷைகளை ஒரு பொருட்டாகவோ இலங்கை - இந்திய ஒப்பந்தம் கணக்கில் எடுக்க வில்லை. கிழக்கில் 33.4 வீதமாகவும் ஒட்டுமொத்த இலங்கை - இந்திய வடகிழக்கு தற்காலிக இணைப்பினால் 17 வீதமாக சிறுபான்மையினராக்கப்படும் முஸ்லிம்களின் அரசியல் எதிர்காலம், இலங்கை இந்திய ஒப்பந்தத்தினால் மரணக் குழிக்குள் தள்ளப்பட்டது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடே வடகிழக்கு பிரதேசத்திற்குள் புகுந்த இந்திய இராணுவத்தின் வருகையோடு வடக்கில் தமிழ் மக்கள் இந்திய இராணுவத்தால் அடைந்த கொடுமைகளுக்கு சமமாக கிழக்கில் முஸ்லிம்களும் கொடுமைகளை அனுபவித்தனர் - கிழக்கு முஸ்லிம்களின் இருப்பையும் வாழ்வையும் அதிகம் உலுப்பிய காலகட்டமாக இந்திய இராணுவம் இலங்கையில் நிலைகொண்டிருந்த காலகட்டத்தைக் குறிப்பிடலாம். இந்திய இராணுவத்தின் பின்பலத்தால் அதிகாரத்தையும், ஆயுதங்களையும் பெற்றுக்கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப். போன்ற ஆயுதக் குழுக்கள் இக்காலத்திலேதான் முஸ்லிம்களுக்கு எதிரான அதிக கொடூரங்களைப் புரிந்தன.

இந்திய இராணுவத்தின் வருகைக் காலகட்டத்தை ஞாபகப்படுத்தி மூத்த எழுத்தாளர் ஒருவருடன் உரையாடிக் கொண்டிருந்தபோது அவர் சொன்ன ஒரு கருத்து மிகவும் பொருத்தமாகவே எனக்குப் படுகிறது. அவர் சொன்னார் "இந்தியா இங்கு வருவது என்பதை தமிழர்களும், முஸ்லிம்களும் மகாத்மா காந்தி வடக்கு கிழக்குக்கு வருகிறார் என்றே நம்பி இருந்தனர். உலகில் ஆக்கிரமிப்பு இராணுவங்கள் நடந்து கொண்டது போல் இந்திய இராணுவமும் நடந்த போதுதான் மக்களுக்குப் புரிந்தது, மகாத்மா வரவில்லை, இராணுவம் வந்திருக்கிறது என்று"!

இந்திய இராணுவம் பாகிஸ்தானிலுள்ள முஸ்லிம்களைப் பார்ப்பது போல்தான் வடக்கு கிழக்கு வாழ் முஸ்லிம்களையும் நோக்கியது. இந்துத்துவ மயப்பட்ட சிந்தனை கொண்ட இந்திய இராணுவத்தால் அதிக முஸ்லிம்கள் பாதிக்கப்பட்டனர். வடகிழக்கு மாகாண சபை உறுப்பினர் அலி உதுமான் அவர்கள் ஈ.என்.டி.எல்.எப். பினால் சுட்டுக்கொல்லப்படுவதற்கு இந்திய இராணுவம் துணை போனது.



மக்கள் தொண்டர் படை (CVF) என இந்தியப்படை காலத்தில் திரட்டப்பட்ட படையில் சேர்ந்த 40 முஸ்லிம் இளைஞர்களை காரைதீவு சந்தியில் வைத்து ஈ.பி.ஆர்.எல்.எப். படுகொலை செய்ததும், இந்தியப் படையின் காலத்தில்தான். மக்கள் தொண்டர்படைக்கு முஸ்லிம் இளைஞர்களை சேர்த்து திருகோணமலை ஜமாலியா பயிற்சி முகாமில் வைத்து அவர்களை படுகொலை செய்ய முயற்சித்ததும் அவர்களின் பெற்றோர்களை படுகொலை செய்ததும் இந்தியப் படைகளின் காலத்தில்தான் நடந்தது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னான வடகிழக்கு மாகாண சபைத் தேர்தல் முஸ்லிம் காங்கிரசின் அரசியல் பிரவேசத்தில் முக்கிய பங்காற்றுகிறது. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் எனக்கூறிக்கொண்டே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக தனது கட்சியின் நலனை முதன்மைப்படுத்தி வடகிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டு இந்தியாவுக்குத் துணை போனது!

வடக்கு கிழக்கில் எவ்விதமான அரசியல் அதிகாரமும் இல்லாது இருந்த முஸ்லிம் காங்கிரஸ் ஒரு பக்கம் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை மறைமுகமாக ஏற்றுக் கொண்டு - அதற்கு நேர்மாறாக இனவாதத்தை அதிகம் பேசி கிழக்கில் நடந்த மாகாண சபைத்தேர்தலில் 17 மாகாணசபை உறுப்பினர்கள் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொண்டது. தமிழ் முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிராகரித்த இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக அதிகாரத்தை கைப்பற்றுவதை நோக்கமாகக்கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப்புடன் முஸ்லிம் காங்கிரசும் சேர்ந்து கொண்டது.

இந்த மாகாண சபைக்கூட்டின் ஊடாக அதிகாரத்தைப்பெற்றுக் கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் தனது கட்சியின் அரசியல் எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதற்காக தமிழ் - முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகளை பின்தள்ளியது. 1988ம் ஆண்டு மாகாண சபைத்தேர்தல் நடைபெற்ற போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரஃப் பாராளுமன்ற உறுப்பினராகி இருக்கவில்லை. அதன் பின்னே 1989ம் ஆண்டு நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் போதுதான் அஷ்ரஃப் அவர்களுக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைக்கிறது. இப்பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை அடைய முஸ்லிம் காங்கிரசின் 17 மாகாண சபை பிரதிநிதித்துவமும் அதிக பங்களிப்பாற்றியது. இதிலிருந்துதான் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தான் அரசியல் அதிகாரத்தை அடைவதற்கு முன் உரத்துப் பேசிய கொள்கைகளை பூச்சாண்டி காட்டி ஏமாற்றி, பயன்படுத்தும் அரசியல் நாடகத்தை தொடங்கி வைத்தது.

இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் ஊடான வடகிழக்கு மாகாண சபைத் தேர்தலே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், வடகிழக்கில் முதல் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற வழிகோலுகிறது. இந்த வகையில் நிராகரிக்கப்பட வேண்டிய ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டதன் ஊடாக அன்று நடைபெற்ற முஸ்லிம்களின் அரசியல், பாதுகாப்பு வாழ் உரிமைகளுக்கெதிரான அத்துமீறல்களுக்கு முஸ்லிம் காங்கிரசும் பாத்திரவாளியாகிறது.

முஸ்லிம் காங்கிரசின் ஆரம்ப 17 மாகாண சபை உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் இன்று முஸ்லிம் காங்கிரசில் இல்லை; இவர்களில் முக்கியமானவர்களாக வடகிழக்கு மாகாண எதிர்க்கட்சி தலைவராகவிருந்த சேகு இஸ்ஸதீன் எழுத்தாளர் எஸ்.எல்.எம். ஹனிபா, சட்டத்தரணி நிஜாமுதீன், ஜவாட் மரைக்கார், பதுருதீன், திருகோணமலையைச் சேர்ந்த அஸிஸ், ஜமால்டீன், மட்டக்களப்பைச் சேர்ந்த முகிடீன் என்பவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அஷ்ரஃப்புடன் கருத்து முரண்பாடுகள் கொண்டு கட்சியிலிருந்து விலகியவர்கள், விலக்கப்பட்டவர்களாகினார்கள். சம்மாந்துறையைச் சேர்ந்த மன்சூர் என்பவர் மாகாண சபை உறுப்பினராக இருக்கும் போது விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "டொக்குமெண்டரி" என்றால் என்ன?

கே.எஸ்.சிவகுமாரன்



திரைப்படத் திறனாய்வுத் துறையில் பயன்படுத்தப்படும் பதங்களில் ஒன்று 'டொக்கியூமென்டரி' (Documentry). இந்த ஆங்கிலச் சொல்; ஒரு ரக திரைப்படத்தைக் குறிக்கும். தமிழில் இதனை நாம் மொட்டையாக 'விவரணப் படங்கள்' என்று கூறிவந்தோம். ஆனால் இது இந்தத் துறைப் படங்களைக் குறிப்பிடப் பொருத்தமான சொல் அல்ல என்பதைப் பின்னர் உணர்ந்து கொண்டோம்.

'விவரணம்' என்ற சொல்லுக்கு ஆங்கிலத்தில் (Narration) அல்லது (Narrative) என்பார்கள். இலக்கியத் திறனாய்வுத் துறையில், (Narrative) போல (Discribe) என்றசொல்லையும் பயன்படுத்துகிறார்கள்.

'விவரணம்' (Narrative) என்றால் கதை, ஓவியம், திரைப்படம் போன்றவற்றில், நிகழ்ச்சி, காட்சி முதலியவற்றை உரிய ஒழுங்கில் ஒன்றையடுத்து ஒன்றாக வெளிப்படுத்துதல் என்பார்கள். உதாரணமாக கதை சொல்லலில் இது ஒரு உத்தி (Technique) முறை.

'வர்ணனை' என்பது நேரில் பார்ப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும், பேச்சு அல்லது எழுத்து எனலாம். தத்ரூபமாக அல்லது இவ்வாறாக என்று வார்த்தைகளால் விவரித்தல், வர்ணி என்ற வினைச் சொல்லின் அர்த்தமாகும்.

நாம் பொதுவாக ''விவரணம்'', ''வர்ணனை' என்ற சொற்கள் ஒரே பொருளைக் கொண்டவை என்று அர்த்தப்படுத்தி வருகிறோம். இது தவறு என்பதை இப்பொழுது பலரும் உணர்ந்து வருகிறோம்.

(Narration/Narrative): என்ற சொற்களுக்கான விளக்கம்: எடுத்துரைத்தல், கதையாக எழுதுதல், கதையாகக் கூறுதல், தொடர்பாகச் சொல்லுதல், கதை, கதைக்கூற்று, கூற்று, தொடர் உரை, கதைப்பகுதி, நிகழ்ச்சி, விரிவுரை, வரிசைப்பட எடுத்துரைப்பு போன்றவை.

Describe, Description, Descriptive போன்ற சொற்களுக்கான விளக்கம்: விரித்துரை, விளக்கியுரை, முழு விபரம் கூறு, பண்புகளை எடுத்துரை சொற்களால் வருணி, பண்பேற்றியுரை, குறித்துரை, வரைந்து காட்டு, வரைவடிவம் கொடு, சொல் விளக்கம் முதலியனவாகும்.

Documentry Film என்னும் போது, அதனை புன்னயா மெய்விள்க்கத் திரைப்படம், இடையிடைப்பட்ட விளக்கவுரைகளுடன் மெய் நிகழ்ச்சிகளை மட்டும் கலப்பின்றிக் காட்டும் இயக்கப்படம் என்று நாம் பொருள் கொள்ளலாம்.

உண்மை விவரங்களை/ மெய்களை/ எதுவிதமான புனைவும் இல்லாமல்/ விளக்கும் நிகழ்ச்சிகள் இதில் அடங்கும். டொக்கியூமென்டறி படத்தில் சாதாரண மக்களே தோன்றுவர். நடிகர்கள் இருக்க மாட்டார்கள். மேடையலங்காரங்கள், பிரமாண்டமான மேடையமைப்புகள் போன்றவை இருக்கமாட்டா. கதை எடுத்துரைப்பு புனையப்படாமல், மெய் நிகழ்ச்சிகளின் விளக்கமாக அமையும்.

1976ஆம் ஆண்டில் ரொபர்ட் ஃப்லாஹெர்டி (Robert Flaherty) என்பவர் 'மோஆனா' (Moana) என்ற படத்தை எடுத்த பொழுது, அப்படத்தை விபரிப்பதற்கு 'டொக்கியூமென்டரி' என்ற பதம் பயன்படுத்தப்பட்டது. பிரிட்டிஷ் 'டொக்கியூமென்டரி' படங்களின் தந்தை எனக் கருதப்படும் ஜோன் கிரியெர்ஸன் (John Griersan) என்பவர் இந்தப் பதத்தை அறிமுகப் படுத்தினார்.

'உண்மை நிகழ்ச்சிகளை படைப்பாற்றல் ரீதியாகச் சித்தரித்தல் புனையா மெய்விளக்கத் திரைப் படம்' என கிரியெர்ஸன் விபரித்தார்.

நடிப்புத்திறன் வெளிப்படுத்தப் படாத சகல படங்களையும் முன்னர் 'டொக்கியூமென்டரி' ப்டங்கள் என விபரித்தார். கதை சாரா செயல் நிறைந்த படங்களை இவ்வாறு மகுடமிட்டனர்.

ஆயினும் பிரயாணச் சித்திரமாக அல்லது செய்தி விவரணப்படமாக டொக்கியூமெண்டரிப் படங்களை/ புனையாமெய் விளக்கப்படங்களை நாம் கருத முடியாது எனத் திரைப் படத்திறனாய்வாளர் கண்டனர்.

பார்வையாளரைக்கவரும் விதத்தில் மக்கள், இடங்கள், நிகழ்ச்சிகளை வெறுமனே ஒளிப்பதிவு செய்து காட்டாமல், தான் எடுத்துக்கொண்ட பொருள் பற்றி தனது பார்வை எப்படிப்பட்டது என்பதனை அண்மைக்கால புனையா மெய்விளக்கப்பட நெறியாளர்கள் காட்டி வருகின்றனர். எனவே இத்தகைய படங்கள் இப்பொழுது ஆக்கத் திறனை உள்ளடக்கியவையாகக் கருதப்படுகின்றன.

இந்த ரகப்படங்கள் உண்மையிலேயே எடுத்துக்கொண்ட பொருளின் பகுப்பாய்வாக அமைகின்றன. உண்மையான மெய்நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் பொழுது ஒருவித உண்மை/ வாய்மை புலப்படுத்தப் படுகிறது. இதனை நெறியாளர், தனது படப்பிடிப்புக்கோணம்



முறைமை, பிடிக்கப்பட்ட படங்களின் தொகுப்பு முறைமை, ஒலிப்பதிவு முறைமை, மற்றும் திரைப்படத் துறை சம்பந்தப்பட்ட ஏனைய அமசங்களை உள்ளடக்குவார்.

பழைய படங்களிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட படங்களின் துண்டுகளை இணைத்து, இடம்/ காலம் குறித்து விளக்கும் உரைநடைப் பாங்கும் (Documentry) இத்தகைய படங்களில் அமையலாம். ஆயினும் புதிய செய்திகளும், புதிய படப்பிடிப்புகளுமே, அண்மைக்கால புனையாமெய்விளக்கப்படங்களில் இடம்பெறுகின்றன.

'சினிமா வெரிட்டே' (Cinema Verite) அல்லது 'புதிய அலை'ப்பட பாணியில் (style) இலகுவில், கையில் எடுத்துச் செல்லக்கூடிய ஒலிப்பதிவுக் கருவி, ஒளிப்பதிவுக் கருவி ஆகியன சகிதம் எந்தவித நிறுத்தமும் இல்லாமல் ஒரே மூச்சில் எடுக்கப்படும் புனையா மெய் விளக்கப் படங்கள் சிலவும் வெ ரி வந்துள்ளன. ஆனால் அவ ற் கூட நெறியாளரின் தே வு முறையும் (Selectivity) அவர் பொருள் கொண்டு விளக்கும் முறைமையும் (Interpratation) புலப்படும்.

அரசுகள் சிலவேளைகளில் அதன் நடவடிக்கைகளை விளக்கப் பிரச்சாரப்படங்களை எடுப்பதுண்டு. அவற்றை புனையா மெய்விளக்கப் படங்கள் எனக் கூறுவது சரியல்ல. தலைசிறந்த புனையா மெய்விளக்கத் திரைப்படங்களினதும், கதை சார்ந்த திரைப்படங்களினதும் நெறியாளர்கள், அரச பிரசாரப் படங்களைத் தொகுப்பதில் ஆரம்பத்திலே ஈடுபட்டவர்கள் தாம் எனினும், பிரச்சாரப்படங்கள் வேறு புனையா மெய்விளக்கப் படங்கள் வேறு.


இலங்கையிலே, லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ், டி.பி. நிஹால்சிங்ஹ போன்றவர்கள் ஆரம்பத்தில் அரசபிரச்சாரப் படங்களைத் தந்து பின்னர் புனையா மெய்விளக்கப் படங்களை உருவாக்கி, ஈற்றில் கதைசார்ந்த திரைப் படங்களை நெறிப்படுத்தியர்கள்.

இந்தியாவில், எஸ். கிருஷ்ணசாமி (பழைய திரைப்பட நெறியாளர் கே. சுப்ரமணியத்தின் மகனும், பரத நாட்டிய விற்பன்னர் பத்மா சுப்ரமணியத்தின் சகோதரரும், இந்திய சினிமா பற்றி ஆதாரபூர்வமான ஆங்கில நூலை எழுதியவருமாவார்) குறிப்பிடத்தகுந்த புனையா மெய்விளக்கத் திரைப்பட நெறியாளர் என்பர். அண்மைக் காலங்களில் அனந் பட்டவர்த்தன் அருமையான அரசியல் சார்ந்த புனையா மெய்விளக்கப் படங்களைத் தந்துள்ளார்.

சத்யஜித் ராய், மிர்னால் சென, ரிட்விக்கட்டாக், ஷியாம் பெனிகல், அடூர் கோபலகிருஷ்ணன் போன்ற நெறியாளர்கள் பயன்தரும் புனையா மெய்விளக்கப் படங்களைத் தந்துள்ளனர். ○

# தமிழிசை மரபும் தமிழ் மக்களும்

ஆழ்வார்க்குட்டி



''உலகின் முதல்இசை தமிழிசையே!''

மேலே உள்ள கூற்று திரைப்படப் பாடலொன்றின் ஆரம்பவரிகள். ''உலகின் முதலாவது மனிதக் குரங்கு தமிழ் மனிதக் குரங்குதான்'' என்று மார்தட்டிக் கொள்ளும் தமிழர்கள் பலர் நம்மில் இருக்கிறார்கள். பெரியார் இயக்கம், கழகங்களாகப் பிரியப் பிரிய மேற்கூறிய விபத்து நேர்ந்து விட்டது.

தமிழிசை உலகின் முதல்இசையாக இல்லாவிட்டாலும் முக்கியமான இசைகளுள் ஒன்று என்பது மட்டும் உண்மை.

அண்மையில் சில ஒலிப்பேழைகள் எனக்கு கிடைத்தன. இந்திய இடதுசாரி இயக்கமொன்றின் தமிழ் நாட்டுக் கிளையின் கலை, கலாசாரப்பிரிவு, இவற்றை வெளியிட்டுள்ளது. மக்கள் கலை இலக்கிய கழகம் என்பது அதன் பெயர்.

நம்மில் பலர் கர்நாடக இசையை தமிழிசை என எண்ணி மயங்கிக் கொண்டிருக்கிறோம். அது ஆரியர்களின் வரவால் தமிழுக்கு கொண்டு வரப்பட்ட ஒரு வளம் என்றும் எண்ணிக் கொண்டிருக்கிறோம். ஆனால் தமிழிசையிலிருந்து மருவியதுதான் கர்நாடக இசை. 'மருவியது' என்பது நான் தயவு தாட்சண்யத்துடன் பாவித்த வார்த்தை. ம.க.இ.க.தோழர்கள் பின்வருமாறு குமுறுகிறார்கள்:

தமிழிசையை பார்ப்பனர்கள் களவாடிக்கொண்டார்கள். தமிழ் மக்களிடமிருந்து தமிழ் இசையை பிரித்தெடுத்து, மேல்தட்டு பார்ப்பனர்களுக்கான போகப்பொருளாக கர்நாடக சங்கீதம் என பெயர் மாற்றம் செய்து பித்தலாட்டம் புரிகிறார்கள் பார்ப்பனர்கள்''. இதைவிட மிகக் கடுமையான சொற்பிரயோகங்கள் பாவிக்கப்பட்டு குற்றம் சுமத்தப்படுகிறது. ஆனால் தகுந்த ஆதாரங்கள் முன் வைக்கப் படுகின்றன. அவர்களுடைய சிந்தனைப்போக்கையும், தர்க்க நியாயங்களையும், ஆதாரங்களையும் மறுத்துரைக்க கர்நாடக சங்கீத விற்பன்னர்களால் இயலவில்லை.

பழந்தமிழ் இலக்கியங்களிலேயே தமிழ் இசை பற்றியும், இசைக் கருவிகள் பற்றியும் ஏராளமான செய்திகள் இருக்கின்றன. சில பத்துக்கணக்கான இசைநூல்கள் தமிழில் இருந்திருக்கின்றன. அவற்றுள் பலவும் அழிந்து போய் விட்டன. விபுலானந்த அடிகளாரின் 'யாழ் நூல்' பத்தேபத்து பிரதிகள் மட்டுமே அச்சிடப்பட்டதாக கேள்வியுற்றிருக்கிறேன். ஈழத்தில் ஒரு பிரதியாவது உள்ளதா என்பது பற்றிய விபரம் ஏதும் இல்லை.

ஆபிரஹாம் பண்டிதர் என்னும் இசை அறிஞர் ''கர்நாமிர்த சாகரம்'' என்னும் இசை நுணுக்க நூலை 1910களில் வெளியிட்டிருக்கிறார். இப்போது ஒரேயொரு பிரதி மாத்திரம் டெல்லி நூல் நிலையம் ஒன்றில் எஞ்சியிருக்கிறது. இந் நூலில் தான் கர்நாடக இசை தமிழிசையிலிருந்து தோன்றியது என்பது ஆதாரபூர்வமாக நிறுவப் பட்டுள்ளது.

12ம் நூற்றாண்டில் மஹாராஷ்டிரத்தைச் சேர்ந்த சோமேஸ்வரயுல்லோகமால் எனும் குறுநில மன்னனே தென் மண்டல இசைக்கு கர்நாடக இசை என்று பெயர் சூட்டினான் அதற்கு முன்னும் பின்னுமான சில நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவில் சோழ, பல்லவ பேரரசுகள் மிகுந்த பலத்துடன் விளங்கின. (சிவகாமியின் கால் சதங்கையில் ஜல் ஜல், வந்தியத் தேவனின் குதிரையின் குழம்பொலி, இளைய பல்லவனின் மரக்கலங்கள் முதலிய ''வரலாற்று ஆதாரங்களை'' நான் முன்வைக்கப் போவதில்லை. ஆனால் அவையெல்லாம் இன்னமும் கூட பல வாசகர்களுக்கு சுகமான கனவைத்தரும் தலையணைகளாக இருப்பது ஏதோ உண்மை தான்) பக்தி இயக்கம் பெருகிய காலமும் அதுவே. குறுநில மன்னர்களின் கைகளிலிருந்து நாடும், வளங்களும், கலைகளும், இன்னபிறவும் பேரரசர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட காலமும் அதுவே. பிராமணர்களின் ஆதிக்கம் மன்னர்களினூடாக தென்னிந்தியாவில் வலுப்பெற்ற காலமும் அதுவே.

இங்கேதான் தமிழிசை களவாடப் படும் காலமும் ஆரம்பிக்கப்படுகிறது எனலாம். கர்நாடக இசையானது சாமவேதத்திலிருந்தும் தேவாரப் பண்ணிசையிலிருந்தும் தோன்றியது என பிராமணர்கள் வாதிப்பதற்கும் இதுதான் காரணமாகின்றது. மக்களிடமிருந்து பிரித்தெடுக்கப்பட்ட இசை இந்து மதத்துக்கு உரிய இசையாக மாற்றம் பெறுகின்றதும் இக்காலத்தில் தான். சமஸ்கிருத மொழியின் ஆதிக்கம் தென்னிந்திய இசையில் வேரூன்றுவதும் இக்காலத்தில் தான்.

இதன் பயனாக பல இசைக் கருவிகளையும், இசை வடிவங்களையும் நூல்களையும் தமிழர்கள் இழந்து விட்டார்கள்.

பெருமன்னர்களின் வீழ்ச்சியோடு கர்நாடக இசை தேய்வுறுகின்றது. மீண்டும் அதற்குப்புத்துயிரளித்தவர்களாக தியாகப் பிரம்மம், தியாகையர் ஆகிய தெலுங்கர்களை வரலாறு காட்டுகின்றது. தமிழின் ஆதிக்கம் முற்றாக ஒழிக்கப்பட்ட தெலுங்கு சமஸ்கிருத கீர்த்தனங்களாக கர்நாடக இசை மாறியது.

தமிழில் பாடுவது தீட்டு எனக்

19 ⟶

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலங்கை திராவிட இயக்கம்: பெ.முத்துலிங்கம் எழுதிய வரலாறு

-எஸ்.வி.ராஜதுரை



## இறுதிப்பகுதி...

கொழும்பிலிருந்து ஜி.பி. வேதநாயம், கே. சுப்பிரமணியம் ஆகியோரை ஆசிரியர்களாகக் கொண்டு வெளிவந்து கொண்டிருந்த 'இந்திய கேசரி' என்ற பத்திரிகை சுயமரியாதைக் கருத்துக்களைப் பரப்பிவந்ததாக 'குடி அரசு' 1935ஆம் ஆண்டு இதழ்களில் வெளிவந்த விளம்பரங்கள் கூறுகின்றன. 'பெரியார் சுயமரியாதை சமதர்மம்' நூலை எழுதுவதற்கான தரவுகளைத் திரட்டுவதற்காக வ. கீதாவும் நானும் சென்னை பெரியார் திடல் நூலகத்திலுள்ள குடி அரசு, புரட்சி, பகுத்தறிவு முதலிய பத்திரிகைகளை (குறிப்பாக 1925முதல் 1944வரையான இதழ்கள்) பார்க்கும் போது, இலங்கை சுயமரியாதை இயக்க ஆதரவாளர்கள் எழுதிய பல ஆழமான கட்டுரைகள் எங்கள் பார்வைக்குப் பட்டன. குடி அரசு, 22.10.32 இதழில் எம். ஆறுமுகம் என்பவர் எழுதிய 'இலங்கையும் தமிழர்களும்' என்ற கட்டுரையின் ஒரு பகுதியை நாங்கள் மேற்கோளாகவும் காட்டியுள்ளோம். மிகச் சிறந்த கட்டுரைகளையும் சுயமரியாதைப் பாடல்களையும் எழுதியவர்கள் ஐ.எம். இப்ராகிம், எம்.கே. எம்.காதர், ஏ.எஸ். முகமது, முகமது தமீம் ஆகிய முஸ்லிம் தமிழர்களாவர். அவர்கள் எழுதியவற்றைப்போல் இந்து, இஸ்லாமிய சமயங்கள், பெண்ணடித்தனம், முதலாளியச் சுரண்டல் முதலியவற்றை விமர்சித்து எழுதக் கூடிய இஸ்லாமியச் சிந்தனையாளர்கள் இன்று மிக அரிதாகவே காணப்படுகின்றனர். தொகுத்துத் தனிநூலாக வெளியிடப்படுவதற்கான தகுதியும் பெறுமதியும் உள்ள கட்டுரைகள் அவை. இலங்கையின் முதல் கம்யூனிஸ்ட் கட்சியான லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர் கொல்வின் ஆர். டி. சில்வா எழுதிய கட்டுரையொன்று குடி அரசு 27.11.44 இதழில் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. இலங்கை சுயமரியாதை இயக்கச் செய்திகள் 'குடி அரசி'ல், 'தமிழ் நாட்டுச்செய்திகள்' என்ற பகுதியின் கீழேயே பிரசுரிக்கப்பட்டு வந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (சேலம் மாநாட்டிற்குப் பிறகு அதுவும் 30.9.44ஆம் தேதிய 'குடி அரசு' இறுதியிலிருந்துதான் அப்பகுதி 'திராவிட நாட்டுச்செய்திகள்' எனப் பெயர் மாற்றம் பெற்றது.) இலங்கைக்குத் தோட்ட தொழிலாளர்களாகவும் சிற்றுழியர்களாகவும் சென்ற 'திராவிடர்களுக்கு நிரந்தரமானத் தீர்வு சுதந்திரத் திராவிட நாட்டில்தான் கிடைக்கும் என்று பெரியார் கருதினார். எடுத்துக் காட்டாக 1940இல் சேலம் நகரில் நடந்த பொதுக்கூட்டமொன்றில் அவர் கூறினார்;

''திராவிட நாடு தனியாகப் பிரிந்தால் தான் நாம் சமுதாயத்திலும், பொருளாதார்த்திலும முன்னேற முடியும். பர்மா தனியாகப் பிரிந்து விட்டதனால் அதற்கு நன்மையுண்டாகவில்லையா? சிலோன் தனியா பிரிந்திருப்பதனால் அதற்கு நன்ன யுண்டாகவில்லையா? அவர்௪ டைய வேலையில்லாத் திண் டத்தையும் அன்னியர் சுரண்ட லயும் ஆரிய ஆதிக்கத்தையும் போக்கிக்கொள்வதற்காக அங்கேயிருக்கும் நமது மக்களை விரட்டுகிறார்கள். நமது கையில் ஆட்சியிருந்தால் நாமும் இங்கிருக்கும் அன்னிய சுரண்டலையும் ஆரிய ஆதிக்கத்தையும் விரட்ட முடியும். நமது மக்கள் வேலை தேடி அன்னிய நாடு சென்று மானமிழந்து தவிப்பதைத் தடுத்து அவர்களுக்கு இங்கேயே வேலை கொடுக்க முடியும்.'' (குடி அரசு 7.7.40)

1939இல் இலங்கைக்குச் சென்ற ஜவகாலாலநேருவால தலைமை தாங்கப்பட்ட 'சுதந்திர இந்தியாவின் பார்ப்பனிய அரசாங்கம் இலங்கையின் இந்திய வம்சாவளித் தமிழர்களுக்குச் செய்துள்ள துரோகத்தைப்போலவே அவரால் அங்கு தொடக்கி வைக்கப்பட்ட இந்தியத் தொழிலாளர் காங்கிசும் நடந்து வந்துள்ளது வரலாறு. அதற்கு மாறாக பெரியாரின் சுயமரியாதை இயக்கம், அவரது தலைமையில் கீழ் செயல்பட்ட நீதிக்கட்சி, பின்னர் திராவிடர் கழகம், 1970கள் வரை தி.மு.க. ஆகியன இலங்கை (மலையகத்) தமிழர்களுக்கு ஆதரவு காட்டி வந்துள்ளன. இன்றும் கூட திராவிடர் கழகம், போட்டி திராவிடர் கழகங்கள், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடமைக் கட்சி சில நக்சலைட் குழுக்கள், தமிழ்த் தேசியக் குழுக்கள், கட்சிகள் ஆகியன தொடர்ந்து தம் தார்மீக ஆதரவைத்தெரிவித்து வருகின்றன. ஆனால் அவற்றின் நிகழ்ச்சி நிரல்களில் முன்னுரிமை கொடுக்கப்படுவது ஈழப் பிரச்சினைதான். மலையகத் தமிழரோ அங்கும் இங்கும் எங்கும் அந்நியமாக்கப்பட்டவர்களாகவே உள்ளனர்.

மேலே கூறப்பட்ட செய்திகளும் விவரங்களும் பெ.முத்துலிங்கத்தின் நூலை விமர்சிப்பதற்காகவன்றி அவரது 'எழுதாத வரலாற்றி'லும் இன்னும் எழுதப்பட வேண்டிய பக்கங்களைச் சேர்த்துக்கொள்வதற்காகவே தொகுத்துத் தரப்பட்டுள்ளன. ஏனெனில், 1932இல் ...கையில் சுயமரியாதை ...யக்கம் தொடங்கப்பட்டமை (இதுவும் சரியான தகவல் அல்ல என்பதை நாம் சுட்டிக்காட்டியுள்ளோம்.) பெரியாரின் இலங்கைச் சொற்பொழிவு ஆகியன தவிர 1947 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட சுயமரியாதை/ திராவிடர் இயக்கச் செயற்பாடுகள் பற்றியோ, அதன் முன்னோடிகளாக இருந்தவர்கள் பற்றியோ இந்த நூல் ஏதும் கூறுவதில்லை. அதற்குக் காரணம் அவற்றைப் பற்றிச் சொல்வதற்கு வேண்டியதரவுகள் இலங்கையில் அவருக்குக் கிடைக்கவில்லை. தமிழகத்தில் அவற்றைத் திரட்டிக் கொள்ளவும் அவருக்கு வாய்ப்பு இருக்கவில்லை. 1947 - 48 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய செய்திகள் ஒன்றிரண்டை அவர் கூறியுள்ள போதிலும் 'எழுதாத வரலாறு' என்பது முதன்மையாக அண்ணாவால் தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தாக்கத்தில் உருவான இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் வரலாறுதான். இங்கு மற்றொரு விவரப் பிழையைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. 1948இல் சென்னை முதலமைச்சராக இருந்தவர் ராஜாஜி அல்ல. ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார். மேலும், பெரியார்- மணியம்மையார் திருமணம் தான் தி.க. - தி.மு.க. பிளவை உருவாக்கியது என்ற வழக்கமான பிரச்சாரத்தையே பெ. முத்துலிங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறார். பெரியாருக்கும் அண்ணாவுக்குமிடையே மிகக் காத்திரமான அரசியல், சமூக பண்பாட்டுக் கருத்து வேறுபாடுகள் இருந்தன. 1947 ஒகஸ்ட் 15ஆம் 'நாளை பெரியார் துக்கநாளாகக் கருத, அண்ணா அதை இன்ப நாளாகாகக் கொண்டாடினார். அது அவர்களிடையே தோன்றியிருந்த ஆழமான கருத்தியல் வேறுபாட்டின் வெளிப்பாடாகும்.

எனினும் இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழகம் (இது முத்துலிங்கத்தின் நூலின் பல இடங்களில் திராவிட முன்னேற்றக் கழகம் என்றே அச்சிடப்பட்டுள்ளது. 'ர்' எழுத்து முக்கியமான வேறுபாட்டைக் குறிக்கிறது. தமிழ் நாட்டிலுள்ள திராவிடர் கழகத்திலுள்ள 'ர்', திராவிட முன்னேற்றக் கழகத்தில் இல்லாதது தற்செயலாக அல்ல) பெரியாரின் சமூக சீர்த்திருத்தக் கொள்கையைக் கைவிடாமலேயே தனது பணிகளைச் செய்து கொண்டிருந்தது. பெரியார் மரபை அது கைவிடாமலிருந்தது என்பதை முத்துலிங்கம் தெளிவாகச் சுட்டிக் காட்டியுள்ளார். 1947ஆம் ஆண்டு தொடக்கம் அவர் எழுதியுள்ள இந்த நூல், தமிழ் நாட்டு மக்களுக்கு இதுவரை தெரிவிக்கப்படாதிருந்த ஏராளமான வரலாற்றுச் செய்திகளை வழங்கியுள்ளது. தமிழர்மரபிலுள்ள தி.மு.க.வுடன் உறவை வைத்துக் கொண்டிருந்த இலங்கை தி.மு.க., தான் பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கை (இந்திய தமிழ் மக்களை இலங்கையின் சட்டபூர்வமான குடிமக்கள் என்று சரியாகவும், உறுதியாகவும் கணித்து அவர்களது குடிஉரிமைக்காக, பொருளாதார மேம்பாட்டுக்காக மட்டுமின்றி, ஈழத்தமிழர்களின் உரிமைக்காகவும் சிங்களப் பாட்டாளி மக்கள் உள்ளிட்ட அனைத்துப் பாட்டாளி மக்களுக்காகவும் குரல் கொடுத்திருக்கிறது. எனினும் சிங்கள இனவாதக் கட்சிகள் மட்டுமன்றி, மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் கட்சி, தொண்டமான், அசீஸ் ஆகியோரும் இ.தி.மு.க. வின் காலை வாரிவிட்டிருக்கின்றனர். தமிழரசுக் கட்சியும் கூட இ.தி.மு.க. தடை செய்யப்பட்டிருந்ததைப் பயன்படுத்திக்கொண்டு மலையகப்பகுதியில் தனது செல்வாக்கைப் பரப்ப முயன்றிருக்கிறதேயன்றி ஒரு தோழமைக் கட்சியிடம் காட்ட வேண்டிய பொறுப்புணர்வைக் காட்டவில்லை. எனினும் இ.தி.மு.க.வைப் பற்றிய் புளுகுச் சித்திரத்தைத்தீட்டிய பீட்டர் கெனமனின் கம்யூனிஸ்ட் கட்சியை ஒப்பிடுகையில் தமிழர் பிரதிநிதி அ. அமிர்தலிங்கம் காட்டிய துணிச்சலும் நேர்மையும் பாராட்டத் தக்கவை.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திவந்த இரு முக்கிய பத்திரிகைகள் பிராவ்தா (உண்மை) இஸ்வெஸ்தியா (செய்தி) ஆகியனவாகும். 'பிராவ்தா' வில் உண்மை இல்லை, இஸ்வெஸ்தியாவில் செய்தி இல்லை என்று ஒரு பழமொழியே உருவாகியிருந்தது. பீட்டர் கெனமனின் கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான 'எத்த' (உண்மை')யும் கூட அப்படிப் பட்டதுதான் என்பதை முத்துலிங்கம் அம்பலப்படுத்தியுள்ளார். இலங்கையிலுள்ள முதன்மையான நாடாளுமன்ற கம்யூனிஸ்ட் கட்சிகள் இரண்டுமே பூர்ஷ்வா தேசியவாதத்தின் செல்வாக்குக் குட்பட்டு சமூக ஜனநாயகக் கட்சிகளாகி, பின்னர் இனவாதத்திற்கும் துணைபோனதைத் தமிழகத்தில் பலரும் அறிவர். ஆனால் 'எத்த' வின் அவதூறுப் பிரச்சாரங்கள் அது அவிழ்த்துவிட்ட புளுகு மூட்டைகள் மட்டுமல்லாது சண்முகதாசனின் பீகிங் ஆதரவு கம்யூனிஸ்ட் கட்சியின் நேர்மையீனமான நிலைபாடும் கூட எங்களைப் போன்றோருக்கு புதிய செய்திகளே. இலங்கையில் சாதி எதிர்ப்பு போராட்டத்தைத் தொடங்கியவர்களே சண்முகதாசன் கட்சியை சேர்ந்தவர்கள் தான் என்ற பிரச்சாரம்தான் எங்கள் மத்தியிலும் வேரூன்றியுள்ளது. அதற்கான களம் அமைத்துக்கொடுப்பதில் இலங்கை திராவிடர் இயக்கம் முன்னோடியாகச் செயல்பட்டதை முத்துலிங்கத்தின் நூல் தக்கசான்றுகளுடன் பதிவு செய்துள்ளது.

தமிழ் நாட்டின் திமுகவிற்கும், இலங்கை திமுகவிற்குமிடையே இருந்த உறவுகள், வேறுபாடுகள் ஆகியனவற்றைத் தெளிவாக எடுத்துரைக்கும் முத்துலிங்கம் தமிழ்நாட்டு தி.மு.க.வின் உணர்ச்சி, கவர்ச்சி, அரசியல் இலங்கையில் மலையகத் தமிழர் ஈழத் தமிழர் ஆகியோரிடையே ஏற்படுத்திய தாக்கத்தையும் சிறிது 'விளக்கியிருந்திருக்கலாம். ஆயினும் திராவிடர் இயக்கம் என்பது இலங்கைத் தமிழரிடையே 'பிரிவினைவாதம்', இனவெறி, மொழிவெறி, மீட்புவாதம் ஆகியவற்றைத் தவிர வேறெதையும் உருவாக்கவில்லை என்று நாங்கள் இதுவரை ஈழமுற்போக்கு/ இடதுசாரி சிந்தனையாளர்களிடமிருந்து கேட்டு வந்த 'செய்திகளை' பொய்யாக்குகின்ற வரலாற்றுண்மைகளை முத்துலிங்கம் நமக்குத் தந்துள்ளார். இலங்கை சுயமரியாதை/திராவிடர் இயக்கம் பற்றிய வரலாற்றுடன் தொடங்கும் இந்த நூல் இளஞ்செழியன் என்ற தனிமனிதரின் வரலாறாகவே முடிகிறது. முத்துலிங்கம் தன் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட வரலாற்று காலகட்டத்தின் நாயகர் அவர்தான் என்பதுதான் அதற்குக் காரணம். ஈழ, சிங்கள மார்க்சியவாதிகள் போல பல் கலைக்கழகப் பட்டமோ, புத்தகப் படிப்போ இல்லாதவரும் சுயமரியாதை சமதர்மக் கொள்கையை ஆக்கபூர்வமாக நடைமுறைப் படுத்தியவருமான இளஞ்செழியன் மார்க்சியத்தைத் தனது தத்துவ ஆயுதமாக ஏற்றுக்கொண்டுள்ளது வரவேற்கத்தக்கதாயினும், தேசியம், மலையக மக்களின் தனித்துவம், சாதியம், பெண்ணடிமைத்தனம் ஆகியவற்றைத்தனது குடையின் கீழ் கொண்டுவராத ஒரு மார்க்சியத்தைக் கடைப்பிடிப்பாரேயானால், இலங்கை, இந்திய இடதுசாரிகள் செய்த அதே வரலாற்றுத் தவறுகளையே அவரும் செய்தவராவார். இலங்கையிலுள்ள பல்வேறு தேசிய இனங்களும், இனத்துவக் குழுக்களும் பெரும் நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கையில் இளஞ்செழியன் அரசியல் துறவறம் பூண்டுவிட்டரோ என்ற எண்ணம் நமக்குத் தோன்றுகிறது. தேசிய இனப் பிரச்சினையைக் கையாள்கிற ஒரு மார்க்சியவாதி, 'தேசியவாதி' யாக மாறவேண்டிய அவசியமில்லை. சாதியப்போராட்டம் நடத்துகிற மார்க்சியவாதி வர்க்கப் போராட்டத்தைக் கைவிட வேண்டியதில்லை. மார்க்சியப் போர்வையின் கீழ் சிங்கள இனவாதத்தை முன்னிறுத்தி, மலையகத் தமிழர்களை இந்திய விஸ்தரிப்புவாதிகளின் கையாட்களாகக் கருதி ஜே.வி.பி. தலைவர் ரோகண விஜயவீரவை நேருக்கு நேர் சந்தித்து அவரது நிலைப்பாட்டை மறுதலிக்கும் துணிச்சலும் விவேகமும், கொண்டிருந்த ஒரு தலைவரை, ஒரு தமிழரை சந்திக்க வேண்டும் என்ற பேராவலைத் துண்டிவிட்டுள்ளது. முத்துலிங்கத்தின் 'எழுதாத வரலாறு' அந்தனி ஜீவா போன்ற இடதுசாரித் தோழர்கள், திராவிடர் இயக்கப் பாரம்பரியத்தில் வந்தவர்கள் என்பது ஒரு இனிய வியப்பூட்டும் செய்தி.

அச்சுப்பிழைகள் மீது கூடுதல் கவனம் செலுத்தியிருக்கலாம். மேற்கோள்கள் வித்தியாசப் படுத்தப்பட்ட முறையில் பிரித்துக் காட்டப்பட்டிருக்க வேண்டும். இவை நூலிலுள்ள சிறு குறைகள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நூல் விமர்சனம்

**"யாழ்ப்பாண இடப்பெயர்வு"**
**கார்த்திகேசு குகபாலன்**
**விலை 200/=**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியற்றுறையின் முதுநிலை விரிவுரையாளரும், புங்குடுதீவிலே சைவம், கல்வி, வர்த்தகம் ஆகியனவற்றிற்குப் பேர்போன (பேர் போன என்பதற்கு தகுதி விதி என்ன?...) குடும்பத்திலே பிறந்தவருமான கலாநிதி குகபாலனின் "யாழ்ப்பாண இடப் பெயர்வு" என்னும் நூல் 160 பக்கங்களுடன் வெளிவந்துள்ளது. மிகவும் நேர்த்தியான முறையில், அச்சுப்பிழைகள் எதுவுமின்றி எட்டு அத்தியாயங்களில் இடப்பெயர்வு பற்றிய பல விபரங்கள், விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு ஆதாரமான உசாத்துணைகளும் நூலின் இறுதியில் இடம்பெற்றுள்ளன.

தமிழர்களின் வரலாற்றுப் பின்னணி, தூண்டப்பட்ட இடப்பெயர்வு, சேரிட வாழ்வு, குடியிருப்புக்கள், கல்விச் செயற்பாடுகள், தொழில் நிலை, பிற செயற்பாடுகள், யாழ்ப்பாணம் மீள் இடப்பெயர்வு ஆகிய விடயங்களில் நூலின் எட்டு அத்தியாயங்களும் அமையப் பெற்றுள்ளன.

"தீவகம்: வாழ்வும் வளமும்" என்ற ஆசிரியரின் முதலாவது நூலுக்குப் பின் பிரதேச விடயங்களை அறிமுகம் செய்வதாக இந்நூல் விளங்குகின்றது. யுத்த சூழ்நிலையில் ஏற்படுகின்ற நெருக்கடிகள் காரணமாக மக்கள் தமது வாழிடங்களை விட்டு வெளியேறுவது இயல்பான நிகழ்வுகள். ஆனால் இத்தகைய நிகழ்வுகளை அச்சமூகத்தில் ஒரு சாதாரண மட்டத்தில் இருப்பவர் பதிவு செய்தல் என்பது ஒரு புதிய விடயமல்ல. உயர்கல்வித்துறையில் அறிவு ஜீவியாக இருக்கும் ஒருவரினால் இவ்விடயம் பற்றிய நூல் வெளிக் கொணரப்படும் பொழுது அது மிகவும் கவனத்திற்குரிய தொன்றாக மாறுகின்றது. ஆழமான வரன்முறையான ஆய்வும், புலமைப் பாய்ச்சலையும், எதிர்கால நடவடிக்கைகளுக்கான சிந்தனைகளையும் அந்நூல் கொண்டிருக்க வேண்டும் என்பதை யாவரும் எதிர்பார்ப்பர். எனவே இந்நூல் பற்றிய விமர்சனமும் தவிர்க்க முடியாததொன்று.

சமூகவியல் நோக்கில் விடயங்களை பகுக்கவும், தொகுக்கவும் தெரிந்திருக்க வேண்டிய அளவிற்கு சமூகத்தின் நிகழ்வுகளை முன்னோக்கிப் புரிந்து கொள்ளக்கூடியதாகவும் இருக்க வேண்டும். அத்துடன் தென்மராட்சி கிராமப் பகுதிக்குரிய பண்பாட்டு இறுக்கத்தினையும் புரிந்து கொள்ளல் வேண்டும். சில காலத்தின் பின் ஆய்வுக்கான மூலநூலாக "யாழ்ப்பாண இடப்பெயர்வு" கருதப்படும் என்பதால் இதில் உள்ள தரவுகள் உண்மைத் தரவுகளாக மாறிவிடும் அபாயமும் உள்ளது. அதனால் ஆய்வாளர்களைச் சிந்திக்கத் தூண்டும் விதத்தில் சில கருத்துக்களை முன்வைக்கலாம் என கருதுகின்றோம். மிக ஆழமாகப்போகாமல் நூலில் துருத்திக்கொண்டிருக்கும் சில விடயங்களை மட்டும் தொட்டுக்காட்டலாம் என நினைக்கிறோம். இப்பதிவுகள் அவசியமானவை. காலத்தின் காட்டாயமும்கூட.

இடப்பெயர்வின்போது தமிழ்மக்களிடையே காணப்பட்ட சுயநலன்களையும், குறுகிய மனப்பான்மைகளையும், துன்பகரமான நிகழ்வுகளின் போது குடும்பம், உறவினர் என்ற பாசஉணர்வுகளையும்மீறி மனிதனின் விரக்திகள் எவ்வாறு வெளிப் படுத்தப்படுகின்றது என்பதை குகபாலன் மிகயதார்த்தமாக எடுத்துக்காட்டியுள்ளார். இவ்விடப் பெயர்வு நண்பர்களிடையே பகைமைகளையும், மனஸ்தாபங்களையும் வளர்த்து அவற்றை நிரந்தரமாக்கி விட்டது எனவும் தனது அவதானிப்பில் கண்டுள்ளார்.

இவற்றிற்கெல்லாம் இடப்பெயர்வு தான் காரணமா...? மக்கள் இடம் பெயர்தலுக்கு முன்பு தமது சொந்த இடங்களில் குடியிருந்தபோது நிலவிய சமூகநிலையில் ஆசிரியரினால் குறிப்பிடப்படும் இத்தகைய பிரச்சினைகள், முரண்பாடுகள், குழப்பங்கள் மற்றும் நண்பர்களிடையே ஏற்படவில்லையா? இடம்பெயர்வினால் மட்டுமே இச்சுயநலன்கள் மேலெழுகின்றது என்பதையே ஆசிரியர் குறிப்பிடுகின்றாரா?. இத்தகைய பிரச்சினைகள் எழுவதற்கான அடிப்படைக் காரணங்கள் என்னவென்பதை மிக நுணுக்கமாக ஆராயத்தவறவிட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. அத்துடன் இப்பிரச்சினைகளை எத்தகைய கருத்தியல் பின்னணியில் வைத்து ஆசிரியர் நோக்குகின்றார் என்பதும் விளங்கவில்லை. நடந்த நிகழ்வுகளை அப்படியே விளக்கிச் செல்வது ஆசிரியரின் சமூகவியல் துறையிலான பரீட்சயமற்ற தன்மையையே எடுத்துக் காட்டுகின்றது. இதனை வலியுறுத்தும் முகமாகவே போரசிரியர் சிவசாமி நூலாசிரியரின் புகழ்பாடும் பக்கத்தில் (அட்டையின்பின்பக்கம்) "இந்நூல்குறிப்பிட்டகால நிகழ்வுப் பதிவேடு" எனக் குறிப்பிட்டாரோ என எண்ணத்தோன்றுகின்றது.

இராணுவ ரீதியிலான நெருக்கடிகளுக்குமத்தியிலும் மண்ணோடு இயைந்து வாழ்ந்த மக்கள் எவ்விதத் தீர்மானமும் எடுக்காமலேயே கைகளில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு, அநாதைகளாகத் தமது உயிருக்கு யிரான நிலத்தினையும், சொத்துக்களையும்விட்டோடிவந்ததினால் ஏற்பட்ட உளவியற் தாக்கங்கள் இடப் பெயர்வாளர்களிடையே ஏற்பட்ட மனக்கசப்புகளுக்கும், குரோத உணர்வுகளுக்கும், வெறுப்புக்கும் காரணமாக இருந்திருக்கும் என்பதை ஆசிரியர் வெளிப்படுத்தத்தவறிவிட்டார். உண்மையில் இத்தகைய ஆய்வொன்றினை செய்வதற்கு உளநூல் மற்றும் சமூக உளவியல் சார்ந்த ஓர் அணுகுமுறையை ஆசிரியர் நிச்சய மாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும்.

கடந்த இரு தசாப்தங்களாகக் குடித் தொகை தொடர்பான ஆய்வுகளில் குறிப்பாக இடப் பெயர்வு பற்றிய ஆய்வுகளில் ஆர்வம் கொண்டவன் என்று தனது மேதாவிலாசத்தைத்தானே அறிமுகம் செய்து கொள்ளும் ஆசிரியரே இதனை "முழுமையானதொரு ஆய்வு நூல் என்று கூறுவதற்கில்லை" என உறுதியாகக் குறிப்பிடும் பொழுது அணிந்துரை வழங்கிய பாலச்சந்திரன் அவர்கள் இது அறிவு மிகக் கொண்டு (?) செய்த ஆராய்ச்சியாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டு ஐஸ் வைப்பது மட்டுமன்றி வாசகர்களையும்தடுமாறவைத்து தவறான சிந்தனைப்போக்கூடாக வழிநடத்துகின்ற வேலையும் செய்கிறார்.

இலங்கையின் அரசியல், விஞ்ஞான, வரலாற்றாசிரியர்களில் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்கும் பேராசிரியர்களான சின்னப்பர் அரசரெட்னம், ஜெயரட்னம் வில்சன் போன்றவர்கள் கூட தம்மை இருபது வருட ஆய்வு அனுபவம் கொண்டவர்கள் எனக் குறிப்பிட்டதில்லை. ஏனெனில் அவ்விரு தசாப்தத்துக்குரிய பங்களிப்பு என்பது "பத்திரிகைக்கட்டுரைகள்" அன்று.

வரலாற்றுப் பின்னணி என்ற முதல் அத்தியாயத்தில் இலங்கைத் தமிழர்களின் வரலாற்றை விளக்கும் ஆசிரியர், "அனுராதபுரம், பொலநறுவை இராச்சியங்களின் வீழ்ச்சியினைத் தொடர்ந்து வட மத்திய பிரதேசங்களிலிருந்து நோய் மற்றும் பாதுகாப்புக் கருதி வடக்கு, கிழக்கு, வடமேற்குப் பிரதேசங்களைத் தமிழர் சென்றடைந்தனர் எனக் குறிப்பிடுகிறார். ஆனால் இத்தகவல் பொக்கிஷத்துக்கான ஆதார மூலத்தினைக் குறிப்பிடவில்லை. தமிழர் வரலாற்றைப் புராணக் கதைகளாக மாற்றி, அவற்றின் யதார்த்தத்தை அடியோடு அழித்தொழிக்கும் செயன்முறைகளில் இதுவும் ஒன்று.

அண்மைக் காலங்களில் தமிழர் வரலாற்றினை, வரலாற்று நாவல்களாகப் படைக்கும் சிலரின் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று. உண்மையான வரலாற்று ஆதாரங்களின் தரத்தினைக் குறைத்து, கொச்சைப்படுத்தும் இம்முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

1983ஆம் ஆண்டு கலவரத்தின்போது ஏற்பட்ட சேதங்களையும், உயிரிழப்புகளையும் குறிப்பிடும் ஆசிரியர் அப்புள்ளிவிபரங்களுக்கான மூலத்தைக் குறிப்பிடவில்லை. வாய் மொழி மூலக் கதைகளாக அமையும் இவை பத்திரிகைக்கட்டுரைகளுக்கும்கூட பொருத்தமற்றது.

**வெறும் 'காலநிகழ்வுப் பதிவேடு'தானா?**




சசிராணி

பல இலட்சக்கணக்கான இடப் பெயர்வாளர்களில் ஒருவனாக இருந்து அதன் செயற்பாட்டின் மூலமான நேரடி அனுபவம் பெற்றவரான ஆசிரியர் இடப் பெயர்வுக்கான காரணத்தை மிகவும் விரிவாக விளக்கத்தவறியதேன். பயங்கரமான எறிகணை, விமானத் தாக்குதல்களுடன் முன்னேறிவரும் இராணுவத்தின் தாக்குதல்களில் இருந்து தப்புவதற்கு மக்கள் தமது இருப்பிடங்களை விட்டோடினரா அல்லது ஒரு சிலர் விமர்சிப்பது போன்று விடுதலைப் புலிகளின் தூண்டுதலினால் தான் வெளியேறினரா அல்லது வேறு சில காரணிகள் காரணமாக இருந்தனவா என்பதை இடப் பெயர்வில் ஆய்வு அனுபவம் மிகக் கொண்ட ஆசிரியர் பின்னணி நிகழ்வுகளுடன் தெளிவாக்காது விட்டமை நூலின் அடித்தளத்தையே ஆட்டம் காண வைத்துள்ளது. சிலவேளை 'சிக்குறாது' தப்புவதற்கான நோக்கமாக இருந்திருக்குமோ!

"யாழ்ப்பாண இடப்பெயர்வு" என்ற நூற்பெயரே பொருத்தமற்றது. உண்மையில் அப்போதைய சூழ்நிலையில் இடம்பெற்ற மக்களின் பெயர்ச்சி போன்றே யூதர்களின் வெளியேற்றமும் இருந்தது. எனவே இதனை இடப் பெயர்வு எனக் குறிப்பிட முடியாது. "வெளியேற்றம்" (Exodous) என்பதே பொருத்தமான பதம். குடித் தொகைப் புவியியலில் அகரவரிசை தெரிந்த எவரும் இதனை விளங்கிக்கொள்வர். எனவே இடப்பெயர்வு (Migration), வெளியேற்றம் என்றும் இரு வேறுபட்ட எண்ணக்கரு விளக்கமின்றியே இப் பிரச்சினையை நூலாசிரியர் நோக்கியுள்ளார்.

இடப்பெயர்வினை, தன்னிச்சையான இடப் பெயர்வு, தூண்டப்பட்ட இடப் பெயர்வு எனப் பிரிக்கும் ஆசிரியர் அதற்கான விளக்கத்தினையும் கொடுத்துள்ளார். ஆனால் பத்து நாட்களுக்குள், ஏறக்குறைய 525,000 மக்களும் சொல்லொணாத் துயரங்களுடன் அடியெடுத்து, அடிவைத்து, நின்றும், இருந்தும் சென்றமையை இந்த வரையறைக்குள் அடக்க முடியாது. இந்நிகழ்வுகள் தொடர்பாக வெளிவந்த பல ஆங்கிலக்கட்டுரைகளில் Exodous என்ற பதம் பயன்படுத்தப் பட்டுள்ளதை ஆசிரியர் கவனிக்கத் தவறிவிட்டார்.

குடித் தொகைப் புவியியல் தொடர்பான ஆய்வுகளை கற்கும் எவரும் இடப் பெயர்வுச்செயன்முறை முற்றுப் பெறுவதற்கு முன்னரே அதனை ஆய்வு செய்யும் முயற்சிகளை எங்கும்கண்டிருக்க மாட்டார்கள். தமது இருப்பிடங்களை விட்டோடலினால், ஏற்பட்ட விளைவுகள், குறிப்பாக சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுத்தாக்கங்களை ஓர் அமைதியான சூழ்நிலை ஏற்பட்டதன் பின்பே ஆய்வுக்குட்படுத்த முடியும். உடனடியாக ஆய்வு செய்ய விரும்பின் அதற்கான அரசியல் பரிணாமத்தை வெளிக்கொணர முற்பட்டிருக்கலாம். எனவே இரு தசாப்த ஆய்வு அனுபவம் கொண்ட ஆசிரியர் பொருத்தமற்ற விடயத்தை பொருந்தாத சூழ்நிலையில் தவறான, தலையங்கத்தின் கீழ் ஆய்வு செய்ய முற்பட்டுள்ளார்.

இடப் பெயர்வாளர் தமது சொந்த வீட்டில் அசைவ உணவு சமைக்கும் சுதந்திரம், இடம் பெயர்ந்து தங்கியிருக்கும் இடங்களில் கட்டுப்படுத்தப்பட்டது என்பது பெரிய பிரச்சினையாக எடுத்துக்காட்டப் படுகின்றது. இந்த மக்கள் இடப் பெயர்வதற்கு முன்பு இத்தகைய மிகச்சிறிய கட்டுப்பாடுகள் கூட அவர்களிடையே காணப்படவில்லையா? மாமிச உணவைச் சமைப்பதினால் சுற்றுப் புறச் சூழல் பாதிக்கப்படும். மண்வெட்டியை எடுத்துக் கொண்டு அடிவளவிற்குச் செல்லுதல் போன்ற அம்சங்கள் ஆசிரியரின் அறியாமையையும் ஆய்வில் பரீட்சயமற்ற தன்மையையும் வெளிக்காட்டுகின்றன.

மக்கள் பெருமளவில் வெளியேறி, எங்கு நிரந்தமாகத் தங்குவது என்ற முடிவிற்கு வருமுன்னரே, அவர்கள் இடம் மாறிக் கொண்டிருக்கும் பொழுதே அந்நிலைமைகளை எவ்விதமான கருத்தியல் பின்னணியுமின்றி மிக அவசரமாக வெளிக்கொணர்ந்ததன் நோக்கம் என்ன என்பது விளங்கவில்லை. இடப் பெயர்தலின்போது பெண்களினால் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சினைகள் எதனையும் இந்நூல் குறிப்பிடவில்லை. பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள், அந்தரங்கம் பேணும் உரிமைகள் பற்றி நூலில் எதுவும் சொல்லப்படவில்லை.

தனக்குத் தெரிந்த நண்பர்களிடமும், உயர்கல்வி நிறுவனத்தில் உயர்பதவி (?) வகிப்பவர்களிடம் மட்டுமே பேட்டிகண்டு அதன்மூலம் பெறப்பட்ட தகவல்களையும், அறிக்கைகள் மற்றும் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளையும் ஆதாரமாக வைத்தே இந்நூல் எழுதப்பட்டுள்ளது. மாதிரி எடுப்பின் மூலம் வினாக் கொத்தினூடாக தரவுகளைப் பெற்று அதனைக் கணித்து, அதன் மூலம் உறுதியான முடிவுகளை வெளிப்படுத்தும் "முறையியல்" (Methodology) இங்கு பயன்படுத்தப்பட வில்லை. இதனால் கருத்து வேறுபாடுகள் ஏறத்தாழ 75.0 சதவீதத்தினரிடையேயும், "பொதுச் சமையல்செல்வினத்தில் 90.0 சதவீதத்துக்கு மேல்" என்ற சொற்பிரயோகங்கள் கணிப்பீடு இன்றி துணிந்து கூற முடியாததினால் பொருத்த மற்றதாகவே உள்ளன.

இந்நூலின் ஆசிரியர் பல்கலைக்கழக விரிவுரையாளர் என்பதினால் அவரால் செய்யப்படுகின்ற ஓர் ஆய்வு, நூலாக வெளிவரும் பொழுது அதனை மாணவர்கள் கற்று அவற்றினை விளங்கிக்கொள்வதற்கும், முறையியலுடன் கூடிய ஆய்வு அம்சங்களைத் தமது ஆய்வுகளில் பயன்படுத்தவும், தம்மை வளர்த்தெடுப்பதற்கும் உதவக்கூடிய வகையில் நூல்களைப் படைப்பதற்கான ஒரு கடமைப்பாடு விரிவுரையாளர்களுக்கு உண்டு. இந்நூல் அந்நோக்கிற்கு எதிராகவே செல்லுகின்றது. இராணுவ நகர்வையும், வெறிச் சோடிய கிராமங்களின் அமைவிடங்களையும் காட்டுகின்ற வரைபடங்கள் கூட இந்நூலில் இல்லை.

எனவே இத்தகைய குறைபாடுகள் நூலில் காணப்படுவதனை அறிந்துதான் "ஆசிரியர் புவியியல் சார்ந்த நூல்களையும், பல்கலைக்கழக பாடசாலை மாணவர்களுக்கு ஏற்ற வகையிலான நூல்களையும் வெளியிடவேண்டும்" என்று பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை தமது வாழ்த்துரையில் அறிவுரை கூறியுள்ளமை மனங்கொள்ளத் தக்கது.

வலிகாமம் பிரதேசத்தில் நிகழ்ந்த அனர்த்தங்களைப் போன்று எதிர்காலத்தில் ஏற்படக்கூடாது. சம்பந்தப்பட்டவர்கள் அதற்கான காரணங்களை கண்டறிந்து தீர்வுகளைக் காணாது விட்டால் தமிழரிற் பலர் சர்வதேச அகதிகளாக மாறிவிடுவர் என ஆசிரியர் குறிப்பிடுகிறார். இக்காரணிகளை ஆராய்வதன்றோ நூலாசிரியரின் முழுமுதல் நோக்கமாக இருந்திருக்க வேண்டும். அப்படியாயின் இந்நூலின் உள்ளடக்கம்தான் என்ன...?

அடுத்த பதிப்புக்களை மேம்படுத்தக் கூடிய வகையில் ஆலோசனைகளைத் தந்துதவுமாறு குறிப்பிடும் ஆசிரியருக்கு எமது ஒரேயொரு வேண்டுகோள் இதுதான். அதாவது "விஞ்ஞானரீதியான ஆய்வு முறையியலை ஓரம் கட்டி "சில்மிச" கதைகளை நூலாக வெளியிடுவதை (பேராசிரியர் பதவி உயர்வுகளுக்கு தரமில்லாது விட்டாலும், நூலொன்று தேவையாக இருந்தாலும்) இனியாவது நிறுத்துமாறு சகல அறிவு ஜீவிகளையும் பணிவன்புடனும், எதிர்கால சந்ததியினரின் நலன் கருதியும் வேண்டி நிற்கிறோம்.

## தமிழிசை...

கருதப்பட்டது. தமிழில் யாராவது பாடினால் அந்த மேடை கழுவப் பட்ட சம்பவங்களும் நிகழ்ந்தன. மீண்டும் 'தமிழிசை' என்னும் கருத்தியல் பெரியாரினால் முன்வைக் கப்படுகின்றது. மேட்டுக்குடி சங்கீதம் மெல்ல மெல்ல கீழிறங்கி வர ஆரம்பிக்கிறது. வழக்கம் போல் பாரதியின் பங்களிப்பு இங்கே கணிசமானது. பாரதிக்குப் பிறகு பாரதிதாசன் தமிழிசை இயக்கத்துக்கு நிறைய பங்களிப்பு செய்திருக்கிறார்.

இப்பொழுது ம.க.இ.க.னர் தமிழிசையை 'தமிழ் மக்கள் இசை'யாக மீட்டெடுத்து, வளர்த்துச் செல்வதற்கான செயல்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்துகிறார்கள். அதன் பயன்களில் ஒன்றுதான் மேலே கூறிய ஒலிப்பேழைகள். மிக அருமையானவை. பெற விரும்புவோருக்காக முகவரி கீழே தரப்படுகின்றது.


*ஆர். சீனிவாசன்*
*45, செங்குன்றம் சாலை,*
*வில்லிவாக்கம்,*
*சென்னை 600049.*

பறைமேளத்திலிருந்து கூட எவ்வளவு லலிதமானதும், வீரியமானதுமான இசையை ஒலிக்கலாம் என இவ்வொலிப் பேழைகள் நிரூபிக்கின்றன. இங்கே ஈழத்தில் எம் கண் முன்னாலேயே பறைமேளம் அழிந்து கொண்டிருக்கின்றது. முப்பத்தியேழு வயதான நானே (ஆழ்வார்க்குட்டி) கூட ஐந்து வகையான பறைகளை கண்டிருக்கிறேன். ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரகம். பொதுவாக சாவீட்டுச் செய்தியை

→18

www.tamilarangam.net





## கிழக்கும் மேற்கும்!

மேற்படி தொகுப்புப் பற்றிய துடைப்பானின் குறிப்புகள் (சரிநிகர் 123) கண்டோம். அது தொடர்பாகப் பதில் எழுதுவது எமக்கு அவசிய மாகப்படவில்லை. எனினும், ஆராய்ந்து பாராமல், ஆதாரமற்ற அவதூறுகளை முன்வைக்கும் துடைப்பான் அவர்களின் எழுத்துகள் குறித்து 'சரிநிகர்' வாசகர்கள் எச்சரிக்கையாக இருத்தலின் அவசியம் கருதியே இதனை எழுத நேரிடுகிறது.

அந்த வி(ஷமத்தனத்தை) மரிசனத்தை எழுதத் துடைப்பான் எடுத்துக்கொண்ட நேரத்தில், அவரது பட்டியலில் இடம்பெற்ற எழுத்தாளர்கள் (எல்லோருமே எழுத்தாளர்கள்தானா என்பது ஒருபுறமிருக்க) சிலரிடமாவது விசாரித்திருப்பாரேயானால், அதனை எழுத நேர்ந்திருக்காது. அதைவிடவும் சரிநிகரின் பக்கத்தின் கணிசமான பகுதி வீணாகிப்போயிருக்காது. வாசகர்களின் நேரமும், சிந்தனையும் விரமாயிருக்க மாட்டாது.

அடுத்து அவரது குறிப்பின் சில வரிகளைப் பார்ப்போம்.

''ஈழத்தமிழர்கள் புலம்பெயர் வாழ்வு ஆக்க இலக்கியத்துறைகளில் புதிய வளத்தைக் கொடுக்க விளைந்திருப்பதை இன்றைய காலம் நமக்கு நிரூபிக்கின்றது. குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர் வாழ்வு கொள்ளும் நம்மவர்களின் பங்களிப்புக்கள் இவற்றில் கணிசமானவை, இதற்கு சான்று பகர்வது போல் வெளிவந்துள்ளது 'கிழக்கும் மேற்கும்...''

மேலும், ''அதன் (புதுயுகம்) உயர்ரக அச்சுப்பதிப்பும், அதன் கவர்ச்சி மிகு கலர் வடிவங்களும்தான்'' என்கிறார்.

ஆக, உள்ளடக்கம், அமைப்பு இரண்டுமே சிறப்பாக உள்ளன என்றுதான் அர்த்தமாகிறது. அப்பாராட்டுக்கள் போதும் நமக்கு.

''ஆக்கங்கள் தொடர்பான விமர்சனங்களுக்கு அப்பால் இம்மலர் தொடர்பாக வேறு சில கருத்துக்களும் கூறவேண்டியுள்ளது'' என்கிறார்

ஆக்கங்களுக்குப் புறத்தேயான கருத்துகள், அம்மலர் பற்றிய விமர்சனம் அல்லவென்றே கருதுகிறோம்.

ஈழத்தமிழர்களின் புலம்பெயர்வினால், உலகின் முக்கியமான நாடுகளில் பலவற்றிலும் இன்று கணிசமான அளவில் தமிழர்கள் வாழ்கின்றார்கள் என்ற வகையில் தமிழ், சர்வதேச எல்லைகளுக்குப் பரந்துள்ளது. எனவே சர்வதேச ரீதியில் தமிழ்க் கலை இலக்கியவாதிகளை ஒன்றிணைத்து, புலம்பெயர் கலை இலக்கியம் என்பதற்கும் அப்பால், சர்வதேச அளவில் தமிழ்க் கலை இலக்கியங்களை பேசப்படவைத்தலே எமது நோக்கமாகும். ஈழத்து எழுத்தாளர் தம் கலை இலக்கியம் முதன்மை பெறும் அதேவேளை, அதற்கும் அப்பால் தமிழக, மலேசிய, சிங்கபூர் என தமிழ் பேசும், எழுதும் அனைவரதும் படைப்புகளும் இடம்பெற வேண்டும் என்பதே எமது அவா. எனவே இதில் அரசியல் நோக்கம் எதுவும் இல்லை. நாம் வெளியிட்டுள்ள இரண்டு ஆண்டு மலர்களையும் ஆழ்ந்து படிப்பவர்களுக்கு இது புலனாகும்.

மேலும் இந்த ஆண்டு மலர் தொடர்பாக 160பக்கங்களே இலக்காக இருந்தது. எமது வளங்கள் அவ்வளவே. ஆங்கிலக் கலைக்களஞ்சியம் போன்று 28 தொகுதிகளை வெளியிடும்போது கூட இடம்பெறாதவர் பட்டியல் ஒன்று இருக்கவே செய்யும் என்பதும் ஓர் உண்மை.

உண்மையில், ஆக்கபூர்வமான விமரிசனங்கள் (தமிழின் முக்கியமான படைப்பாளிகள் சிலர் உட்பட) வேறு பலரிடமிருந்தும் எமக்குக் கிடைத்துள்ளன. அவை குறித்து நாம் கவனம் கொள்வோம்.

***இ. பத்மநாப ஐயர்***
***லண்டன்***

## ஏன் இந்த மௌனம் ஐயா?

வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் சிற்றூழியர் தரத்திலான வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு , கடந்த 1995 ஜூலையில் மாகாண கல்வியமைச்சின் செயலாளரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டு, 1996 ஜனவரி , பெப்ரவரியில் நேர்முகப் பரீட்சைநடாத்தப்பட்டது. நேர்முகப் பரீட்சையில் தெரிவானோரின் ஆவணங்கள் புகைப்படப் பிரதிகளை, மாவட்டக் கல்விப் பணிப்பாளரின் அத்தாட்சியுடன், மாகாண கல்வியமைச்சின் செயலாளர் '96 மே மாதத்தில் பெற்றுக் கொண்டார். இதனையடுத்து திறைசேரியின் அனுமதி பெற்றுநியமனக்கடிதங்கள் தபாலிடப்படவிருந்த நேரத்தில் சிரேஷ்ட அரசியல்வாதியொருவர் தலையிட்டு , நியமனம் வழங்குவதில் தடைகளை ஏற்படுத்தினார். இந்திய மனத்தடையை பலமுள்ளதாக ஆக்குவதற்காக, ஜனாதிபதியிடம் சென்று, ஜனாதிபதியைக் கொண்டு இடைநிறுத்தம் செய்துள்ளார். இதற்கான பின்னணி என்னவெனில், ஆளணிக்கேற்றாற்போல் ஆட்கள் தெரிவு செய்யப்பட்டு, நியமன முன்னோடிக் கடிதம் அனுப்பப்பட்டதன் பின்னர், அந்த அரசியல்வாதி அவரது ஆதரவாளர்களின் பெயர்களை சிபாரிசு செய்து செயலாளரிடம் நியமனம் வழங்குமாறு கேட்டு, அது எடுபடவில்லை என்பதால், வடகிழக்கில் உள்ள எவருக்குமே இந்நியமனம் வழங்கப்படலாகாது என்று முட்டுக்கட்டடகளை ஏற்படுத்தியுள்ளார். குறிப்பிட்ட ஒரு சிலரின் நன்மைக்காக பெரும்பான்மையோரின வயிற்றிலடித்திருப்பது அவ் அரசியல்வாதிக்கு சரியெனப்படுகிறதோ தெரியவில்லை. வடக்கு கிழக்கில் எந்தவொரு திட்டமும், தனது முதுகுக்குப் பின்னால் நடைபெறலாகாது என்று தம்பட்டம் அடிக்கும் அரசியல்வாதி, இந்த விடயத்தில் விட்டுக்கொடுக்கும் மனப்பாங்குடன் செயலாற்ற வேண்டும்.

மக்கள் பிரதிநிதிகளாகத் தங்களை அலங்கரித்துக்கொண்டிருக்கும் (வடகிழக்கு) எம்.பி.க்கள் இவ்விடயத்தில் மௌனிகளாகயிருப்பதுதான் புரியாத புதிராக உள்ளது.

***எம்.அனஸ்.***
***ஏறாவூர்***

## நான் தயார்-நீங்கள் தயாரா?

தங்கள் பத்திரிகையில் கடந்த பல மாதங்களாக, வாரங்களாக அபூநிதால், அம்ரிதா, எம்.பௌசர், நெற்றிக் கண்ணன் ஆகியோர் அதிபுத்திசாலித்தனமாக எழுதிவருவதை பொறுக்க முடியாது எழுதுகின்றேன்.

முதலில் என்னைப் பற்றி:

முகம்மது அலியார் முகம்மது மவ்சூக் ஆகிய நான் (சரிநிகர் இதழ்:123, பக்கம்:13, கலம்:5, பத்தி:3) முழுக்க முழுக்க ஒரு வியாபாரியின் மகன், ஈ.பி.ஆர்.எல்.எவ். இல் இறுதிவரையும் (1984) அடிமாடாக உழைத்தவன் ஐந்துசதம் லாபமுமின்றி.

மன்னார் முருங்கன் பள்ளிவாசலில் நடத்தப்பட்ட முதலாவது முஸ்லிம் விரோத துப்பாக்கி வேட்டின் பின், ஓரிரு தினங்களில் முஸ்லிம் அறிஞர்கள், புத்திஜீவிகள், வியாபாரிகள், இளைஞர்கள், பாமரர்கள், மாணவர்களின் ஆலோசனையின் பேரில் அன்று ஆரம்பிக்கப்பட்ட ''ஜிகாத்'' ''அல்பதாஃ'' இயக்கங்களின் அமைப்பாளர்.

தற்போது பரமசிவன் கழுத்தில் இருந்து கொண்டு கூத்தடிப்பவர்கள், அவர்களின் இடுப்பில் இருந்து கொண்டு வாலாட்டுபவர்கள் , தொப்பி மாற்றுபவர்கள், உயர்பாதுகாப்பு அதிகாரிகள், மந்திரி பெரு மக்கள், மார்பில் மோதிய வளர்த்த கடாக்கள் என ஒரு பட்டாளமே ஜிகாத், அல்பதாஃ உருவாக காரணமாக இருந்தது.

இம்மேதாவிகளின் வண்டவாளங்களை ''வெட்கத்தை விட்டு வேதனைகளுடன்'' என்ற தலைப்பில் அலியார் மவ்சூக், ஜிகாத், அல்பதாஃ அமைப்பாளர் என்ற சொந்தப் பெயரில் தண்டவாளம் ஏற்றலாம் என நினைக்கிறேன். இதனால் வரப்போகும் அனைத்து வம்பு - தும்புகள், வடகிழக்கு - வாதங்கள் எச்சரிக்கை - துப்பாக்கி மிரட்டல்களையும் நான் எதிர்கொள்கிறேன். உங்கள் சரி=நிகர் தயாரா?

***அலியார் மவ்சூக்***
***மாவனெல்லை.***

சரிநிகர் என்றும் தயாராயிருக்கிறது. எழுதுங்கள் மவ்சூக்

***- சரிநிகர்***

## இராஜாங்க அமைச்சர் எங்கே?

''இனப்பிரச்சினையால் உறையிடப்பட்ட நமது நாட்டில் இனங்களுக்கிடையே சமாதானத்தையும், நல் உறவையும் பேணுவோம் என்றும், அமைச்சுக்களின் எண்ணிக்கையை குறைப்போம் என்றும் கூறிய வண்ணம் ஆட்சி பீடத்தில் ஏறிய பொதுசன ஐக்கிய முன்னணி அரசு தாங்கள் அளித்த வாக்கையும் மீறி அமைச்சுக்களின் எண்ணிக்கையை கூட்டிய அதே வேளை ஒரு அமைச்சுக்கு இரண்டு பிரதியமைச்சுக்களையும் நியமித்து வித்தியாசமான சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

பௌத்த மதத்திற்கென்று தனியே பௌத்த சாசன அமைச்சை ஏற்படுத்தியுள்ள அரசு, தபால், தந்தி, தொலைத் தொடர்பு, தகவல் துறை அமைச்சுக்கு இரு பிரதியமைச்சுக்களை நியமித்த அரசு ஏன் முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சராக ஒருவரையும், இந்து சமய கலாசார பண்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சரையும் நியமிக்கவில்லை?

அரசின் பங்காளியான முஸ்லிம் காங்கிரசும், ஏனைய முஸ்லிம் அமைச்சர்களும், தமிழ் அமைச்சர்களும் இவ்விடயத்தில் வாய் மூடி மௌனம் காக்கின்றனர்?

இந்தத் தேசிய உரிமைப் பிரச்சினைய்யை தட்டிக்கேட்க வேண்டியது ஒவ்வொறு இலங்கைப் பிரசையினதும் கடமையாகும்.

ஆகவே மாண்பு மிகு ஜனாதிபதி அவர்கள் இவ்விடயத்தில் அக்கறை செலுத்தி இரு இராஜாங்க அமைச்சர்களையும் நியமிக்குமாறு மக்கள் சார்பில் பணிவாய் வேண்டுகிறேன்.''

***-ரிஷாத் ஷரீஃப்***
***சாய்ந்தமருது***

## தமிழிசை...

அறிவிக்கும் அமங்கல இசையாகவே பறைமேளம் பரிச்சயமாக்கப்பட்டிருக்கிறது நமக்கு.

அதை இசைப்பவர்கள் 'குடிமக்கள்' ஆக இழிவு செய்யப்பட்டனரேயொழிய கலைஞர்களாகப் போற்றப்படவில்லை. எமது சமூகத்தின் அவமானச் சின்னமாக இவ்விசைக் கருவி அழிந்து கொண்டிருக்கின்றது. இதற்கு துணையாக வேறு பல இசைக் கருவிகள் எமது பிரக்ஞைக்கு அப்பாற்பட்ட காலத்திலேயே அழிந்திருக்க வேண்டும். முயன்றால் அவற்றை மீண்டும் பெறலாம்.

பல நூற்றாண்டுகளுக்கு முன் கோவில்களின் முக்கிய தோற் கருவியாக இருந்தது பறைமேளம் தான், பிற்காலத்தில் தவில், நாதசுரத்துடன் சேர்ந்து அவ்விடத்தினைப் பிடித்துக்கொண்டது.

நாம் முயன்றால் பறை மேளத்தை மீண்டும் உயிர்ப்பிக்கலாம். ஆனால் சாதியின் பெயரால் அல்ல!

அதை ஒரு முக்கிய இசைக்கருவியாக, அதை இசைப்பவன் ஒரு கலைஞனின் கௌரவத்தை பெறும் வகையில், அதை உயர்ப்பிக்க வேண்டும்.

இவ்விடயம் தொடர்பாக, யாழ்ப்பாண, கிழக்கு தென்கிழக்கு பல்கலைக்கழகங்களின் நுண்கலைத் துறைகளுக்கு பாரிய கடமையுண்டு. கருத்திலெடுக்க வேண்டும்

## உண்மைக் குற்றவாளியைக் கண்டுபிடியுங்கள்!

தங்களது "தரம் உயர்த்தப்பட்ட செயலகத்தின் தரங்கெட்ட சேவை" என்ற செய்தியும் அதன் பின் கணக்காளர் கணக்கு உதவியாளர் ஆகியோரால் விடுக்கப்பட்ட மறுப்புச் செய்தியும் தொடர்பாக இதனை எழுதுகிறேன்.

1. முறைகேடான செயல்கள் நடைபெற்றுள்ளன என்பதை இருவரும் ஏற்றுக் கொள்கின்றனர்.

2. கணக்காளர் தனது பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் ஒரு தன்மையையே அவரின் மறுப்பு தெரிவிக்கின்றது. வங்கிக் கணக்குப் புத்தகங்கள் எல்லாவற்றிற்கும் அவரே நேரடிப் பொறுப்பாக இருந்தபோதும் பல குற்றச்சாட்டுக்களுக்கு பதில் அறிப்பதைத் தவிர்த்துள்ளார்.

3. கணக்காளரும் நிதி உதவியாளரும் தனது விருப்பின் பேரிலேயே மாற்றம் பெற்றனர். இச்சிக்கலிலிருந்து தம்மை விடுவிக்கவா?

4. இன்றுவரை இவ்விடயம் தொடர்பாக யார் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. என்பதும் உண்மை.

5. கணக்காளர் கூறியபடி அவர் [illegible]இல் மாற்றலாகவில்லை. [illegible]இல் தான் மாற்றலாகினார்.

இப்பிரச்சினையில் யார் உண்மையான குற்றவாளியோ அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டால் பிரச்சினை தீர்ந்துவிடும்

**நவநீதன்**
**ஆரையம்பதி**

## ஆய்வுக் கட்டுரை வேண்டும்

ஸ்ரீலங்கா இராணுவத்தின் கட்டமைபபு ஆளணி பங்கேற்பு வீதம், வளர்ச்சி நிலைகள் ஆளணியில் இன விகிதாசாரம், ஓரினத்தன்மை அரசியல் நோக்கிலான இராணுவம், இனவாத நடைமுறை என்பன பற்றிய தர்வுகளோடு வரலாற்று நியமனப்படி ஒரு இனம் இன்னோர் இனத்தை பாதுகாக்கவும் முடியாது. ஒரு இனம் இன்னோர் இனத்தில் தங்கி வாழவும் விரும்பாது என்பதையும் பௌத்த சிங்கள பேரினவாத இராணுவக் கட்டமைப்பு தமிழ் மக்களால் வெறுக்கப்படும் ஒன்றே என்பதையும் வரலாற்று ரீதியாகவும் நடைமுறையிலும் இருப்பதைக் கொண்டு வெளிப்படுத்தும் வகையில் படைத்துறை ஆய்வாளர் டி.சிவராம் அவர்களிடம் மேற்படி விடயங்கள் சம்பந்தமான ஆய்வுக் கட்டுரை ஒன்றை எதிர்பார்க்கிறேன்.

***ஞானம்***
***திருமலை***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Registered as a news paper in Srilanka

# சரிநிகர்

## கைப்புண்ணும் கண்ணாடியும்

ஜூலை 1997

ஜூலை மாதத்திற்கும் இலங்கையின் அரசியலுக்கும் உள்ள சம்பந்தம் சுவாரஸ்யமானது.

இலங்கையின் பல முக்கிய சம்பவங்கள் நடந்த மாதம் இந்த ஜூலை மாதம்.

1979 ஜூலை மாதம் தான் இலங்கையில் முதன்முதலாக பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

1983 ஜூலை மாதம் தான் இந்த நாட்டில் தமிழர்கள் ஒன்றாக வாழ முடியாது என்பதை தீவிரமாக சிந்திக்க வைத்த 'ஆடிக்கலவரம்' நடந்தது.

1987 ஜூலையில் தான் இன்று 10 வயதாகின்ற இலங்கை இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டது.

இப்படி எத்தனையோ... இவை ஞாபகத்துக்கு வருகிற சில.

கூடவே 1995 ஜூலையுடன் இந்த நாட்டில் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கபட்டுவிடும் என்று ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் சூழுரைத்ததும் ஞாபகத்துக்கு வரவே செல்கிறது.

வடக்கு கிழக்கு வாழ் மக்களின் வாழ்வில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்திய சம்பவங்கள் நடந்த இந்த ஜூலை மாதம் பற்றி சரிநிகர் இப்போது எழுதுவதற்கு காரணம் என்ன என்று வாசகர்கள் யோசிக்கலாம்.

குறிப்பாக எந்தக் காரணமும் இல்லை.

ஆனால் இலங்கை இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்டு பத்தாண்டுகாலம் ஆகிவிட்ட ஒரு சூழ்நிலையில், அதாவது இந்த ஜூலை 1997இல் ஜூலை மாதம் பற்றிய நினைவு வருவதை தவிர்க்க முடியவில்லை.

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எடுக்கப்பட்ட முயற்சிகளில் முக்கியமான, அயல் நாடான இந்தியாவின் தலைமீட்டுடன் நடந்த, இலங்கை இந்திய ஒப்பந்தம் எழுதப்பட்ட ஜூலை, வடக்கு கிழக்கு வாழ் தமிழ் முஸ்லிம் மக்களது வாழ்வில் ஒரு மிக முக்கியமான ஒரு மாதமாகும். அந்த ஒப்பந்தம் எழுதப்பட்டு இன்று பத்தாண்டுகள் கடந்துவிட்டன.

ஆனால், அம்மக்களது வாழ்வு நிலையில் ஒரு பத்து அங்குல முன்னேற்றமும் ஏற்படவில்லை.பதிலாக, பல பத்தாண்டுகள் பின்னோக்கித் தள்ளப்பட்டுள்ள ஒரு சமூகங்களாக அவை இன்று அல்லோலகல்லோலபபட்டுக்கொண்டிருக்கின்றன.

இந்த ஒப்பந்தம்தான் ஆயுதம் ஏந்திய தமிழ்ப் போராளிகளிடையே பாரிய அரசியல் பிளவை ஏற்படுத்தியது.

இந்தியப் படையை சமாதானப்படை என்றபெயருடன்இலங்கைக்கு இறக்குவித்தது.

மாகாண சபையையும் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தையும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைத்து இந்திய மேலாதிக்கத்திற்கு வழிவகுத்து விட்டதாக தென்னிலங்கையில் கிளர்ச்சிகள் உருவாக காரணமாக அமைந்தது.

வடக்கு கிழக்கு மக்களின் அரசியல் உரிமைப் போராட்டத்தில் சமரசத்தை ஏற்படுத்த முனைந்த இவ்வொப்பந்தம் அம்முயற்சியில் படுதோல்வி அடைந்து விட்டது. என்பதற்கு இன்றைய நிகழ்வுகளே சாட்சியமளிக்கப் போதுமானவை.

இனப்பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதற்காக தயாரிக்கப்பட்டிருப்பதாக கூறப்படும் 'சமாதானப்பொதி' வெளியிடப்படப்போவதாக கூறப்பட்டுக்கொண்டிருக்கும் இன்றைய நிலையில் தோல்வியுற்ற இந்த ஒப்பந்தம் பற்றிய நினைவுகளை மீட்டுக் கொள்வது அவசியமாகிறது..

உரிமைப் போராட்டத்தை பத்தாண்டுகளுக்கு பாழடிக்கச் செய்த பெருமை பெற்ற இவ்வொப்பந்தம் பற்றிய விழிப்புணர்வு, இன்றைய தீர்வுப் பொதியை எதிர்கொள்ள அவசியமானதாகும்.

இவ்வொப்பந்தத்தை அன்று பல இடதுசாரி, முற்போக்கு எண்ணம் கொண்ட தமிழ் சிங்கள சக்திகளும் வரவேற்கவே செய்தனர்.

அது இதுவரை காலமும் இல்லாத சில விடயங்களை சட்டபூர்வமாக்குகிறது என்று அவர்கள் வாதிட்டனர். அவர்கள் தமிழ் மொழி உத்தியோகபூர்வ மொழியாக்கப்பட்டது, வடக்கு கிழக்கு தமிழ் மக்களதும் பாரம்பரிய பூமியாக ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பன இதன் சிறப்புக்கள் என்று கருதினர்.

இவர்களது நம்பிக்கையும் நன்னோக்கும் மதிக்கப்படவேண்டியவை என்பதில் சந்தேகமில்லை.

ஆனால், இவை யாவும் வெறும் வாசகங்களாகவே அமைந்தன. 13வது திருத்தச்சட்டம் வழங்கிய பல அதிகாரங்கள் பறிக்கப்பட்டன. ஆயுதங்களை கீழே போடுவதை வலியுறுத்தி ஒரு பாரிய யுத்தத்தையே நடாத்திய இந்தியா ஒப்பந்த மூலம் வழங்கப்பட்ட மாகாகணசபைகட்கு வழங்கப்பட்ட சட்ட அதிகாரங்கள் அமுல்படுத்தப்படுவதை வலியுறுத்தவில்லை.ஏன் அவற்றில் பல பறிக்கப்பட்டபோதும் மௌனமாகவே இருந்தது.

ஆக, இவ்வொப்பந்தம், இந்த மண்ணில் பிரச்சினையை தீர்ப்பதில் எந்த விதமான பயனுள்ள பங்களிப்பையும் வழங்கியதாக கொள்ளமுடியாது.

இதில், பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களுக்கு நியாயம் கிடைத்ததை விட சம்பந்தப்பட்ட இரு நாட்டு அரசாங்கங்களுக்கும் கிடைத்த வாய்ப்புக்களே அதிகம்.

தமிழ் மக்களின் உரிமைக்கான ஆயுதம் ஏந்திய பெரும்பாலான விடுதலை இயக்கங்களை, கடந்த பத்தாண்டுகளாக செயலற்றதாக்கிய 'அரசியல் பணியில்' இந்த ஒப்பந்தம் வெற்றி பெற்றிருக்கிறது.

நாம் அவர்கள் ஆயுதங்களை கீழே போட்டதை கூறவில்லை. அரசியலையே கைவிட்டதை அல்லது அதை ஒப்பந்தகாரருக்கு வசதியாக அதை மாற்றிக் கொண்டதையே சொல்கிறோம்.

இந்த ஜூலை 1997 உடன் பத்தாண்டுகளை கடந்தும் நடைமுறையிலிருக்கும் இவ்வாப்பந்தம், அடுத்துவரப்போகும் 'தீர்வுப்பொதியால்' இடம்பெயர்க்கப்படப் போகிறது.

வடக்கு கிழக்குவாழ் தமிழ் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளுக்கு என்ன நடக்கும் என்பதை இந்த அனுபவங்களுடன் இணைத்துப் பார்ப்பதன் மூலமே, அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்க முடியும்.

தமிழ் முஸ்லிம் அரசியல் கட்சிகள் இதுபற்றி சிந்திக்க வேண்டும்.

நாட்டிற்கு சமாதானத்தை யுத்தத்தின் மூலம் வழங்கிவிடலாம் என்று விடாப்பிடியாக சாதிக்கும் அரசாங்கத்திற்கு இதை விளங்கிக் கொள்வது அதன் அரசியல் இருப்புக்கு ஆபத்தாக இருக்கலாம்.

ஆனால் தமிழ் முஸ்லிம் கட்சிகளுக்கு அப்படியல்ல. அப்படி விளங்கிக்கொள்ள மறுப்பதே அவர்களுக்கு ஆபத்து.

அது, அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்துவதாக கூறும் அனைத்து மக்களுக்குமான ஆபத்து.

கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை.

தேவை மருந்தைத் தேடுவது தான்!

– இதைப் புரிந்து கொண்டாலே போதும்.

## வாதத்துக்கு மருந்துண்டு! பிடிவாதத்துக்கு?

வந்தாரை வாழவைக்கும்வவுனியா என்ற புகழ் பெற்று கேந்திர முக்கியத் துவம்மிக்க நிலையமாக வவுனியா பகுதி விளங்கியது. ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையையடுத்து சிவில் அந்தஸ்திலான முக்கியத்துவத்தை இழந்து இன்று அகதிகள் நகரமாக மாறிவிட்டுள்ளது அது.

எண்பதுகளில்வடபகுதியில்நிலவிய போர் சூழல் காரணமாக லட்சக்கணக் கான மக்கள் யாழ் குடாநாட்டிலிருந்து வன்னிப்பகுதியிலிருந்தும்இடம்பெயர்ந்து தமிழகக் கரைகளில் தஞ்சமடைந் தார்கள். இவ்வாறு இடம் பெயர்ந்து சென்று இலங்கை-இந்திய ஜே.ஆர்-ராஜிவ் காந்தி ஒப்பந்தத்தையடுத்து பலரும் தாய் நாட்டுக்குத் திரும்பி வந்தார்கள்.

அவ்வாறுவந்தவர்களில் பலர் முல்லைத்தீவு யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தினால் அரசாங்கத்தின் அனுசரணையோடு ஆசிகுளம்-சிதம்பர புரத்திலும் செட்டிக்குளம்-அடம்பன் குளத்திலும்இரண்டு நலன்புரி நிலையங் களில்தங்க வைக்கப்பட்டுள்ளார்கள்.

இதனையடுத்து கடந்த 1995ஆம் ஆண்டு யாழ்குடாநாட்டில்மேற்கொள்ள ப்பட்ட முன்னோக்கிப் பாய்தல் சூரியக்கதிர் போன்ற பாரிய இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து வன்னிப் பகுதியில் தஞ்சமடைந்தவர்களில் 11ஆயிரம்பேர் வவுனியா நகரப்பகுதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளார்கள்.

வன்னியில் தஞ்சமடைந்திருந்த வேளையில்அங்கேயும்அடுக்கடுக்காக மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக் கைகள் தாக்குதல்கள் காரணமாக பாதுகாப்பு தேடி தமது சுயவிருப்பத்தின் பேரில்நாட்டின்தென்பகுதிகளில்சென்று தமது சொந்தக்காலில் குடியிருப்பதற் காக வவுனியாவுக்குள் இவர்கள் வந்து சேர்ந்தார்கள்.

ஆயினும் பாதுகாப்பு காரணங்க ளைக்காட்டி இவர்கள் நாட்டின் தென்பகு திகளுக்குச் செல்வதைத் தடை செய்துள்ள இலங்கை அரசாங்கம் வவுனியா முகாம்களிலேயே இவர்க ளைத்தங்க வைத்துள்ளது.

யாழ்குடா நாட்டில் உள்ள சொந்த இடங்களுக்குச் செல்லலாம் அல்லது வன்னிப் பகுதிக்கே திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்ட போதிலும் 11 ஆயிரம் பேரும் தென் பகுதி செல்ல விரும்பி வவுனியா முகாம்களிலேயே தங்கியுள் ளார்கள். பலதரப்பட்ட நெருக்கடிகளை அதிகாரிகள் மூலமாக பாதுகாப்பு பகுதியினர் இவர்களுக்குக் கொடுத்து வருகின்ற போதிலும் இம்மக்கள் [illegible] முடிவை இன்னும் மாற்றிக் கொண்ட தாகத் தெரியவில்லை.

ஜயசிக்குறு இராணுவ நடவடிக் கையை இராணுவத்தினர் வன்னிப் பகுதியில் மேற்கொண்டதையடுத்து நெடுங்கேணிப் பகுதிகளில் இராணுவ த்தினன் பிடியில் சிக்கிய சுமார் ஆயிரம் பேர் வவுனியாவிற்கு இராணுவத்தால் கொண்டுவரப்பட்டுள்ளார்கள்.

இவர்களில் 464 பேர் வவுனியா பூந்தோட்டத்தில் உள்ள கல்வியியல் கல்லூரி வளவில் அமைக்கப்பட்டுள்ள 4வது முகாம் என அழைக்கப்படுகின்ற "வெளிர்குளம்: அ.த.க.பாடசாலையை நலன்புரி நிலையம்" என்ற பெயரில் உள்ள பகுதியில் தங்கவைக்க ப்பட்டுள்ளனர்.

ஏனைய 512 பேர் வவுனியா குட்செட் வீதியில் உள்ள "கோழிக்கூட்டு" முகாமில் தங்கவைத்துப் "பராமரிக்கப் படுகிறார்கள்."

இவர்கள், தங்களது சொந்த இடங்களுக்கு எப்போது திரும்பிச்செல்ல முடியும் என்பது குறித்து ஏதுவுமே தெரியாதவர்களாக திறந்தவெளிச் சிறையில் அகப்பட்டவர்களைப்போன்ற நிலையிலேயே வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இதைத்தவிர நாலாவது வகையின ரான இடம்பெயர்ந்தவர்களும்வவுனியா வில் இருக்கின்றார்கள். ஜயசிக்குறு இராணுவத்தினரை ஊடறுத்துப்புகுந்து தாண்டிக்குளத்தில் வைத்து புலிகள் தாக்கியபோது தாண்டிக்குளத்தையும் அதனைச் சூழ்ந்த பிரதேசங்களிலும் இருந்து இடம் பெயர்ந்தவர்களே இவர்களாவர்.

தாண்டிக்குளம்இராணுவமுகாம்கள் இராணுவநிலைகளுக்கு அருகில்தமது சொந்த வீடுகளில் குடியிருந்த சுமார் 6800 பேர் தாண்டிக்குளம் மீதான தாக்குதலின்போது இடம் பெயர நேரிட்டது.

இவர்களில் சுமார் 300 பேர் இன்னும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் முகாம்களில் தங்[illegible]ள்ளார்கள். இவர்களை விட இ[illegible]ம் ஒரு தொகையினர் தம் [illegible]னர் நண்பர்களது வீடுகளில் [illegible]சமடைந்துள்ளனர். இவர்களும் [illegible]து சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்வதற்கு எப்போது வாய்ப்பு கிடைக்கு என தெரியாதவர்களாக அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கி ன்றனர்.

இந்நிலையில் ஜயசிக்குறு நடவடிக்கையின் மூலம் கைப்பற்றப்பட்ட பகுதிகளைத் தக்கவைப்பதற்காக போதிய படையணி இல்லாத நிலையில் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாத தன்மையில் இராணுவம் தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

ஆயினும் புதிதாகப் பயிற்சி பெற்ற பொலிசாரையும், வான் படையினரையும் கடற்படை யினரையும் கொண்டு தரைவழிப்பாதையைத் திறக்கும் முயற்சியை விடாமல் மேற்கொள்ள வேண்டும்என இலங்கையின் பாதுகாப்பு அமைச்சு பிடிவாதமாக முனைந்து நிற்கின்றது.

விடுதலைப்புலிகளின் தாயகத்தில் நுளைகிறோம் எனபதை இராணுவம் எண்ணிப்பார்க்கவோ மீளாய்வு செய்து நிதானிக்கவோ தயாராக இல்லை.

முன்வைத்த காலை எக்காரணங் கொண்டும் பின் வைக்கப்போவதில்லை என்ற பிடிவாதத்துடன் இராணுவ முனைப்புகளை முன்னெடுக்கும் கைங்கரியங்கள் இடம் பெற்று வருகின்றன.

வாதத்துக்கு மருந்துண்டு. பிடிவாத த்துக்கு இன்னமும் மருந்து கண்டுபிடிக்க ப்படவில்லை. ஆழமறியாமல் நீரில் செல்ல முயற்சிப்பதும் சேற்றுநிலத் தினை அலட்சியம் செய்வதும் நன்மையைத்தராது. வருங்கால வன்னி நிலை என்னென்ன அவல நிலைகளை காட்டப்போகிறதோ தெரியவில்லை.

– தம்பு திருநாவுக்கரசு

## 'மண் கொள்ளை'!

மண்முனைப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குள் உள்பட்ட ஆரையம்பதி தாளங்குடா கடற்ரை ஓரமாக அமைந்த புனித வேளாங் கண்ணி மாதா தேவாலயம் அமைந்த பகுதியிலும் மறுபக்கத்திலும் கடற்கரை அண்டிய பிரதேசத்திலும் சட்டவிரோதமாக உழவு இயந்திரம் மூலம் மணல் அகழ்ந்து தினமும் ஏற்றப்படுவதால் தேவாலயம் செல்லும் வீதி பல இடங்களில் துண் டிக்கப்பட்டுள்ளதுடன் தேவாலயம் அமைந்துள்ள வளவும் காளிகோ வில் அமைந்த மேல்பகுதியும் பள்ளங்கள் நிறைந்ததாகவும் மாறியுள்ளது. இவ்விடயம் தொடர் பாக பல அமைப்புக்களின் கவனத் துக்கும் மட்டக்களப்பு அரச அதிப ருக்கும் கொண்டுவரும் விதத்தில் கடிதங்கள் எழுதப்பட்ட போதும் இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டதாக தெரியவில்லை. பிரபல்யமான அன்னை வேளாங் கண்ணி தேவாலயவளவும், காளி அம்மன் ஆலய பிரதேசமும் இவ் வாறு சட்டவிரோதமான முறையில் அழிக்கப்படுவதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க யாருமில் லையா என்று ஆதங்கத்துடன் கேட்கிறார் ஆரையம்பதி வாசியான நல்லதம்பி யோகநாதன் அவர்கள். சம்பந்தப்பட்டவர்கள் இதைக் கவனிப்பார்களா?

## பூலான்...

I→

விருந்தினராக கலந்து கொண்டதாகவும், சிறிலங்காப் படையினரை கண்டித்து அவர்களை எதிர்த்து போராட அறைகூவல் விடுத்ததாகவும் அரசு எதையும் தானாக தந்துவிடாது நாம் தான் போராடிப் பெறவேண்டும் என்று தெரிவித்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

காரணமின்றி வதைத்து அட்டூழியங்கள் புரியும் சிறிலங்காப் படையினரை கண்டிப்பது மட்டுமன்றி அவர்களை நாமெல்லோரும் எதிர்த்து போராட வேண்டுமெனவும் அவர் அறைகூவல் விடுத்ததாகவும் அத் தகவல்கள் கூறுகின்றன.

### காலி லீலை

(கவிதைத் தொகுதி)

-மு. பொன்னம்பலம்-

வெளியீடும் விமர்சனமும்

*காலம்:–*

97.07.20 ஞாயிறு 4.30மணி

*இடம்:–*

இராமகிருஷ்ணமிசன்

(சிறியமண்டபம்)

வெள்ளவத்தை

***அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்***

### மாற்று கருத்தரங்கு-5

'சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்'

*காலம்:–*

97.07.19 ஞாயிறு 4.30மணி

*இடம்:–*

இராமகிருஷ்ணமிசன்

(சிறியமண்டபம்)

வெள்ளவத்தை

*சிறுவர் துஸ்பிரயோகம் பற்றிய குறுந்திரைப்படமொன்றும் காண்பிக்கப்படும்*

***அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்***

வெளியிடுபவர் : ச.பாலகிருஷ்ணன். 18/2. அ[illegible] [illegible] நவமக அச்சகம். 334. காலி வீதி. இரத்மலானை.
1997.07.14

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்